Registered as a News Paper in Sri Lanka දිනමුරසු වාරමලර්

# தினமுரசு வாரமலர்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

ரூபா 30.00
பெப்ரவரி 25-மார்ச் 02, 2016
பக்கம்24
முரசு 1158

## அரைக்கொத்தரிசி அன்னதானம் விடிய விடிய மேளதாளம்



சிந்தியுங்கள்!..
மக்களே
எமக்குள் சில
நியாயங்கள்
வேண்டும்
அதுவே
எம் இனத்தை
வாழ வைக்கும்!

## அலை அடிக்கும்போதே கடலாட வேண்டும்

## ௐ சூரியனைக் கும்பிடுங்கள் வாழ்வு பிறக்கும்

சூரிய பகவானை தினமும் வணங்கினால், உலகத்தின் சகல சௌபாக்கியங்கள் அனைத்தையும் பெறமுடியும். மனிதர்களின் வாழ்வில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்கும் ஆற்றல் சூரிய வழிபாட்டுக்கு மட்டுமே உள்ளது.

சூரிய பகவானுக்கு சிறப்பு ஹோமங்கள், அர்ச்சனை, ஆராதனைகள் செய்து வழிபட்டால் மிக உயர்ந்த பலன்கள் நம்மை தேடி வரும். பதவியும், பணமும் வேண்டும் என்று ஆசைப்படுபவர்கள், சூரிய பகவானை உரிய முறையில் வழிபட்டால் பலன் கிடைக்கும். சூரியனை வழிபட ஞாயிற்றுக்கிழமை உகந்த நாளாகும். உத்திரம், உத்திராடம், கிருத்திகை நட்சத்திரங்கள் வரும் நாட்களிலும் சூரிய வழிபாடு செய்யலாம். சூரிய ஹோரை மற்றும் வளர்பிறை சப்தமி திதியில் செய்யப்படும் சூரிய வழிபாடு இரட்டிப்பு பலன்களைத் தரும்.

சிவப்பு நிற வஸ்திரம் மற்றும் செந்தாமரைப் பூ சாத்தி சூரியனை வழிபடலாம். இது சூரிய தோஷத்தை விலகச் செய்யும். யார் ஒருவர் சூரியனை மனம் உருகி, மனம் ஒன்றி வழிபாடு செய்கிறாரோ, அவருக்கு வெற்றி, புகழ், உடல் நலம், ஆளுமைத்திறன், செல்வாக்கு, மங்களம் போன்ற எல்லாம் ஒருங்கே வந்துசேரும். தினமும் காலையில் எழுந்ததும் சூரியனைப் பார்த்து, 'ஓம் சூர்யாய நமக' என்று சொல்லி வணங்கவேண்டும். இந்த பழக்கம் நிச்சயமாக உங்களை வாழ்வின் சுபஉச்சத்துக்கு அழைத்துச் செல்லும்.

## தேடுங்கள்...

'கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்' என்னும் ஆண்டவர் இயேசுவின் அழைப்பில், தேடுங்கள் என்னும் சொல்லை மட்டும் இன்றைய சிந்தனைக்காக எடுத்துக்கொள்வோம். 'தேடுங்கள், கண்டடைவீர்கள்' என்கிறார் ஆண்டவர். தமது ஆட்டைத் தொலைத்த ஆயர், பிற ஆடுகளை விட்டுவிட்டு, தொலைந்துபோன ஒரே ஒரு ஆட்டைத் தேடி அலைந்தார், கண்டுபிடித்தார். தனது ஒரு நாணயத்தைத் தொலைத்த பெண் மற்ற வேலைகள் அனைத்தையும் விட்டுவிட்டு, தொலைந்த நாணயத்தைத் தேடிக் கண்டுபிடித்தார்.

விடாமுயற்சியோடு தேடுபவர்கள் தாங்கள் தேடுவதை நிச்சயம் கண்டடைவார்கள் என்பது ஆண்டவர் இயேசுவின் அமுதமொழி. நாம் எதைத் தேடுகிறோம்? எப்படித் தேடுகிறோம்? பொன்னை, பொருளை, இவ்வுலக இன்பங்களைத் தேடாமல், இறையாட்சியை, இறையாட்சியின் இலக்குகளான நீதி, அன்பு, சமத்துவத்தைத் தேடுகிறோமா? நிலைவாழ்வின் ஊற்றான இறைவனைத் தேடுகிறோமா? இத்தவக்காலத்தில் இறைவனைத் தேட முன்வருவோம். இரண்டாவதாக, தேடுவோர் அனைத்தையும் விட்டுவிட்டு தேடுவதில் மட்டுமே கவனம் கொள்ளவேண்டும். எனவே, இத்தவக்காலத்தில் தொலைக்காட்சி, உலக இன்பங்கள் இவற்றில் அதிக நாட்டம் கொள்ளாமல், இறைவனுக்குரியவற்றில் மட்டுமே கவனம்கொண்டால், நம் தேடுதல் வெற்றியில் முடியும்.

## தலைவர்களின் பொறுப்புகள்!

அல்லாஹ்வுடனான ஒப்பந்தத்தையும், உங்களில் சிலர் சிலருடனான ஒப்பந்தத்தையும் நிறைவேற்றுங்கள் என்பது இவ்வசனத்தின் கருத்தாகும்.

"ஒப்பந்தங்களை முழுமையாக நிறைவேற்றுங்கள்! நிச்சயமாக ஒப்பந்தம் (அல்லாஹ்விடம்) வினவப்படக்கூடியதாக உள்ளது" என திருக்குர் ஆனின் பனீ இஸ்ராயில் அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

(அல் குர் ஆன் 17 - 34)

வாக்குறுதிக்குமாறு செய்வது நயவஞ்சகனின் அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. நபியவர்கள் நவின்றதாக அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள். நயவஞ்சகனின் அடையாளம் ஒன்றாகும். அவன் பேசினால் பொய்யுரைப்பான் வாக்குறுதி வழங்கினால் மாறு செய்வான். அவனை நம்பினார். மோசடி செயிலான். (புகாரி - முஸ்லிம்)

**முஹம்மது ஹஸனி, கல்முனை -07**

# தேன் கிண்ணம்

## காதலி நீ என்னைக் காதலி



எங்கள்
உளத்தூய்மை
இறையாகும்;
உறவன்பு தாயாகும்;
இருக்கும்வரை – இருந்து
இறக்கும் வரை
இதயத்தை – இதயம்
இறுகப் பற்றிக்
காதலிப்போம்!

இறந்த பின்னும்...
மறு பிறப்பு – இதை
யார் கண்டது?
மறதியிருக்கும்
மனிதனுக்கேது
மறுபிறப்பு?

நாமிருவரும்
முற்பிறப்பு எடுத்தோமோ?
அடுத்தும் பிறப்பதற்கு!
அற்பாசை எமக்கெதற்கு?
நட்பாசை அன்போடு
இறக்கும்வரை – இனிய
இதயத்தைக் காதலிப்போம்.

பாண்டியூர்
பொன்.நவநீதன்

## மௌனம் ஏனோ மலர்களே...!



மல்லிகை மலரே - என்
மன்னவனைக் காணாது - எனது
மனமும் தினமும் வருந்துதடி - என
சொல்லிவிடுவாயோ - என்
மனக்கள்வனைக் கண்டு.
ரோஜா மலரே - என் ராஜாவுக்கு
ரோசமோ கொஞ்சம் அதிகமடி.
ராசாத்தி காத்திருக்காள் - இங்கே என்று
சொல்லிவிடுவாயோ நீயும்
அதை அங்கே சென்று.
ஆவாரம் பூவே ஆண் அழகன் - அவனுக்கு
ஆத்திரம்தான் என்னிடம் ஏனடி - என்று
சொல்லிவிடுவாயோ நீயும் - அதை
நானும் இப்படி சொன்னபடி.
செவ்வந்தி பூவே - அவனும்
செவ்வந்தி சாயும் நேரம் - என்னை
சந்திக்க வேண்டும் என்றான் - அந்தச்
சங்கதி என்னவென்று - நீயும்
கேட்டுத்தான் சொல்லிவிடுவாயோ - உன்
செவ்விதழ் திறந்து.
வாடா மல்லிகையே- என்னைத்
தேடாமல் அவனும் இருப்பதால்
வாடிய மலராய் நானும் - இங்கே
சோம்பி இருக்கேன் என்று - நீயும்
சொல்லிவிடுவாயோ அங்கே சென்று.
புளியம் பூச்சேலைகட்டி - ஒரு
புன்னகை தருவாயோ- என்றவனுக்கு
புளித்துப் போனதோ புளியம் பூவே
என் காதலும் இப்போது அவனுக்கு.
அல்லிப் பூவே அவனே - என்னை
அள்ளிக் கொள்வேன் - என்று
சொல்லிவைத்தவன் - அன்று
சொல்லாமல் எதையுமே என்னிடம் பேசாமல்
இருப்பதும் ஏனோ இன்று.
இத்தனையும் சொல்லியும் - இன்னும்
மௌனம் ஏனோ மலர்களே - என்
மன்னவனின் காதலும் அவனிடம்
மௌனம் கொண்டதாலோ.



இளம்பிறை யோகன்,
புத்தளம்.

## அலுத்துப் போகாத உன் முகம்



எத்தனை முறை
பார்த்தாலும்
அலுத்துப் போகாத
உன் அழகுகள்

என் எழுத்துக்கள் அனைத்திலும்
உன் முகம் - உன் அழகுகள்

உன் கூந்தல் வாசனையில்
குடியிருந்து வாசனை தந்த
மல்லிகைப் பூக்கள்
எனக்கே
மறந்து போகும் என் பிறந்தநாளை

இருபதும் நிரம்பாத
பருவத்தில்
விரல்களையே
மட்டிவிடும்
வீணையாய்!

கே.வாலேந்திரன்


தினமுரசு பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் வரவிரும்புவர்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி.

**தினமுரசு வாரமலர்,**
**மாநகரசபை கட்டடம்,**
**3 ஆம் மாடி,**
**கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தினமுரசு வாரமலரில் உங்கள் விளம்பரங்களை குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்கத் தொடர்பு கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0214503262,**
**0774150799**





**பெப்ரவரி - 18**

**மனிதர்கள் தங்கள் கடமைகளை மறந்துவிடுகிறார்கள். ஆனால் உரிமைகளை மட்டும் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள்.**

**இந்திராகாந்தி**

# தமிழ் அரசியல் கைதிகள் மீண்டும் போராட்டத்தில்



விசாரணைகளின்றி சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இன்று முதல் மீண்டும் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள இரண்டு கைதிகளும் மகசீன் சிறைச்சாலையிலுள்ள இரண்டு கைதிகள் உட்பட நான்கு பேர் இவ்வாறு உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.இந்த விடயம் தொடர்பாக அரசியல் கைதிகள் கடிதம் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இந்த போராட்டத்தில் தமக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு எந்தவித விசாரணைகளுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் 15 பேர் மாத்திரமே நீதவான் நீதிமன்றத்திற்கு சென்று வருவதாகவும் இதன்போது தமது பிரச்சினைகள் தொடர்பாக நீதவான் நீதிமன்ற நீதிபதியிடம் வினவும்போது தமது பிரச்சினைகள் தொடர்பாக முடிவு எடுக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என நீதிபதி தெரிவித்தார். எனவேதான் வேறு வழியின்றி நாம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர். இந்த போரட்டத்தில் தமக்கு சாதகமான முடிவுகள் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் எனவும் தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

## அரச பஸ்களில் டச் கார்ட் முறைமை அறிமுகம்

அரச பஸ்களில் டச் கார்ட் முறைமை அறிமுகம் செய்யப்பட உள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. டச் கார்ட் முறைமையின்மூலம் பயணங்களை மேற்கொள்ளும்போது



பயணிகளின் கட்டணம் அந்த நேரத்திலேயே இலங்கைப் போக்குவரத்து சபையின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் நிஹால் சோமவீர தெரிவித்துள்ளார். இந்த திட்டமானது இலங்கை போக்கு வரத்துச் சபையைப் போன்றே பயணி களுக்கும் நலன்களை வழங்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அநேக நேரங்களில் நடத்துனர்களினால் மிகுதிப் பணத்தை துல்லியமாக வழங்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும், டச் கார்ட்மூலம் மிகத் துல்லியமான தொகையினை பயணிகள் செலுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


## ஆவா குழு மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம், காயமடைந்தவர் தப்பிச் செல்ல மூவர் கைது



இணுவிலில் வாள் கத்திகளுடன் நடமாடிய ஆவா குழுவினர்மீது சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்ததுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது. இணுவில் காரைக்கால் சிவன் கோயிலுக்கு அண்மையில் பொதுமக்களை அச்சுறுத்தும் விதத்தில் முகத்தை மறைக்கும் தலைக்கவசங்களுடன் மோட்டார் சைக்கிளிகளில் வாள், கத்தி போன்ற ஆயுதங்களுடன் ஆவா குழுவினர் நடமாடித் திரிந்துள்ளனர்.

இதனை அவதானித்த சிலர் சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் இவர்களைக் கைது செய்ய முனைந்தனர். பொலிஸாரைக் கண்டதும் குழுவினர் தப்பிச்செல்ல முற்பட்டனர். அவர்களை விரட்டிச் சென்ற பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஒருவர் காயமடையவே பொலிஸார் மூவரைக் மடக்கிப் பிடித்துக் கைதுசெய்தனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த நபர் தப்பிச் சென்றுவிட்டார் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். பொலிஸாரால் இவர்களிடமிருந்த ஆயுதங்களும் மீட்கப் பட்டன. கடந்த ஆண்டு (2014) ஆவா குழுவைச் சேர்ந்த சிலர் கைது செய்யப் பட்டு அதன்பின் எந்த அசம்பாவிதங்களும் இடம்பெறாதிருந்த நிலையில் மீண்டும் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

## வரலாற்று ஆதாரங்களை மாற்றவேண்டாம் அஸ்ரப்பின் மகன் கோரிக்கை



வரலாற்று ஆதாரங்களை மாற்றியமைக்க வேண்டாம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர் அஸ்ரப்பின் மகன் கோரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பில் அமான் அஸ்ரப், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பசீர் சேகுதாவூத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில், தமது தந்தையின் கொள்கைப்படி எந்தவகையிலும் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் முஸ்லிம் மாகாணம் அமைய வேண்டும் என்பதாகும் என்று அமான் குறிப்பிட்டுள்ளார். அரசியலின் ஆரம்பகாலத்தில் அஸ்ரப், தமிழர்களுக்கு தனியான மாநிலம் வழங்கப்படுமானால் முஸ்லிம்களுக்கும் அதுபோன்று வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டிருந்தார்.

எனினும் பின்னர் அந்த கொள்கையில் மாற்றத்தை அவர் ஏற்படுத்தினார். மர்ஹூம் அஸ்ரப், துறைமுக அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டபின்னர் தமது முதல் உரையில் தேசிய அரசியலுக்குள் முஸ்லிம்களின் அபிலாசைகளை வென்றெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். இதன் அடிப்படையிலேயே இவர் எப்போதும் பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் என்ற பதத்தை முன்னிலைப்படுத்தினார். இதன் அடிப்படையிலேயே அவர் தேசிய ஐக்கிய முன்னணியையும் உருவாக்கினார். இந்தநிலையில் பசீர் சேகு தாவூத் அரசியல் முதிர்ச்சி பெறாதவர் என்ற காரணத்துக்காகவே அவரை காங்கிரஸின் அரசியல் உயர்பீடத்துக்கு அஸ்ரப் நியமிக்கவில்லை என்றும் அமான் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை பிரிக்கப்படுகின்ற நாடு எப்போதும் தோற்கடிக்கப்பட்ட நாடாகவே இருக்கும் என்றும் அமான் சுட்டிக்காட்டிள்ளார்.

## ரணில் மற்றும் மஹிந்தவுக்கு கடுமையான ஆலோசனை வழங்கிய கலபொட ஞானிஸ்வர தேரர்

பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு, கலபொட ஞானிஸ்வர தேரரால் கடுமையாக அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த இருதினங்களாக கொழும்பு, ஹுனுப்பிட்டிய கங்காராம விகாரையில் நவம் வருடாந்த ஊர்வலம் நடைபெற்றது. இதன்போது பிரதமர் மற்றும் மஹிந்த ராஜபக்ஸ ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது கங்காராம விகாரையின் விகாராதிபதி கலபொட ஞானிஸ்வரதேரர், இருவருக்கும் பல மணிநேரம் போதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

கோபதாபங்களைக் குறைத்துக் கொள்ளுமாறும் பிரதமருக்கும், மஹிந்தவிற்கும் அறிவுரை தேரரால் வழங்கப்பட்டுள்ளதாகவும், தனது கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும்படியும் தேரரால் கோரப்பட்டுள்ளது. பிரதமர் மற்றும் மஹிந்த ஆகிய இருவரும் கோபங்களை மறந்து நண்பர்களான செயற்படுவதுடன், வரலாற்றில் பேசப்படவேண்டியவர்களான செயற்படவேண்டும் எனவும் தேரர் ஆலோசனை வழங்கினார்.

## புங்குடுதீவில் தொடங்கி வவுனியாவில் நிகழ்கிறதா?

### ஹரிஸ்ணவியின் கொலையைக் கண்டித்து கிளிநொச்சியில் பேரணி

கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் மாணவி ஹரிஸ்ணவியின் கொலையைக் கண்டித்து கண்டனப்பேரணி இடம்பெற்றுள்ளது. பின்னர் மாவட்ட அரசாங்க அதிபரூடாக ஜனாதிபதிக்கு மகஜரும் வழங்கிவைக்கப்பட்டது. அத்தோடு வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் ஆகியோருக்கும் மகஜர் அனுப்பப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

அம்மகஜரின் விபரம் வருமாறு, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிச்சிறுமி (வயது-13) வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்டமை குறித்து கிளிநொச்சி வர்த்தக சமூகத்தினரும் சமூக ஆர்வலர்களும் ஒன்றிணைந்து இன்று கவனயீர்ப்பு பேரணி ஒன்றை நடாத்தி மாவட்ட அரச அதிபர் ஊடாக இம்மனுவை சமர்ப்பிக்கிறோம். எமது சமூக வாழ்வின் இருப்பிற்கு கீர்த்திமிக்க கலாசார பின்னணியே அடிப்படையானது என்பதுடன் பெண் சமூகத்தினரது பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பில் சர்வதேச தரம் வாய்ந்த சிந்தனைகளை கொண்டு செயற்படுகின்ற அறிவு, அனுபவம் மிக்க சமூகமாக நாம் திகழ்கிறோம் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். யுத்த காலத்தின்போதும் அதன் பின்னரான காட்டாட்சிக் காலத்திலும் கொடூரம் நிறைந்த வன்புணர்வுகளும் படுகொலைகளும் பாலியல் துஸ்பிரயோகங்களும் தொடர்ந்துவருவது மிகுந்த வேதனையளிக்கிறது.

## சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த நால்வர் கைது

நாட்டின் இரண்டு வெவ்வேறு இடங்களில் சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்த நால்வரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அக்குரஸ்ஸ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கங்கெல, அஸ்மகொட பிரதேசத்தில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த 22ஆம் திகதி இந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும், 34 வயதான குறித்த நபரை கைது செய்தபோது மதுபான தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த சந்தேகநபரை அக்குரஸ்ஸ நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை புளத்சிங்கள பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெகிரிஹேன பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான தயாரிப்பில் ஈடுபட்ட மூவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். அத்துடன் இவர்களிடமிருந்து மதுபான தயாரிப்பிற்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## யாழ்ப்பாண இராணுவக் கட்டளைத் தளபதியாக மேர்வின் பெரேரா நியமனம்!

யாழ். மாவட்டத்துக்கான இராணுவக் கட்டளைத் தளபதியாக பிரிகேடியர் மேர்வின் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் தற்போது 51ஆவது படைப்பிரிவு நிலைகொண்டுள்ளது. கோப்பாயில் அமைந்துள்ள இதன் தலைமையகத்தில் படைப்பிரிவின் பிரதானியாகவும், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியாகவும் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சாகி கால்லகே அண்மையில் இராணுவத் தலைமையகத்துக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிதாக யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதியாக நியமனம் பெற்றுள்ள பிரிகேடியர் மேர்வின் பெரேரா, இராணுவத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்தவராவார்.

தினமுரசு
வாரமலர்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 1811, 0214503262
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## ஏட்டிக்குப் போட்டியாகும் சில எதிரொலிகள்

சரத் பொன்சேகா தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதற்குப் பதில் நடவடிக்கையாகவே, சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேனவினால், மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கஎதற்காகதேசியப்பட்டியல் மூலம் இவரை உள்வாங்கினார் என்பது ஒருபுறமிருக்க, ஜெனிவாத் தீர்மானத்திற்கமைவாக இது நல்லாட்சியரசின் இலங்கைக்கான சர்வதேச அபிப்பிராயத்தை எந்தளவு பாதிக்கப் போகின்றது என்பதும் முன்பு பேசப்பட்ட விடயமே.

எதிலும் பெரிதாக அலட்டிக்கொள்ளாமல் சில செயற்பாடுகள்மூலம் பலரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் இலங்கை அதிபர் மைத்திரியவர்களின் அடுத்தகட்ட புதிய ஓர் நகர்வாக இது விளங்குகின்றது. தற்போது பல கால அரசியல் அனுபவம் உள்ளவர்களால் கூடப் புரிந்து கொள்ளமுடியாத பல அரசியல் நகர்வுகள் இலங்கை அதிபரால் முன்னெடுக்கப்படுகின்றன. இதில் பிரதமரும் விதிவிலக்கல்ல.

இலங்கையில், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நியமனத்தை இரத்துசெய்யுமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாக சபாநாயகர் கரு ஜயசூரிய, தேர்தல்கள் ஆணையாளர், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின்கீழ் போட்டியிடாத சரத் பொன்சேகா அந்தக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் அரசியல் சாசனத்திற்கு முரணானது என்று கூறியுள்ள மனுதாரர்கள், அந்த நியமனத்தை ரத்து செய்யுமாறு கோரியிருந்தனர்.

இருந்தும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நியமித்ததை மீள்பரிசீலனை செய்யவில்லை.

அந்தக் கணப்பொழுதில் நீதியின்வழியே தனது நல்லாட்சி நகரவேண்டும் எனக்கூறும் எங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஏன் இதற்கு மௌனமாக இருக்கின்றார் என்பது பலரிற்குப் புரியாதிருந்தது. தேவையின் தெரிவா இது...? பாதை மாறிய பயணமா இது...? என்கின்ற குழப்பங்கள் எல்லாம் உருவானது. அன்று மௌனமாக இருந்த ஜனாதிபதி இன்று தனது செயற்பாடுகளை இதற்கெதிராக தொடங்கியுள்ளார் என பல விமர்சனங்களை கிளம்பியுள்ளன.

தற்போது சிறிலங்கா அதிபரால் நியமிக்கப்பட, சிறிலங்கா இராணுவத்தின் தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், சரத் பொன்சேகா மீதான குற்றச்சாட்டுகளை விசாரிக்க மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்ட இரண்டு இராணுவ நீதிமன்றங்களில் ஒன்றுக்கு மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் தலைமை தாங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத் பொன்சேகா, சிறிலங்கா இராணுவத் தளபதியாக இருந்த காலத்தில், மோசடியான உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக, சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து விசாரித்த இராணுவ நீதிமன்றத்துக்கே அவர் தலைமையேற்றிருந்தார்.

மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிசை, சிறிலங்கா இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவிக்கு நியமிக்க, சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு, தற்செயலான ஒன்று என்பதற்கு அப்பாற்பட்டதாகும். உண்மையில், சரத் பொன்சேகாவின் புதிய நியமனத்துக்குப் பதிலடியான ஒரு நகர்வாகவே இது பார்க்கப்படுகிறது. அதேவேளை, சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக, சரத் பொன்சேகாவிடம், விசாரணைகளை மேற்கொள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்டுள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலையில் தொடர்புடைய சந்தேகநபர்கள் என்று வெளியிடப்பட்ட இரண்டுபேரின் மாதிரி உருவப் படங்களில் ஒன்று சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்தவருடையது என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே, இந்தப் படுகொலை இடம்பெற்ற காலப்பகுதியில், இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவிடம், அதுபற்றி விசாரிக்கப்படவுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில வாரஇதழ் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் எதற்காக? எது...? நல்லாட்சியில் இடம்பெறுகின்றது என்பது பல சிந்தனையின் திறவு கோலாக மாறிவருகின்றது. எது எப்படியிருப்பினும் நல்லாட்சி நலிந்துபோகாமல் தொடர்ந்திருந்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டியதே சிறுபான்மை இனங்களின் தெரிவுத் தேடலாகும்.

# அரைக்கொத்தரிசி அன்னதானம் விடிய விடிய மேளதாளம்!



பாலைவனம் திறந்து பாதையமைக்க
முயற்சித்தோம்.
முடியாதென்று விமர்சித்தனர் சிலர்
இருந்தும் முதுகெலும்பைக்காட்டி ஓடவில்லை
நாம்
ஓரமாய் இருந்து பார்க்கின்றோம்.
எம்பாதை வழியே இன்று சிலர்
பயணிக்கின்றனர்.
முடியாதென்று விமர்சித்தவர்களும்
தமிழர் தீர்விற்கு அதுதான் வழியென இன்று
ஆமோதித்துள்ளனர்.

துடைக்க முடியாதவற்றைத் தூசியாவது தட்ட
வேண்டுமென்றோம்.
முடியாது... அதுவல்ல தலை நிமிர்ந்த
தமிழனிற்குத்தீர்வு என்றீர்கள்
தூசு தட்டக்கூட முடியாமல் போச்சு இன்று பல
தீர்வுகள்.
துடைக்கக்கூடிய பல துடைப்பான்கள் இன்று
தூசுக்கும் உதவாமல் போச்சு...
வேண்டாம் இனியும் வீறாப்பு
சுயநலத்திற்கப்பால் எம் இனம் சுதந்திரம்
பெறவேண்டும்.
யார் ஆண்டாலென்ன எம் நிம்மதி நிலைக்க
வேண்டும்
எம் சந்ததி தளைக்கவேண்டும்.

உரிமைகளை மீட்டெடுக்க
அதிகாரப்பரவலாக்கல்மூலம் பல அத்திவாரம்
போட்டோம்.
சரணாகதி அரசியல் என்றீர்கள் - எம்மை
சந்தர்ப்பவாதிகள் என்றீர்கள்
தமிழர் சந்தர்ப்பங்கள் சாகடிக்கப்படுவதை
சற்றேனும் நீங்கள் ஏற்கவில்லை.

விஷம் தடவிய அம்புகள் மீண்டும்
வீணவம்பிற்கு நாணேற்றப்படுகின்றது
சிந்தியுங்கள் மக்களே!
வேண்டாம் இந்த வம்பு
அரசியலுக்குள் அத்து மீறி நுழைபவர்களால் தான்
இன்றுவரை இந்நிலை தொடர்கின்றது.
தொலைதூரம் சென்றுவிட்டோம்
இனியாவது ஒரு தீர்வுவேண்டும் எமக்கு...

ஒரே நேரத்தில் இரு முயல்களை விரட்டினால்
ஒரு முயலைக்கூடப் பிடிக்கமுடியாது.
எம்மவர்கள் விரட்டுகின்றார்கள்
வீணவம்பு வினையாகப் போகிறது
இனவாத இருட்டுக்குள் இருந்து
இன்னமும் தமிழ் தேசியம் பேசுகின்றோம்.
அந்த தமிழ் தேசியத்தையே தலை நிமிர
விடாமல்
மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று அதைச்
சும்மா விடாது
எம்மக்களிற்காக மட்டுமே நாம் குரல்
கொடுக்கப் பிறந்தவர்கள்
இதை எம்மக்கள்கூட இன்று ஏற்காவிட்டாலும்
காலத்தின் ஏற்புடைமைக்காய் நாம்
காத்திருப்போம்.

சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில்
அடிவருடிகளாக இருந்து
அடியோடு எம்மினம் அழிந்துவிடாமல்
பாதுகாத்தவர்கள் நாம்.
அதுதொடர்பாக பல விமர்சனங்கள் வந்தும்கூட
துன்பத்திலும் துணிந்து மக்களிற்காக சேவை
செய்தவர்கள்
அந்த சேவைக்கு ஆதாரம்தேட இன்று நாம்
முற்படவில்லை
எமது சேவைக்கு எவரின் அபிப்பிராயமும்
தேவையில்லை
தற்போது எமக்குத்தேவையானது
யார் குத்தினாலும் அது அரிசியாகவேண்டும்
என்பதே.
உரலும் உலக்கையும் உரமாக உள்ளபோது
குத்த தவறினால் எம்மினத்திற்கு என்றுமே
பாற்சோறு கிடைக்காது.

எந்தக் கண்ணாடியும் ஒரு பெண்
அழகில்லையென்று அவளுக்கு
சொன்னதில்லை
அவள் மனதின் தீர்மானங்களிற்கு காட்டிய
கண்ணாடி குற்றவாளியல்ல
சொல்லும் விமர்சனங்களிற்கு நியாயம் தேட
முற்படுங்கள்
சொல்பவரை செற்பனங்களில்
வருணிக்காதீர்கள்.
அருமையான கருத்தை கம்பவாரி கடிதம்
மூலம் எழுதினார்.
ஏற்றுக்கொள்ளுங்கள்.
"உரிமைகளைத் தாருங்கள் சேர்ந்து
வாழ்வோம்"
எனும் செய்தியை செய்மதியில் அனுப்புங்கள்
சென்றுவிட்டது தூரதேசம் இனவிரிசல்
என்பதனால்
ஏட்டிக்குப் போட்டியாக எதையும்
சாதிக்கமுடியாதென்பதை புரிந்து
கொள்ளுங்கள்.
எம் சந்ததியேனும் வாழவேண்டும் தயவு
செய்து வழிவிடுங்கள்.

# புலிகள் இயக்க பெண் உறுப்பினர் அமெரிக்காவில் தாக்குதல்?

பகுதி -21-

WikiLeaks

அன்பார்ந்த நம் வாசகர்களே! புலிகள் இக்க பயங்கரவாதிகள் அமெரிக்காவில் தாக்குதல் நடத்த உள்ளனர் என்று மிரட்டிவந்திருந்த கடிதம் குறித்து கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இருந்து வொஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமை காரியாலயத்துக்கு 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி அனுப்பப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இம்முறை பார்ப்போம்.

கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு இன்று ஒரு கடிதம் கிடைத்தது. அறிமுகம் இல்லாத தரப்பிடம் இருந்து கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. இதனால் நம்பகத்தன்மை சந்தேகமானதுதான். வத்தளையை சேர்ந்த அன்ரன் மோசஸ் என்பவர் இக்கடிதத்தை எழுதியுள்ளார் என்று சுயஅறிமுகம் செய்துள்ளார்.

கடிதம் வருமாறு:-

**அமெரிக்காவில் பயங்கரவாதத் தாக்குதல்**

அமெரிக்காவை பயங்கரவாதிகள் வெகுவிரைவில் தாக்க உள்ளனர் என்கிற தகவலை உங்களுக்கு அறிய தருகின்றேன்.

இத்தாக்குதலை நடத்த இயக்க உறுப்பினர் ஒருவர் புலிகளால் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இவரின் முழுப்பெயர் துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை. இவரின் இன்னொரு பெயர் துஷி. 1971 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி பிறந்தவர்.

இவர் புலிகளின் உளவாளியாக வேலைபார்த்தவர். வன்னியில் விசேட பயிற்சிகள் பெற்றவர். வன்னியில் இருந்து 2003 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 17 ஆம் திகதி வெளியே வந்தார். இப்போது கலிபோர்னியாவில் உள்ளார்.

புலிகளிடம் இருந்து பின்லேடன் தான் இவரை வேலைக்கு அமர்த்தி உள்ளார். இவர் அமெரிக்க தூதரகத்தில் விசிற் விசா பெற்றார். இத்தகவல் தாக்குதலை தடுத்து நிறுத்த உங்களுக்கு உதவும். நான் இத்தகவலை எப்படி அறிந்தேன்? என்று நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். இவரின் தொலைபேசி உரையாடல் ஒன்றின்மூலம் இத்தகவலை நான் அறிந்தேன். இவர் எனது நண்பர்களில் ஒருவர். திருமணம் ஒன்றுக்காக அமெரிக்கா செல்கின் றார் என்று எனக்கு கூறினார்.

இவரின் தொலைபேசி இலக்கங்கள் 016263054072, 016263570776. எனது பெயரை நீங்கள் வெளிப்படுத்த மாட்டீர்கள் என்று நம்புகின்றேன். இத்தகவலை இரகசியமாக வைத்திருக்கவும். நன்றி.

துஷ்யந்தினி கனகசபாபதி பிள்ளை என்பவருக்கு ஒரு வருட மல்ரிபிள் என்ரி விசாவை 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதி வழங்கி உள்ளனர் என்று தூதரகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரி உறுதிப்படுத்தினார். இவருக்கு 1994, 2000, 2001 ஆகிய வருடங்களில் முன்பு விசா மறுக்கப்பட்டு உள்ளது என்றும் கூறினார். கனகசபாபதிப்பிள்ளை ஒரு தமிழ் இந்து பெயர் என்று எமக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. இவரின் புகைப்படம் அடங்கலாக ஆவணங்களை மின்னஞ்சலில் அனுப்பிவைக்கின்றோம்.

கடிதத்தில் சொல்லப்பட்டு உள்ள தகவல் குறித்தோ, கடிதத்தை அனுப்பியவர் குறித்தோ இப் போதைக்கு எம்மிடம் மேலதிக தகவல்கள் கிடையாது. இவ்வாறான கடிதங்களை வேண்டாதவர்களை பழி வாங்குகின்ற நோக்கத்தில் அனுப்பி வைப்பது இலங்கையில் பிரசித்தி வாய்ந்த விடயம் ஆகும். இதை மனதில் வைத்துத்தான் தாக்குதல் தகவல் அனைத்தும் நோக்கப்படவேண்டும்.

ஆனால் துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை தலைமயிரை ஒட்ட வெட்டி இருக்கின்றார் என்பதை விசா விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டு உள்ள புகைப்படம் காட்டுகின்றது. இவ்விதமான தலை மயிர் வெட்டு இலங்கையில் வழக்கத்துக்கு மாறானது. இது இவர் புலிகள் இயக்க பெண் உறுப்பினர் என்பதற்கான அடையாளமாக இருக்கலாம்.

கடிதத்தை எழுதி அனுப்பியவரால் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்த முகவரியை வைத்து நேற்று அன்ரன் மோசஸை பிரான்திய பாதுகாப்புக்கான எமது அலுவலர் கண்டுபிடித்தார். மோசஸ் பேட்டி காணப்பட்டார். கடிதம் எழுதியதை மோசஸ் மறுத்தார். இருப்பினும் இவரின் பேச்சில் பதற்றம் தெரிந்தது. அத்துடன் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்த விடயங்கள் இவருக்கு தெரிந்து இருந்தன என்பதும் தெரியவந்தது. துஷியந்தினி கனகசபாபதிப்பிள்ளையுடன் பல வருடங்கள் காதல் தொடர்பில் இருந்தார் என்பதை மோசஸ் ஒப்புக் கொண்டார். ஆயினும் துஷயந்தினியுடன் ஏற்பட்ட காதல் முறிவால் இப்போதுவரை துன்பப்படுகின்றார் என்றும் தெரிவித்தார்.

கடிதம் எழுதியதை மோசஸ் மறுத்தாரா யினும் கடிதத்தை யார் எழுதி இருப்பார்?, அமெரிக்காவில் உள்ள துஷியின் தொலைபேசி இலக்கங்கள் போன்ற தனிப்பட்ட விபரங்களை யார் அறிந்து வைத்து உள்ளார்? என்பன போன்ற கேள்விகளுக்கு இவரால் பதில் சொல்ல முடியவில்லை.

கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரக அலுவலர் நேற்று நடத்திய விசாரணையில் துஷி பி.பி.சியில் கடமையாற்றுகின்ற ஊழியர் என்று கண்டு பிடிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது. பி.பி.சியின் இலங்கை நிருபர் பிரான்ஸிஸ் ஹரிசன் தூதரகத்துடன் தொடர்புகொண்டார். இவரின் உதவியாளராக துஷி உள்ளார் என்று உறுதிப்படுத்தினார். கலிபோர்னியாவில் அமெரிக்க புலனாய்வு நிறுவனத்தால் துஷி விசாரிக்கப்பட்டார் என்றும் ஹரிசன் தெரிவித்தார். துஷியை அன்ரன் மோசஸ் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றார் என்றும் கூறினார்.

பி.பி.சியில் துஷி ஊழியராக உள்ளார் என்பதை தூதரகம் உறுதிப்படுத்தியது. துஷி ஒரு தமிழர், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் சில சந்தர்ப்பங்களில்



இலங்கையில் உள்ள அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள் ஆகியோரை மிரட்டி 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட அநாமதேய மிரட்டல் கடிதங்கள் குறித்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமை காரியாலயத்துக்கு கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் மறுநாள் அனுப்பிய இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இம்முறை பார்ப்போம்.

பிரான்திய பாதுகாப்புக்கான எமது அலுவலரை கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரக அலுவலர் நேற்று தொடர்புகொண்டார். இலங்கையில் உள்ள அமெரிக்கர்கள், பிரித்தானியர்கள் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட அநாமதேய மிரட்டல் கடிதங்கள் கிடைத்து இருப்பதாக தெரிவித்தார். பிரித்தானிய, அமெரிக்க தூதரகங்களுக்கு இக்கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆயினும் எமக்கான கடிதம் இன்னமும் கிடைக்கவில்லை. பிரித்தானிய தூதரகத்துக்கு வந்த கடிதத்தை புலனாய்வு விசாரணைக்காக இலங்கை பொலிஸாருக்கு அனுப்பி உள்ளனர்.

இலங்கையில் வாழ்கின்ற பிரித்தானியர்கள், அமெரிக்கர்கள் ஆகியோருக்கான எச்சரிக்கை என்பது கடித தலைப்பு.

கடிதம் வருமாறு:-

- நாங்கள் இலங்கை முஸ்லிம்கள். ஈராக் மீதான தாக்குதல் மிரட்டலை கண்டிக்கின்றோம். ஈராக் மீது நீங்கள் படை எடுக்கின்ற அதே நாளில் இலங்கையில் உள்ள பிரித்தானிய, அமெரிக்க குடும்பங்களை நாங்கள் கடத்துவோம். முன்பு செய்தது போல நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்த போவதில்லை. மாறாக அல் குவைதா, ஓசாமா பின் லேடன் ஆகியோர் எமக்கு கட்டளையிடுகின்றபடி அனைத்தையும் செய்வோம்.

நாங்கள் அல் குவைதாவை யும், ஓசாமா பின்லேடனையும் பின்பற்றுபவர்கள். அமெரிக்க, பிரித்தானிய படைகள் ஈராக்கை ஆக்கிரமிப்பதை நாங்கள் எந்த விலை கொடுத்தும் அனுமதிக்கமுடியாது.

எமது முஸ்லிம் அரசியல் கட்சிகள்கூட ஓசாமா பின் லேடன் தலைமையிலான அல்குவைதா அமைப்புடன் தோழமையுடன் அல்லது இணைந்து செயற்படுகின்றன என்று இவ்விடத்தில் சுட்டிக் காட்டுகின்றோம்.

எமக்கு ஒரு தனிநாடு, முஸ்லிம் துறைமுகம் ஆகியன இலங்கையில் கிடைத்தவுடன் வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம். -

நாங்கள் அனைத்து மிரட்டல்களையும் சீரியஸாக எடுக்கின்றபோதிலும் இலங்கையில் இவ்வாறான மிரட்டல் கடிதங்களுக்கு குறைவே இல்லை. பொதுவாக இவ்வாறான கடிதங்களை நம்பிக்கையீனத்துடனேயே பார்க்கின்றோம். இருப்பினும் இம்மிரட்டல் கடிதம் குறித்து அறிய தருகின்றோம். ஏனென்றால் குடும்ப உறுப்பினர்கள் கடத்தப்படுவார்கள் என்று இதில் மிரட்டப்பட்டு உள்ளது. ஆயினும் ஆபத்து ரொம்ப ரொம்ப குறைவு என்றே தொடர்ந்து நம்புகின்றோம். எது எப்படி இருந்தாலும் நாங்கள் தொடர்ந்து மேலதிக முன்னேற்றங்களையும், ஆபத்துக்களையும் நெருக்கமாக தொடர்ந்து அவதானிப்போம்.

**(யாத்திரை தொடரும்)**

குறிப்பிடப்பட்டு உள்ள சுய அறிமுக விலாசம் குறித்து விசாரிப்போம். ஏனைய விபரங்கள் கிடைக்கப் பெற்ற பிற்பாடு ஆலோசனை தருவோம்.

**மிரட்டல் கடிதத் தொடர்ச்சி**

தூதரகத்துக்கு வந்த மிரட்டல் கடிதம் மீதான விசாரணையின் முடிவு என்கிற தலைப்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து வாஷிங்டனில் உள்ள அமெரிக்க வெளியுறவு தலைமை காரியாலயத்துக்கு 2004 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம், 09 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்ட இரகசிய இராஜதந்திர ஆவணத்தை இத்தொடரில் தொடர்ந்து பார்ப்போம்.

விடுதலைப்புலிகள் அமெரிக்காவில் தாக்குதல் நடத்தவுள்ளனர் என்று குறிப்பிட்டு தூதரகத்துக்கு வந்த கடிதத்தில் சொல்லப்பட்டு இருந்த தாக்குதல் தகவல் பெரும்பாலும் பொய்யானது என்று எமது வட்டாரங்கள் நடத்திய புலனாய்வு விசாரணைகள் காட்டிநிற்கின்றன. பொறாமை அடைந்த காதலன் ஒருவரின் கைங்கரியமாக இக்கடிதம் தெரிகின்றது.


கடமையாற்றி உள்ளார் என்றாலும் இவர் புலி உறுப்பினர் அல்லர் என்றே தூதரகம் அனுமானிக்கின்றது. துஷிக்கும் புலிகளுக்கும் இடையில் ஏதேனும் தொடர்பு உண்டா? என்பதை தீர்மானிக்க ஸ்ரீலங்காவின் உள்ளக புலனாய்வு பிரிவு பணிப்பாளரை பிரான்திய பாதுகாப்பு அலுவலர் தொடர்புகொள்வார்.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு திணைக்கள முகவர் வோல்டர் ஹார்ட்டுடன் பிரான்திய பாதுகாப்பு அலுவலர் இன்று தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார். பொறாமை அடைந்த முன்னாள் காதலனால் பொய்யான கடிதம் எழுதப்பட்டு உள்ளது என நம்பவேண்டி உள்ளது என்று ஆலோசனை கூறினார். புதிய தகவல்கள் ஏதேனும் கிடைக்கின்ற வரை இவ்விடயத்தை இத்துடன் முடிவுக்கு கொண்டு வரலாம் என்று பிரான்திய பாதுகாப்பு அலுவலர் கருதுகின்றார்.

**அமெரிக்கர்களைக் கடத்தும் திட்டம்!**

ஊருக்கு

# அரசியல் அமைப்பின் தேவையும் தெரிவும்



## எமக்கு ஒரு அரசியலமைப்பு தேவைப்படுவது ஏன்?

அரசியலமைப்பின் வரலாற்றை நாம் நோக்கினால், அதாவது பெரும்பான்மைவாதத்தின்மீது ஒரு கட்டுப்பாட்டை எடுத்துவரக்கூடிய ஒரு கருவியாகவே அரசியலமைப்பு நோக்கப்பட்டு வந்திருப்பதனை காணமுடியும். ஜனநாயக அமைப்பொன்றில் பெரும்பான்மையின் விருப்பத்தை அடிப்படையாகக்கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வது மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்றாக இருந்துவந்துள்ளது. குறிப்பாக, மனிதஉரிமைகள் போன்ற ஒரு சில விடயங்கள் தொடர்பாக பெரும்பான்மைமூலம் முடிவுகளை எடுக்கும் செயன்முறை பொருத்தமற்றது என்ற விடயம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில், அதன்விளைவாக "பெரும்பான்மை கொடுங்கோன்மை" தோன்றமுடியும். எனவே, அத்தகைய பிரச்சினைகள் பெரும்பான்மையின் மூலம் முடிவுகளை எடுக்கும் சட்ட சபையின் பரப்பெல்லைக்கு வெளியில் எடுத்து வரப்படவேண்டும் எனவும், மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்றத்தின் நியாயாதிக்க எல்லையிலிருந்து அகற்றப்பட வேண்டுமென்றும், அவை அரசியலமைப்பொன்றின் பரப்பெல்லைக்குள் எடுத்து வரப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஓர் உதாரணம், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தும்கூட மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கென அரசியலமைப்பில் உரிமைகள் தொடர்பான சாசனமொன்றை உள்ளடக்குவதாகும்.

எனவே, அரசியலமைப்பு, ஒரு சில முக்கியமான விடயங்களை நாடாளுமன்றம் மற்றும் அரசாங்கத்தின் நிறைவேற்று பிரிவுகள் என்பவற்றின் கரங்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. ஹார்வட் சட்டக் கல்லூரியின் முன்னாள் பீடாதிபதி யான யூஜின் ரொஸ்டோ அதனை "பெரும்பான்மைவாதத்தை

**ஓர் அரசியலமைப்பு ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாக இருந்துவருகின்றது. ஆனால், இந்த அடிப்படை கோட்பாடும், முதன்மையான கோட்பாடும் இலங்கையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்களின் மூலகர்த்தாக்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தன.**

எதிர்கொள்ளும் ஆவணம்" என எடுத்து விளக்கியிருந்தார்.

அண்மைய வருடங்களில் அரசியலமைப்பொன்றின் விழுமியங்கள், கோட்பாடுகள் மற்றும் தர நியமங்கள் என்பன எடுத்து விளக்கப்பட்டு இருந்தன. உலகின் மிக முற்போக்கான அரசியலமைப்புக்களில் ஒன்றாகக் கருதப்பட்டுவரும் தென்னாபிரிக்காவின் 1996ஆம் ஆண்டின் அரசியலமைப்பு இதற்கான ஒரு மிகச்சிறந்த உதாரணத்தை வழங்குகின்றது. அந்த அரசியலமைப்பின் உறுப்புரை - 1 பின்வருமாறு பிரகடனம் செய்கின்றது: "தென்னாபிரிக்கா பின்வரும் விழுமியங்களின்மீது உருவாக்கப்பட்ட ஒரு குடியரசாகும்".

அதன்பின்னர் அது அத்தகைய விழுமியங்களின் ஒரு பட்டியலை முன்வைக்கின்றது. அது மானிட கண்ணியம், இனவாத எதிர்ப்பு, ஆண் - பெண் பாலினப் பாகுபாடு காட்டாமை, சட்டத்தின் ஆட்சி, பல்கட்சி ஜனநாயகம், பொறுப்புக்கூறுதல், திறந்த தன்மை, மக்களுக்கு பதிலிறுத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. உறுப்புரை - 2 பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "அரசியலமைப்பு அதி உயர்வானதாகும். அரசியலமைப்புடன் பொருந்திச் செல்லாத அனைத்துச் சட்டங்களும் செல்லுபடியற்றவையாகும்."

தென்னாபிரிக்க அரசியலமைப்பு மற்றும் இலங்கையின் அரசியலமைப்பு என்பவற்றின் முதல் இரு உறுப்புரைகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடு ஆச்சரியமூட்டத்தக்கதாகும். தென்னாபிரிக்க அரசியலமைப்பு விழுமியங்கள் மற்றும் கோட்பாடுகள் என்பவற்றை எடுத்துக்காட்டுவதுடன், அவை அதியுயர்வானவை எனக் குறிப்பிடுகின்றது. இலங்கையின் அரசியலமைப்பு அதிகாரம் குறித்தும், அதிகாரத்தை பிரயோகிப்பவர் யார் என்பது குறித்தும் முழுமையாக கவனம் செலுத்துகின்றது.

### அரசியலமைப்பு உண்மையிலேயே அதியுயர்வானதாக இருந்து வருதல் வேண்டும்

ஓர் அரசியலமைப்பு ஒரு நாட்டின் அதியுயர் சட்டமாக இருந்து வருகின்றது. ஆனால், இந்த அடிப்படை கோட்பாடும், முதன்மையான கோட்பாடும் இலங்கையில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்புக்களின் மூல கர்த்தாக்களினால் நிராகரிக்கப்பட்டிருந்தன.

[தேவையும் தெரிவும் தொடரும்]



41

# முதுமையிலும் புதுவாழ்வு கண்ட மண்டேலா!!

"ஜஸ்டிஸ் போனது போகட்டும். இனியாவது அப்பாவின் பேச்சை கேட்டு நடப்போம். அப்பா உன்னை அவருடன் ஊருக்கு அழைத்து செல்ல ஆசைப்படுகிறார். அவரின் ஆசையை நீ நிறைவேற்றவேண்டும்" என்றதும் ஜஸ்டிஸ் அப்படியே பேயறைந்ததுபோல் ஆகிவிட்டான். ஜோங்கிந்தாபாவோ "ரோஹிலாலா சொல்வது உண்மைதான். (மண்டேலாவை ஜோங்கிந்தாபா , ரோஹிலாலா என்று அழைப்பதுதான் வழக்கம்.) நான் இன்றைக்கோ, நாளைக்கோ என்று உயிரை கையில் பிடித்துக்கொண்டிருக்கிறேன்.

எனக்கு பிறகு என் ஆஸ்தி அந்தஸ்தையும் அலுவலக நிர்வாகத்தையும் நீயேதான் கவனித்துக் கொள்ளவேண்டும். இதுவே என் இறுதி ஆசை. மண்டேலாவை நான் ஊருக்கு வா என்று கட்டாயப்படுத்தமாட்டேன். ஏனென்றால் அவனது உயர்ந்த இலட்சியமும் குறிக்கோளும் எனக்கு நன்றாகவே புரியும். அவன் அவனது வழியில் சென்று முன்னேறட்டும். அதற்கு என் முழு ஆசியும் வாழ்த்துக்களும் என்றும் உரித்தாகட்டும்" என்றுகூற மண்டேலா பூரித்துப்போய் "என்னை முழுமையாக புரிந்து கொண்டது நீங்கள் மட்டும்தான். நான்தான் உங்களை புரிந்து கொள்ளாமல் உங்கள் மனதை நோகடித்துவிட்டேன். இருந்தும் நீங்கள் பெருந்தன்மையுடன் நடந்துகொள்வது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. நன்றி அப்பா" என்று குற்ற உணர்வும் நன்றியுணர்வும் ததும்ப கூறி முடித்தான்.

ஜஸ்டிஸோ ஜோங்கிந்தாபாவுடன் ஊருக்குச் செல்வதை முடியாதென்று ஒரே பிடியாக மறுத்துவிட்டான். மண்டேலாவோ தந்தையின் ஆசையை நிறைவேற்றி வைப்பதற்காக ஜஸ்டிஸிடம் மன்றாடிக் கேட்டும் பயனில்லை. அவன் தனது முடிவில் உறுதியாக இருந்தான். ஊருக்கு வரமாட்டேன் என்று அடித்துக் கூறிவிட்டான். "வேறு ஏது வேண்டுமானாலும் கூறுங்கள். என்னை ஊருக்கு மட்டும் அழைக்காதீர்கள் அப்பா" என்று கெஞ்சிக் கேட்டான். ஜஸ்டிஸ் இவ்வளவு பிடிவாதமாக மறுப்பதற்கு முக்கிய காரணம் அவன் தனது அருமைக் காதலியைவிட்டு பிரிய முடியாது தவிப்பதே ஆகும் என்று மண்டேலா புரிந்துகொண்டான்.

மண்டேலா சினத்துடன் ஜஸ்டிஸிடம் "பெற்று வளர்த்து ஆளாக்கிய தந்தையின் இறுதி ஆசை என்று கூடப் பார்க்காமல் உதறித்தள்ள உனக்கு எப்படி மனம் வந்தது? தந்தையைவிட உனக்கு பாழாய்ப்போன காதல்தான் பெரிதாகிவிட்டதா? தந்தையின் கடைசி ஆசையைகூட நிறைவேற்றமுடியாத நீ எல்லாம் ஒரு மகனா? நம் தந்தை இவ்வளவு இறங்கிவந்து உன்னை அழைக்கிறார். அதற்கு செவிசாய்க்க வேண்டியது உன் கடமை அல்லவா? எங்கே போய்விட்டது உன் அறிவு?" என்று அனல் பறக்கக்கூறி முடித்தான். இருப்பினும் ஜஸ்டிஸிடம் எந்த மாற்றத்தையும் காணவில்லை. ஜோங்கிந்தாபா எவ்வளவோ கெஞ்சி மன்றாடிப் பார்த்தார். பலன் பூஜ்ஜியம்தான். இறுதியில் கவலை தோய்ந்த முகத்துடன் சோகச் சுமை-களை மூட்டை மூட்டையாக இதயம் எனும் வாகனத்தில் சுமந்துகொண்டு நடைப்பிணமாக பிள்ளைகளைப் பிரிந்து தன்னந்தனியாக ஊருக்கு திரும்பினார். இந்த சம்பவத்திற்கு பிறகு ஜஸ்டிஸின் செயலால் கோபமுற்ற மண்டேலா அவனுடன் பேசுவதையே முற்றாக நிறுத்திக் கொண்டான்.

நாட்கள் ஒன்றையொன்று விரட்ட மாதங்கள் சில விரைந்தோடின. 1943 இல் அலெக்சாண்ட்ராவில் பேரூந்து கட்டணம் உயர்த்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பேரூந்துக் கட்டணத்தை குறைக்கும்படி கோரி மாபெரும் போராட்டத்தை நடத்தியது. அப்போராட்டத்தில் மக்களை வழிநடாத்தும் தலைவர்களில் ஒருவனாக கோர் களமிறங்கினான். அலெக்சாண்ட்ராவிலுள்ள அத்தனை பேரையும் பாதிக்கும் பிரச்சினை என்றபடியால் பல்லாயிரக்கணக்கான

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கோர் மண்டேலாவையும் இப்போராட்டத்தில் இணைத்துக் கொண்டான். மண்டேலாவும் கோரும் உட்பட அனைத்து தலைவர்களும் அனல் பறக்கும் பிரசாரங்களுடன் ஒன்பது தினங்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர். மண்டேலாவோ சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான். கோர் மண்டேலாவிடம் "நெல்சன் நீ களமிறங்கிய முதல் போராட்டமே பெரும் வெற்றியடைந்துவிட்டது. எனது வாழ்த்துக்கள்." என்று கூறி மேலும் மேலும் அவனை உற்சாகமூட்டினான்.

கோருடன் சேர்ந்து மண்டேலா போராட்டத்தில் ஈடுபட்ட செய்தி எப்படியோ அவனது உயர் அதிகாரி யான சிடெல்ஸ்கியின் காதுக்கு எட்டியது. அவர் மண்டேலாவை உடனேயே தன் இடத்திற்கு வரவழைத்தார்.

(தொடரும்)

# மனமே மலர்ந்திடு
# வன்முறை நிறைந்த உலகம்!

உலகில் வன்முறை அதிகரித்துக் கொண்டே வருகிறது என்று சொல்கின்றன சில ஆய்வுகள். நம்மைச் சுற்றி நிகழ்பவற்றைப் பார்த்தாலே போதும், எவ்வளவு வன்முறை எங்கும் பரவிவருகிறது என்று கண்டுகொள்ள.

வன்முறைகளிலும் பல வகைகள் இருக்கின்றன. பின்வரும் பட்டியல் நமக்கு வியப்பைத் தரக்கூடாது. எத்தனையோ வகையான வன்முறைகள் உண்டு. அவற்றுள் குறிப்பான பத்து மட்டும் கீழே தரப்பட்டுள்ளன.

**1. தனிநபர் வன்முறை :**

ஒவ்வொரு தனிநபரும் ஏதாவது ஒருவகையில் வன்முறையில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறோம். கொலை, கொள்ளை, பெண்களைக் கேலி செய்தல் போன்றவை அனைத்துமே தனிநபர் வன்முறைதான். நாள்தோறும் ஆயிரக்கணக்கான தனிநபர் வன்முறைகள் நடந்துகொண்டே இருக்கின்றன. அவற்றுள் ஒரு சில மட்டும் செய்தியாக ஊடகங்களில் வெளிவருகின்றன.

**2. குடும்ப வன்முறை:**

கணவர்கள் மனைவியரை அடிப்பது, பெற்றோர் பிள்ளைகளை அடிப்பது, மாமியார்-மருமகள் சண்டை அனைத்துமே குடும்ப வன்முறையில் அடங்கும். பிள்ளைகளை அடிப்பதற்கு பெற்றோருக்குக்கூட உரிமை இல்லை என்பது மனித உரிமையியலின் அடிப்படை பாடம். ஆனால், இது நடைமுறையில் இல்லாத ஒன்று.

**3. வார்த்தை வன்முறை:**


நமது சொற்கள் பிறரைக் காயப்படுத்தும்போது அது வார்த்தை வன்முறை. ஆசிரியர்கள் மாணவரிடத்தில் இவ்வன்முறையை அதிகம் பயன்படுத்துகின்றனர். அலுவலகங்களில், வீடுகளில், தெருக்களில், பேருந்து நிலையத்தில்... என்று எல்லா இடங்களி லும் வார்த்தை வன்முறை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

**4. சமூக வன்முறை:**

சமூகம் தனிநபர்கள்மீதும், குழுக்கள்மீதும் தொடுக்கும் வன்முறை. சாதி என்பதும், தீண்டாமை என்பதும் காலங்காலமாக நம் நாட்டில் நிகழ்ந்துவரும் அருவருக்கத்தக்க சமூக வன்முறை. ஆணாதிக்கம், பெண் சிசுக்கொலை, சாஸ்திரம் சம்பிரதாயம் என்ற பெயரில் நடக்கும் மூட நம்பிக்கைக் கொடுமைகள் அனைத்துமே சமூக வன்முறைகள்தான்.

**5. சமய வன்முறை:**

சமய வன்முறை பற்றிச் சொல்லவே வேண்டாம். இடிக்கப்பட்ட வழிபாட்டுத் தலங்கள், எரிக்கப்பட்ட



சமய நூல்கள், பறிக்கப்பட்ட மனித உயிர்கள், எடுக்கப்பட்ட மனித உரிமைகள் என்று இந்த வன்முறையின் விளைவுகள் நீளும்.

**6. ஊடக வன்முறை:**

ஊடகங்கள் வெளியிடும் செய்திகள், தொலைக்காட்சித் தொடர்கள், திரைப்படம், இணைய தளம் இவற்றின்மூலம் கட்டவிழ்த்து விடப்படும் வன்முறை ஏராளம். குறிப்பாக, பாலியல் வன்முறையை அதிகரிக்கும் கலாசார சீரழிவை இந்த ஊடகங்கள் வலிமையுடன் செய்து வருகின்றன. குழந்தைகளிடத்தில் வன்முறை மனநிலை வளர்வதில் பெரும் பங்கு ஊடகங்களையே சாரும்.

**7. அரசு வன்முறை:**

மக்களைப் பாதுகாக்கவேண்டிய அரசே மக்களின்மீது வன்முறையை ஏவிவிடுகிறது என்பது ஒரு வியப்பான முரண்பாடு. ஆனால், அதுதான் பல நாடுகளில் நடந்துகொண்டிருக்கிறது. காவல்துறை ஒரு வன்முறைத் துறையே. அத்துடன், எளிய மக்களுக்கு எதிரான சட்டம், நடைமுறைகள், வலியோர்மீது நடவடிக்கையின்மை போன்றவையும் அரசின் வன்முறைகளே.

**8. சுற்றுச் சூழல் வன்முறை:**

முன்பெப்போதையும்விட தற்பொழுதுதான் சுற்றுச் சூழலுக்கு எதிரான வன்முறை பெருகிவிட்டது. உலகம்முழுவதும் நீர், காற்று, நிலம், காடுகள் அனைத்தும் மாசு அடைந்துவருகின்றன. புகை கக்கும் வாகனங்கள், குப்பைகளும் வேதியல் கழிவுகளும் தள்ளப்படும் நதிகள், வெட்டப்படும் மரங்கள், வேட்டை யாடப்படும் விலங்குகள் அனைத்துமே இந்த வன்முறையின் வெளிப்பாடுகள்தான்.

**9. உலக மய வன்முறை:**

இன்று அனைவருக்கும் அறிமுகமாகி விட்ட உலக மயமாக்கல் என்பதுவும் மக்கள்மீது ஏவி விடப்பட்ட ஒரு வன்முறையே என்பதை நாம் அறிய வேண்டும். தனியார் மயமாக்கல், வணிகமயமாக்கல், ஆதாயம் தேடல், போட்டி போடுதல் போன்ற அனைத்து உலகமய அடையாளங்களும் வன்முறைச் சின்னங்கள்தான். உலகமயம் வன்முறைக் கலாசாரத்தை ஊக்குவிக்கிறது என்னும் உண்மையை அறிவது ஒரு விழிப்புணர்வு.

**10. உரிமை மீறல் வன்முறை:**

இது மனித உரிமைகளின் பொற்காலம். அனைவருக்கும், குறிப்பாக எளியவர்கள், குழந்தைகள், தொழிலாளர்கள், பெண்கள் தங்களின் உரிமையை உணர்ந்து நிலைநாட்டும் காலம். எனவே, எங்கெல்லாம் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவோ, அங்கெல்லாம் வன்முறை நிகழ்கிறது என்னும் உணர்வும் பரவிவருகின்றது.


**நாம் என்ன செய்யலாம்?**

- நாம் வன்முறை மிகுந்த ஓர் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை முதலில் உணரவேண்டும்.
- நமது சிந்தனையிலும், சொல்லிலும், செயல்களிலும் வன்முறையை அகற்றவேண்டும். அதற்கு எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும்.
- ஊடக வன்முறை போன்ற வன்முறைத் தாக்குதல்களிலிருந்து நம்மையும் நமது குழந்தைகளையும் பாதுகாக்கவேண்டும்.
- வன்முறையற்ற ஓர் உலகை உருவாக்கும் பணியில் நம்மையே ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

# மன அழுத்தம் கட்டுப்படுத்துவது எப்படி?

சரியான திட்டமிடுதல், அவசர மற்றும் அவசியப் பணிகளை முதலில் முடித்தல், வேலைப்பளுவில் அவ்வப் போது ஓய்வெடுத்தல், மனதை தளர்வாக வைத்திருத்தல் தனிமை மற்றும் எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனை நண்பர் களுடன் நிறையநேரம் செலவிடுதல், தியானம், உடற்பயிற்சிகள், பொழுது போக்குக்காட்சிகள் முதலானவை மனஅழுத்தத்திற்கு மருந்துகளாக பலராலும் அவ்வப்போது பரிந்துரைக்கப் படுகின்றன. இவைகளெல்லாம் சொல்வதற்கு எளிமையாக இருந்தாலும் இவற்றில் செயல்வடிவில் உள்ள பிரச்சினைகள் அதனை அனுபவித்தவர் களுக்கு மட்டுமே எளிதில் புரியும். இந்நோயில் இருந்து நிவாரணம் பெற என்ன செய்யவேண்டும்? மனஅழுத்தம் உங்கள்மீது ஆதிக்கம் செலுத்துவதை தடைசெய்ய கீழுள்ள ஆலோசனைகளை பின்பற்றுங்கள், அவை உங்களுக்கு உதவக்கூடும்.

உங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்தும், உணர்வுகளைப் பற்றியும் நடந்தவைகள் பற்றி நீங்கள் கண்டிப் பாக யாருடனாவது பேசுங்கள், உங்கள் குடும்ப அங்கத்தினரிடமோ அல்லது நண்பர்களிடமோ இது பற்றிக்கூறுவதற்கு விரும்பாவிட்டால் இதற்காக தகுந்த ஆலோசனைகள் வழங்கக்காத்திருக்கும் மனநிலை ஆலோசகரை அணுகலாம். அப்போதுதான் உங்களுக்கு விடிவு கிடைக்கும். நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியான விடயங்களை மீண்டும் செய்துபாருங்கள், அன்றாடம் உடற்பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள். இந்த சக்தி யூட்டும் செயற்பாடு உங்கள் பொது சுகாதாரத்தைப் பேணுவதோடு மன உளைச்சலைக் குறைக்கவும்



உதவுகிறது.

உலகில் வாழும் அனைவருமே தங்கள் வாழ்நாளின் ஒரு முறையாவது தற்கொலை செய்யலாமா என்ற நிலைமைக்கு வருகின்றனர் என்று மனோதத்துவம் சொல்கிறது. இன்றைய வேகமான உலகத்திற்கு ஈடுகொடுத்து நாம் காரியங்களை செய்யும்போது மெல்ல மெல்ல நம்மை அமுக்கி மூழ்கடிக்கவரும் அரக்கனே மன அழுத்தம். இதை உடனே அடையாளம் கண்டுகொண்டு தீர்வு காண்பதன் மூலம்பெரும் இழப்புகளை தவிர்க்க முடியும்.

**முதல்படி:** சிறு பிரச்சினைகளுக்கு கூடபெரிய அளவில் கவலைப்படுவதே மனஅழுத்தத்துக்கான முதல்படி. மனஅழுத்தத்தால் உடல், வேதியியல் மாற்றத்துக்கு உள்ளாகிறது. இதனால் இளம்வயதிலேயே வயதான தோற்றம் ஏற்படும். ஒருவரின் தனித்தன்மை, முயற்சி, சக்தி ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படுகிறது.

நல்லவர்களையும் முட்டாளாக்கும்: மனஅழுத்தம், நல்ல அறிவு படைத்தவர் களையும், பழக்கவழக்கம், நடை, உடை, பாவனைகளில் முட்டாள்களாகக் காட்டுகிறது. ஒருவருக்கு உடலளவிலும், மனதளவிலும் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. உறவினர்கள், நண்பர்களிடமிருந்து பிரியும்நிலை உண்டாகிறது.

**உணர்வற்ற மனிதனாக்கும்:**

மனித உணர்வில்,பாதிப்பை உண்டு பண்ணுகிறது. தேவையில்லாத இடங்களில், தேவையற்ற உணர்வு களை வெளிப்படுத்த வைக்கிறது. சமுதாயத்திலிருந்து ஒரு மனிதனை பிரித்துக்காட்டுகிறது. இதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சரி செய்யாவிடில் மனநோய் அளவுக்கு கொண்டுசெல்கிறது.

**எவ்வாறு கட்டுப்படுத்துவது:**

அவசரஉலகில் மனஅழுத்தம் எல்லா மனிதர்களுக்கும் ஏற்படுகிறது. என்ன பிரச்சினையாக இருந்தாலும் அதை தைரியமாக எதிர்கொள்ளப் பழகவேண்டும். சிறு விஷயத்துக்கு எல்லாம் கவலைப்படாமல், அதை சரி செய்யவேண்டும். சரி செய்யமுடியாத பிரச்சினை எனில், அதையே நினைத்து கவலை கொள்ளக்கூடாது.

உடனே சரி செய்யுங்கள்: பிரச்னை ஏற்பட்டு மனஅழுத்தம் தோன்றும்போது, எண்ணத்தை மாற்றமுற்படுங்கள். நண்பர்களுடன் மனம்விட்டு பேசுங்கள். இதனால் அழுத்தம் குறையும். எளிய உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம் ஆகியவையே மனஅழுத்தத்துக்கு சிறந்தமருந்தாக கருதப்படுகிறது.

# உயிர்க்கொல்லியாக மாறியுள்ள வீதி விபத்துக்கள்

-ஏ.எச்.ஏ. ஹுஸைன்



பாதசாரி கடவைகளை கடக்க முயன்றவர் பலி, வீட்டுக்குள் வாகனம் புகுந்து விபத்து, பாலத்தில் வாகனம் வீழ்ந்து பயணிகள் பலி இப்படி தினமும் பல்வேறு விபத்துச் சம்பவங்களைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம்.

இலங்கையில் நாலரை மணித்தியாலத்திற்கு ஒரு வீதி விபத்து இடம்பெறுவதாக சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டு உள்ளது. நாலரை மணித்தியாலத்திற்கு ஒரு தடவை இடம்பெறும் வீதி விபத்துக்களில் ஒருவர் வீதம் இறப்பதாகவும் ஏறக்குறைய ஆறு வாகன விபத்துக்கள் தினமும் இடம்பெறுவதாகவும் இதில் மூன்று பேர் தினமும் காயத்திற்கு உள்ளாவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வீதி விபத்துகள் காரணமாக வருடாந்தம் இரண்டாயிரம் முதல் இரண்டாயிரத்து 500 வரையிலானவர்கள் நாட்டில் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நாட்டில் வருடாந்தம் சுமார் எண்பதாயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாக கணக்கிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இதில் சுமார் முப்பதாயிரம் விபத்துக்கள் பாரதூரமானவை என்பதுடன் வீதி விபத்துக்களினால் நாளாந்தம் ஆறு பேர்வரை உயிரிழப்பதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, எமது நாட்டில் ஒவ்வொரு நிமிடமும் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் புதிதாக வீதிக்குவருவதாக மோட்டார் வாகனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்றைய நிலையில் பல விபத்துச் செய்திகளை தினமும் அறிந்தும், கேட்டும், பார்த்தும் இருக்கின்றோம் அவற்றில் கூடுதலான விபத்துக்கள் வாகனங்கள் வேகக்கட்டுப்பாட்டை மீறிய விபத்துக்களாகவும் காணப்படுகின்றது.

தரைவழிப் போக்குவரத்தில் தரைப் போக்குவரத்துக்காக அமைக்கப்பட்ட சாலைகளில் நடக்கக்கூடிய விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

வீதிகளில் செல்லும் வாகனங்கள் ஒன்றுக்கொன்று மோதியோ அல்லது சாலையின் ஓரங்களிலுள்ள மரம் அல்லது கட்டிடங்களில் மோதியோ கூடுதலான சாலை விபத்துக்கள் நடக்கின்றன.

விபத்தின் காரணங்களாக



வாகனத்தின் வடிவமைப்பு, வாகனம் செலுத்தப்பட்ட வேகம், சாலையின் தரம், சாலையின் வடிவமைப்பு, சுற்றுப்புறச் சூழ்நிலை, வாகன ஓட்டியின் ஓட்டுதல் திறன் மற்றும் வாகன ஓட்டியின் நடவடிக்கை ஆகியவற்றைக் கூறலாம்.

விபத்தைத் தடுக்கும்முகமாக வேகக் கட்டுப்பாடு மற்றும் போதை உட்கொண்டு வாகனம் ஓட்டுதல் போன்ற பல்வேறு நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இவற்றை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்படுகிறது.

கடந்த காலங்களைவிட இலங்கையில் தற்போது அதிகரித்துச் செல்லும் விபத்துக்களின் எண்ணிக்கை மூலம் அதிகளவான மரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

இலங்கையில் வீதி விபத்துக்கள் மூலம் ஏற்படும் மரணங்கள் பற்றிய ஆய்வில் 2008 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 17,358 மரணங்கள் பதிவாகியுள்ளன. 2008ஆம் ஆண்டு வீதி விபத்துக்களில் 2,328 பேரும், 2009ஆம் ஆண்டில் 2,413 பேரும், 2010இல் 2,721 பேரும், 2011இல் 2,677 பேரும், 2012இல் 2,444 பேரும், 2013இல் 2,362 பேரும் மற்றும் 2014ஆம் ஆண்டில் 2,413 பேரும் மரணித்துள்ளனர்.

இந்த சுமார் 7 வருட காலப் பகுதிக்குள் மொத்தமாக 17,358 மரணங்கள், வீதி விபத்துக்கள்மூலம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

குறிப்பாக வீதி விபத்துக்கள் எனப்படும்போது மோட்டார் வாகன விபத்துக்களின் எண்ணிக்கையே அதிகளவாக பதிவாகியுள்ளது. 2012ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் உள்வாங்கப்பட்ட கணிப்பீட்டின்படி, வாகனங்கள்மூலமான விபத்துக்கள்கீழ் வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

01. மோட்டார் சைக்கிள் :-1500
02. லொறி : 750
03. இரட்டைநோக்கு வாகனங்கள்: 550
04. தனியார் பஸ்வண்டி : 450
05. ஆட்டோ : 470

ஆகிய வாகனங்கள் விபத்துக்களுக்கு உள்ளாகி இருக்கின்றன.

இதற்கமைய இலங்கையில் 30 வருட காலப் பகுதியில் 1,120,848 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிக்கை குறிப்பிடுகின்றது.

இலங்கையில் சாதாரணமாக நாள் ஒன்றிற்கு 150 விபத்துக்கள் இடம்பெறுகின்றன. அதில் 5-7 மரணங்கள் பதிவுசெய்யப்படுவதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைகின்றனர் என இலங்கை வீதிப் போக்குவரத்துக்குப் பொறுப்பான பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

முக்கியமாக வீதி விபத்துக்களைப் பொறுத்தவரை 75 சதவீதமான விபத்துக்கள் மனித கவனயீனத்தாலும் அலட்சியத்தாலுமே ஏற்படுகின்றன. அதிகரித்தவேகம், ஓய்வின்மை, பாதை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை போன்ற காரணத்தால் அதிகமாக வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

01.வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்காமை:

சாரதிகளாயினும் சரி, பாதசாரிகளாயினும் சரி வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை விபத்துக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. கவனயீனத்தினாலும் ஏதோ ஒருவித அவசர நிலையாலும் மஞ்சள் கோடு, சமிக்ஞை விளக்குகள் எதையும் பொருட்படுத்தாது பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

தற்போது அதிகரித்துள்ள போக்குவரத்து நெரிசல்களை இலகுபடுத்த அரசாங்கம் மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாதை என்பவற்றை அமைத்திருப்பினும்கூட இவற்றில் எதனையும் பயன்படுத்தாது ஒருவித அலட்சியப்போக்குடன் பயணிப்பவர்களே விபத்தில் சிக்கிக் கொள்கின்றனர்.

02. கட்டுப்படுத்தமுடியாத வேகம்:

வீதி விபத்துக்களின் முக்கிய காரணிகளுள் ஒன்று அதிகரித்த வேகமாகும்.

பாதை ஒழுங்கைமீறி முந்திச் செல்ல எத்தனிக்கும் வாகனங்கள்மூலமே 75 சதவீதமான விபத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

தற்போது அபிவிருத்தியடைந்து செல்லும் வீதிகளின் விளைவாக வாகனங்களை செலுத்துவதில் சாரதிகள் ஒருவித ஈடுபாட்டை அதிகம் காட்டுகின்றனர். மற்றைய வாகனத்தை முந்திச் செல்லவேண்டும். விரைவாக இடத்தை அடையவேண்டும் போன்ற காரணங்களால் அதிகளவான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வாகனத்தை செலுத்தும் அதிவேக வேகக் கட்டுப்பாட்டு முறைகளை நகரப் பகுதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் பொருத்தியிருந்தாலும்கூட பெரும்பாலான சாரதிகள் அவற்றைக் கவனத்தில் எடுப்பது இல்லை.

03. வாகன அதிகரிப்பு நெரிசல்:

இலங்கையில் அண்மைக் காலமாக நடைமுறைப்படுத்தப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது கட்டுப்பாடற்ற வாகன இறக்குமதிக்கு வழிசெய்துள்ளது.

இதனால் அதிகரித்த வாகனப் பாவனை மற்றும் வீதிகளில் நீண்டநேர நெரிசலையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்துகின்றது. 2007- 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளின் வாகனப் பாவனையின் தரவுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

01 . 2007 - 3, 125,792
02 . 2008 - 3,390,993
03. 2009 - 3,595,058
04. 2010 - 3,954,311
05. 2011 - 4,439,732
06. 2012 - 4,877,027
07. 2013 - 5,203,678
08. 2014 - 5,633,234

சீரான வீதிப் பாவனை வழிமுறைகள் நடைமுறையில் இல்லாத இலங்கை போன்ற நாடொன்றில் இவ்வாறான அதிகரித்த வாகனப் பாவனையானது இன்று வீதி விபத்துக்களையும் போக்குவரத்து நெரிசல்களையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது.

04. ஓய்வின்மை மதுபோதை:

நீண்டதூரப் பயணங்களில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் ஓய்வு, உறக்கமின்மை போன்ற காரணத்தால் வாகனத்தைச் செலுத்தும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றது. அதேபோல் மதுபோதையுடன் செலுத்துவதாலும் விபத்துக்கள் ஏற்பட்டு மரணங்கள் சம்பவிக்கின்றன.

05. சாரதி அனுமதிப்பத்திரம்:

முறையான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பதிலாக முறைகேடான வழிகளில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் முறை இலங்கையில் நடைமுறையில் உள்ளது.

விளைவு வீதி ஒழுங்குகள் எதனையும் பற்றிய போதிய அறிவில்லாத ஒரு சாரதியாக வாகனத்தை செலுத்துவதன் மூலம் விபத்துக்கள் அதிகளவாக இடம்பெறுகின்றன.

அதுமட்டுமின்றி கைத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனம் செலுத்தல், தலைக்கவசம் அணியாது பயணித்தல் போன்றகாரணங்களாலும் மரணங்கள் ஏற்படுகின்றன. இவை அன்றாடம் பாதசாரிகளாலும் சாரதிகளாலும் ஏற்படக்கூடிய பிழைகளாகும்.

வீதி விபத்துக்கள் குறித்தும் பாதை ஒழுங்குகள் குறித்தும் எவ்வளவுதான் மக்களை அறிவுறுத்தினாலும் விழிப்புணர்வூட்டினாலும் ஒருவித அலட்சியப்போக்கினால் அவற்றைக் கடைப்பிடிக்காததன் விளைவால் விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்றதே தவிர குறையவில்லை.

கோரவிபத்துக்களை பாதைகளில் காட்சிப்படுத்தி அறிவுறுத்தி இருப்பினும்கூட விபத்துகள் குறையவில்லை என்றால் காரணம் அலட்சியப் போக்கே அன்றி வேறெதுவாக இருக்க முடியும்.

விளைவு பெறுமதியான உயிரை பறிகொடுக்கவேண்டி ஏற்படுவதோடு மரணம்மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஆற்றமுடியாத சோகத்தையும் அல்லவா விட்டுச்செல்கிறோம்?

இவை ஒன்றும் கடைப்பிடிக்க முடியாத நடைமுறைப்படுத்த கடினமான விடயம் அல்லவே. கடுமையான வீதிப் போக்குவரத்து சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல். பாடசாலை மட்டத்தில் இருந்து விழிப்புணர்வு வேலைத்திட்டங்களை நடத்துதல்.

சாரதிகளுக்கான செயலமர்வுகள் மூலம் அறிவுறுத்தல். நவீன தொழில் நுட்பங்களை வீதிச் சமிக்ஞைகளில் பொருத்தல், போக்குவரத்து துறையில் இடம்பெறும் முறைகேடுகளை முற்றாக ஒழித்தல். கடுமையான தண்டனைகளை விதித்தல் போன்ற விடயங்களினூடாக 50 சதவீதம் விபத்துக்களை குறைக்க முடியும். ஆனால் ஒவ்வொருவரும் மிகஅவதானமாக இதனைக் கடைப்பிடிக்கும்போது மாத்திரமே 90 சதவீதம் விபத்துக்களை குறைத்து அதன்மூலம் ஏற்படும் மரணங்களையும் தவிர்க்கமுடியும்.

# வடகொரியாவின் அணு ஆயுத மிரட்டலுக்கு அமெரிக்கா அடி பணியுமா?

கொரியா என்கின்ற பெரிய பிரதேசம் அமெரிக்க சோவியத் ரஷ்யாவின் பனிப்போர் படலத்தின் முதலாவது பரிசோதனைக்களம் ஆகும். 1945 ஆம் ஆண்டுவரை யப்பானிய ஆக்கிரமிப்பின்கீழ் கொரியா பிரதேசம், 2ஆம் உலக மகாயுத்த முடிவில் யப்பான் சரணாகதியுடன் சுதந்திர பிரதேசமாக எழுச்சிகண்டது. 2 ஆம் உலக மகா யுத்தத்தின் வெற்றி நாடுகள் அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரான்ஸ், பிரிட்டன் ஐ.நா. சபையில் பாதுகாப்பு சபை நாடுகளான பெரிய பட்டத்தை தட்டிக்கொண்டன.

கொரியாவுக்குச் சீன, சோவியத் ரஷ்யாவுடன் எல்லை நாடுகள் காணப்பட்டன. 1945- 50 காலப்பகுதிகளில் சோவியத் தலைவர் ஸ்ராலின் சீனத்தலைவர் மாஓ சேதுங் ஆகிய இரு தலைவர்களின் கம்யூனிச - சோசலிச சித்தாந்தங்கள் உலகின் பல நாடுகளை மட்டுமல்ல, கொரியா






பிரதேசங்களையும் ஆட்கொண்டது வியப்பொன்றுமில்லை. யப்பான் கொரிய பிரதேசத்திலிருந்து வெளியேறியவுடன் கொரியாவின் வடக்குப் பகுதியை சோவியத் யூனியனும் தெற்குப் பகுதியை அமெரிக்காவும் கைப்பற்றி ஆதிக்கத்தை நிலைநாட்டின. இரண்டு கொரியாக்களையும் ஒன்றாக இணைப்பதற்கான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இரண்டு தனியரசுகள் ஜனநாயக மக்கள் குடியரசு (வடகொரியா) என்றும் கொரியக் குடியரசு என்றும் (தென்கொரியா) உருவாகின.

கம்யூனிச சித்தாந்தத்தில் பலமடைந்த வடகொரியாமீதி பிரதேசத்தையும் விடுவிப்பதற்காக தென்கொரியா பிரதேசத்தின்மீது தாக்குதலைக் தொடுத்தது. (1950 - 1953) இரண்டு, மூன்று வருடங்களை யுத்தம் தொடர்ந்து யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. அன்றிலிருந்து கொரிய இராணுவ சூன்யமற்ற வலயம். இரண்டு நாடுகளையும் பிரிக்கின்றது.

வடகொரியா இரண்டு கோடி மக்களுக்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட நாடு. இரண்டு நாடுகளும் 1991 இல் ஐ.நா.வில் ஏற்கப்பட்டன. வடகொரியா சோசலிச திட்டமிட்ட பொருளாதார அரசியல் முறையிலும் தென்கொரியா முதலாளித்துவ ஜனநாயக முறைமையிலும் வளர்ச்சிகண்டன. வடகொரியாவுக்கு சோவியத் ரஸ்யா சீனாவின் அரசியல் பொருளாதார உதவியும் தென்கொரியாவிற்கு அமெரிக்க அரசியல் பொருளாதார இராணுவ உதவிகளும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இன்றும் அமெரிக்கப் படைகள் தென்கொரியாவில் நிலை கொண்டுள்ளது என்பது பலருக்குப் புரியாத விடயமாக உள்ளது.

இன்று அமெரிக்காவிலும் மேற்கத்தேய ஊடகங்களாலும் வடகொரியா அரசு ஒரு வில்லனாக காட்டப்படுகிறது. அந்நாடு அணு ஆயுதங்களைப் பரிசோதிப்பதாகவும் அணு ஆயுதங்களை குவிப்பதாகவும், அதன்காரணமாக உலக அமைதிக்கு பங்கம் ஏற்படுவதாகவும் ஒரு பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. 2003 ஆண்டுக்குப் பின்னர் அணுவாயுதம் பரவாமை தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் ஒரு பங்குதாரராகக் கைச்சாத்திடவில்லை. 2009இல் அணு ஆயுதம் தயாரித்ததாக வடகொரியா பிரகடனப்படுத்தியது. அத்துடன் வடகொரியாவிடம் இரசாயன உயிரியல் ஆயுதங்கள் இருக்கக்கூடும் என அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் சந்தேகம் வெளியிட்டன. 2009 இல் வெளியலகுக்கு அணு ஆயுதங்கள் பற்றி வெளியிட்டாலும் அதற்கு முன்னர் 2006 இல் அணு பரிசோதனை வெற்றிகரமாக நிறைவேறியதாக அறிவித்தது. உலகில் அணுவாயுதங்கள் வைத்திருக்கும் நாடுகளில் வடகொரியாவும் இணைந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகவராலயம் கருத்துத் தெரிவித்தது. 2013 இல் மீண்டும் வடகொரியா பலமான அணு பரிசோதனையை நடத்தியது.

இவ்வருடம் தை மாதம் மீண்டும் நிலத்தின் கீழான பரிசோதனையை வடகொரியா மேற்கொண்டதாக அமெரிக்கா தெரிவித்தது. வடகொரியாவின் பதிலடி வேறுவிதமாக இருந்தது. தாம் ஐதரசன் குண்டினை பரிசோதித்ததாகவும், இவை யாவும் மக்களின் தேவைகளுக்காகவுமே பயன்படுத்தப்போவதாக வடகொரியா தெரிவித்தது. இந்த ஆரவாரம் அடங்குவதற்கு இடையில் மாசி, 2016 இல் விண்வெளிக் கலம் ஒன்றை வெற்றிகரமாக ஏவியதாக வடகொரியா தெரிவித்தது. இதனை அமெரிக்கா, யப்பான் தென்கொரியா ஆகிய நாடுகள் கண்டித்துள்ளன. சீனா, இதனை விமர்சித்தாலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படாதவகையில் இப்பிரச்சினை கையாளப்பட வேண்டும் எனக்கூறுகிறது.

அமெரிக்க அதிபர் வடகொரியாவுக்கு எதிரான சில தடைகளை அறிவித்துள்ளார். வடகொரியாவுக்கு அணு ஆயுதங்களை உற்பத்திசெய்வதற்கான நிதி கிடைப்பதை தடைசெய்ய வேண்டுமென அமெரிக்கா கூறுகிறது. இதுதொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளும் இராஜதந்திர முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

முதன்முதலாக அமெரிக்கா ஐரோப்பிய தடை 2006 இல் வடகொரியாவுக்கு எதிராக பிரயோகிக்கப்பட்டது. அதன்பிரகாரம் ஆயுத உற்பத்தி அணு ஆயுத தயாரிப்பில் பயன்படுத்தப்படும் பண்டங்களும் உபகரணங்களையும் தொடர்புபடும் தனி நபர்களுக்கான பிரயாணத்தடை, சொத்து முடக்கம், இதேபோன்று, நிறுவனங்களுக்கான தடை, சொத்து முடக்கம், அணு ஆயுத உற்பத்திக்கு பயன்படும் மூலப் பொருட்கள், தொழில்நுட்பத்துக்கான தடை, ஆடம்பரப் பொருட்கள் பெறுமதியான பொருட்கள் தடை.

இத்தடை ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்துக்கமையவே அமுல்படுத்தப்பட்டது. ஐ.நா. தடைக்கு மேலதிகமாக அமெரிக்காவின் தன்னிச்சையான தடை காலத்துக்கு காலம் அமெரிக்காவில் பிரயோகிக்கப்பட்டது. வடகொரியா உலகப் பயங்கரவாதத்தை வளர்த்துப் போசிக்கும் நாடாக அமெரிக்கா பிரகடனப்படுத்தியது.

வடகொரியாவை போக்கிரி நாடாக அறிவித்தது. அமெரிக்கா, EU போன்ற நாடுகளும் UN சபையும் பொருளாதாரத் தடைகளை இறுக்கினாலும் வடகொரியா நிமிர்ந்துதான் நிற்கிறது. வடகொரியாவின் சுயபொருளாதாரமும் சீனாவுடன் நெருங்கிய அரசியல் பொருளாதார இராணுவ உதவிகளும் வடகொரியா சவால்களைச் சமாளிக்கஉதவுகின்றது. வடகொரிய சீன எல்லை, வடகொரியா - சீன வர்த்தகத்துக்குப் பெரும் பாலமாக விளங்குகின்றது. 1950 களில் வடகொரியா, தென்கொரியாவின்மேல் ஆக்கிரமிப்புச்செய்து தென்கொரியா பிரதேசத்துள் சென்றது. அமெரிக்கப் படைகள் தடுத்துநிறுத்தியது. வடகொரியப் படைகள் பின்வாங்கின. சீனப் படைகள் யுத்தத்தில் தலையிட்டு அமெரிக்கப் படையினரை பின்வாங்கச் செய்தது. இதுவே கொரிய யுத்தம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் 1950 - 53 யுத்தமாகும். இந்த யுத்தத்தின்போது சீனாவுக்கு இயற்கை இறப்பர் தேவைப்பட்டது. இக்காலகட்டத்தில் இலங்கைக்கு அரிசி தேவைப்பட்டது. இதன் விளைவாக உருவாகியது இலங்கை - சீன, அரிசி - இறப்பர் ஒப்பந்தம் என்பது நினைவு கூரத்தக்கது.

— தேவ தர்மா —

# பெண் என்னும் பகடைக்காய்

“இப்படித்தான் இருக்கவேணும் பொம்பள...” - எம்.ஜி.ஆர். நடித்த ஒரு திரைப்படப் பாடல். எழுதியவர் கவிஞர் மருதகாசி. அந்தப் பாடல், பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டும், எவ்வாறு உடை உடுத்த வேண்டும் என்று விலாவாரியாகச் சொல்லிச் செல்கிறது.


அதற்கும் முந்தைய பழைய பாடல் ஒன்று “புருஷன் வீட்டில் வாழப் போகும் தங்கச்சி கண்ணு”க்கு புத்திமதிகளாகச் சொல்லி முழங்குகிறது. இந்தக் கருத்துகளைத்தான் ‘பின் தூங்கி முன் எழுவாள் பத்தினி’ என்கிற பழமொழியும் வழிமொழிகிறது.

“இதையெல்லாம் ஏன் இப்போது கிளறி தூசு தட்டவேண்டும்?” என்று கேட்பது புரிகிறது. ஆனால், என்ன செய்ய? காலம் அப்படியேதானே இருக்கிறது. பெண்கள் எல்லாம் முன்புபோல் இல்லை, படித்து வேலைக்குப் போய் சம்பாதித்துக் கொண்டுவந்து குடும்பத்தையும், அதன் சுமையையும் தங்கள் தோள்களில் சுமக்கத் தயாராகிப் பல ஆண்டுகளாகிவிட்டன. ஆனால், ஆண்கள் மட்டும் 40 ஆண்டுகள் பிந்தையவர்களாக, தங்கள் பழமை மாறாத சிந்தனைகளுடன் அப்படியே தேங்கிப் போயிருக்கிறார்கள். இதை நான் சொல்லவில்லை. தங்கள் செயல்களாலும், சொற்களாலும் அவர்களே நிரூபித்துக்கொண்டு இருக்கிறார்கள். கால மாறுபாட்டுக்கு ஏற்ப தங்கள் உணவு, உடை, பழக்கவழக்கங்கள் அனைத்தையும் மாற்றிக்கொள்ளும் சமூகம், பெண் என்று வரும்போது மட்டும், மாறாத பழமையைப் போதிக்கிறது.

விஞ்ஞான வளர்ச்சி நவீன

**- காத்தார் -**

தகவல் தொடர்பு சாதனங்களைக் கையடக்கமாக உள்ளங்கைக்குள் கொண்டுவந்து சேர்த்தபோதும் அவற்றைப் பழமைவாதச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கே பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி விவாதங்கள், வட்ஸ் - அப் இங்கெல்லாம் ‘கருத்து கந்தசாமிகள்’ பல்கிப் பெருகியிருக்கிறார்கள். பெண்கள் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவதற்காக இந்தச் சாதனங்களைப் பயன்படுத்த முனையும்போது பொறுத்துக்கொள்ள



முடியாமல் பொங்கி எழுகிறார்கள். ஒரே அடியில், பெண்ணின் நடத்தை சார்ந்து மிக எளிதாக அமிலமென வார்த்தைகளை அள்ளி இறைக்கவும் அவர்களால் முடிகிறது.

பெண்கள் சிந்தனையளவில் தங்களைவிட ஒரு படி மேலே இருந்தால் அதை ஆண்களால் ஏற்க முடிவதில்லை. சொற்களால் இழிவுபடுத்துவது, மோசமானவள் என்று பட்டம் சூட்டுவது, இப்படி உடை உடுத்திக்கொள், அடக்கமாக இரு, துப்பட்டா போட்டுக்கொள், குர்த்தாவின் மேல் பொத்தானைப் போடு, தாவணி அல்லது சேலை கட்டிக்கொள் என்று ஆணைகள் பிறப்பித்துக்கொண்டே இருக்கிறார்கள். ஆணையிடும் வர்க்கம் அல்லவா ! காலங்காலமாக இரத்தத்தோடு ஊறிக் கலந்துபோன பழக்கத்தை மாற்றிக்கொள்வது கொஞ்சம் சிரமம்தான்.

பெண்ணுக்கென்று சொந்தமாகக் கருத்துகள், ஆசைகள், அபிலாஷை கள் எதுவும் இருக்கக்கூடாது. மூடப் பழக்கவழக்கங்கள், பிற்போக்குக் கருத்துகள் இவை பற்றிப் பெண் பேசக்கூடாது. சொந்த சிந்தனையோ, சுயபுத்தியோ இல்லாமல், பிடித்து வைத்த களிமண் உருண்டைகளாக, சொல்வதை மட்டும் கேட்டுக்கொண்டு, அடங்கிப் போகவேண்டும் என்பதாகவே அவர்களின் எதிர்பார்ப்பு இருக்கிறது.

பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம் என்ற பெயர்களில் இழுத்துப் போர்த்திக்கொண்டு குடும்பக் குத்து விளக்குகளாகப் பெண்கள் இருக்க வேண்டும் என்று நினைக்கும், எதிர்பார்க்கும் அதே மனங்கள்தான், அந்நியப் பெண் ஒருத்தியை நடுத் தெருவில் கோழியைப்போல உரித்து நிர்வாணப்படுத்திப் பார்க்கவும் நினைக்கிறது என்பது எத்தனை முரண்! எங்கிருந்தோ ஒரு பெண், நாடுகள், கண்டங்கள் பல கடந்து இங்கு கல்வி கற்பதற்காக வந்தாள் என்றால், அந்த நாட்டின் மீதும், அதன் குடிமக்கள் மீதும் உள்ள நம்பிக்கையுணர்வும் அதற்கு முக்கிய காரணங்களில்லையா? ஏதோ ஒரு காரணம் கிடைத்தாலும்போதும், பெண்ணைக் குழிதோண்டிப் புதைக்க. பெண்ணை தெய்வம் என்று உயர்த்திப்போற்றும் அதே மனம் காலில்போட்டு மிதிக்கவும் தயங்குவதில்லை. நம் கோயில்களில் பயபக்தியுடன் கும்பிட்டு முடித்த அடுத்த நொடியே, கலை நிகழ்ச்சிகள், இசைக்கச்சேரிகள் என்றபெயர்களில் குத்தாட்டங்களையும், ரெக்கோர்ட் டான்ஸ்களையும் ரசிப்பது என்ன மாதிரியான வடிவமைப்பு என்று புரியவில்லை. எதிரெதிர் துருவங் களாக இந்த மனங்கள்தான் எப்படி எல்லாம் செயற்படுகின்றன.

நீ பெண், நீ இப்படித்தான் இருக்கவேண்டும், உனக்கான உலகம் மிகக்குறுகியது, இருள் சூழ்ந்த உலகம் உன்னுடையது, மற்றவர்களுக்குப் போக எஞ்சிய மிச்ச மீதங்களே உனக்கு உரியவை, நீ அடிமையாக வாழப் பிறந்தவள், இவற்றைத்தான் ஆண் உலகம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டும், பெண்மீது வலிந்து திணித்துக்கொண்டும் இருக்கிறது.

இப்போது அந்தப் புகழ் மகுடத்தில் மற்றுமோர் புதிய மயிலிறகாக, ‘நீ ஒருவனைக் காதலித்தால், கலப்பு மணம் செய்துகொண்டால், நீ எங்கள் மகளாகவோ, சகோதரியாகவோ இருந்தாலும், எங்கள் ‘கௌரவ’த்தைக் காப்பாற்றிக்கொள்ள உன்னைக் கொல்வோம், அல்லது நீ விரும்பிய உன் துணைவனைக் கொன்று வீசவும் தயங்கமாட்டோம்’ என்று பட்டவர்த்தனமாகக் கொக்கரிக்கிறது. அதைப் பொதுவெளியில் பதிவேற்றி சாதிப் பெருமையாக நிலைநிறுத்தவும் முனைகிறது. அபத்தங்கள் எல்லாம் அசகாய சூரத்தனங்களாக அவர்களுக்குத் தோன்றுகின்றன.

யுகம் யுகமாக இந்தப் பாலினப் பாகுபாடுதான் முகத்தில் அறையும் நிஜமாக இருக்கிறது. உலகெங்கிலும் ஆண்களின் கால்களுக்குக் கீழே தள்ளி மிதிக்கத்தக்க நிலையில்தான் பெண் சமூகம் அடிமைச் சமூகமாக நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

வேர்கொண்டு பூமிக்குள் அழுந்தி நிற்கும் இந்தப் பாகுபாட்டின் சல்லி வேர்களையும் மிச்சமில்லாமல் கிள்ளி வீசவேண்டும் என்பதுதான் நம் பேரவா. அதற்காக எத்தனை அவ மானங்களையும் ஏற்போம். அவன் ஆண் அவன் எப்படியும் இருக்கலாம் என்ற பம்மாத்துகளையும் சேர்த்தே நொறுக்குவோம். கல்ப கோடி ஆண்டுகள் கடந்தாலும் விட்டுவிடுவதாக இல்லை.

---



# உலகின் மிகப் பெரிய உற்பத்தி ஆலை!

குஜராத் மாநிலத்துக்குப் பல பெருமைகள் உண்டு. இப்போது உலகின் மிகப் பெரிய ஸ்கூட்டர் தயாரிப்பு ஆலை உள்ள மாநிலம் என்ற பெருமையும் சேர்ந்துள்ளது. இந்த பெருமையை ஜப்பானைச் சேர்ந்த ஹோண்டா நிறுவனத்தின் துணை நிறுவனமான ஹோண்டா ஸ்கூட்டர்ஸ் இந்தியா அளித்துள்ளது.

இந்தியாவில் இந்நிறுவனம் தொடங்கும் நான்காவது தொழிற்சாலை இதுவாகும். 250 ஏக்கர் பரப்பளவில் 13 மாதத்தில் உருவான இந்த ஆலையில் ரூ. 1,100 கோடியை ஹோண்டா முதலீடு செய்துள்ளது. இந்த ஆலை ஆண்டுக்கு 6 லட்சம் ஸ்கூட்டர்களைத் தயாரிக்கும் திறன்கொண்டது. இதை 12 இலட்சமாக உயர்த்தமுடியும்.

இந்த ஆலையைச் சுற்றி ஸ்கூட்டர் தயாரிப்புக்குத் தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் 22 நிறுவனங்களும் ஆலைகளை அமைத்துள்ளன.

ஹோண்டா நிறுவனம் இந்தியாவில் அமைத்துள்ள நான்காவது ஆலை இதுவாகும். இந்த ஆலை மூலம் 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

டெல்லியில் நடந்துமுடிந்த ஆட்டோ எக்ஸ்போவில் இந்நிறுவனம் நவி எனும் புதிய ரக மோட்டார் சைக்கிளை காட்சிப்படுத்தியிருந்தது. இது ஏப்ரல் மாதம் சந்தைக்கு வரும் என அறிவித்திருந்தது. இந்த புதிய மாடல் நவி மோட்டார் சைக்கிளை ராஜஸ்தான் மாநிலம் தபுகரா ஆலையில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிறுவனத் தயாரிப்புகளுக்கு இந்தியச் சந்தையில் மிகுந்த வரவேற்பு உள்ளது. இதனால் முந்தைய மூன்று ஆலைகளும் முழு உற்பத்தித் திறனை எட்டியபோதிலும் தேவையை முழுமையாக பூர்த்தி செய்யமுடியவில்லை.

இதையடுத்தே நான்காவதாக தொடங்கிய ஆலையை உலகிலேயே பெரிய ஆலையாக இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. தற்போது ஹோண்டா நிறுவன தயாரிப்புகள் 30 ஆயிரத்துக்கு தட்டுப்பாடு நிலவு கிறது. இதனால் பதிவு செய்துவிட்டு காத்திருக்கவேண்டியுள்ளது. புதிய ஆலைமூலம் காத்திருப்போர் பட்டியலை முற்றிலுமாக நீக்கமுடியும் என ஹோண்டா நம்புகிறது.

மோட்டார் சைக்கிளைவிட ஸ்கூட்டருக்கான சந்தை விரிவடைந்து வருவதைக் கருத்தில்கொண்டு முழுவதும் ஸ்கூட்டர்களை தயாரிக்க உலகிலேயே பெரிய ஆலையை ஹோண்டா நிறுவனம் திறந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வாரமொரு வாழ்வியற்

# சிந்தனை

# கட்டிளம் பருவத்தினை கையாள்வது எப்படி?

குடும்பம், நாடு, சமயம், பண்பாடு போன்ற பல்வேறு தத்துவக் கருத்துக் கோட்பாடுகளின் உண்மைகளை நன்கு அறிந்து மதிக்கத் தொடங்கு கின்றனர். ஒழுக்கம், கட்டுப்பாடு, நீதி, நேர்மை போன்ற அறவாழ்வுச் சிந்தனைகளும், இறைவன், பாவம், நன்மை போன்ற சமயம் சார்ந்த சிந்தனைகளும் இப்பருவத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றன.

இளையோர் பருவம் அல்லது கட்டிளமைப் பருவம் எல்லா வகை யிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எண்ணற்ற பிரச்சினைகள் ஏற்படும் இப்பருவத்தில் நல்ல முறை யில் இப்பருவத்தை அமைப்பது மிகவும் முக்கியமான விடயமாகும்.


**கட்டிளமைப் பருவத்தில் இளம் குற்ற நடத்தை**

- பிள்ளைகள் 7 அல்லது 8 வயதை அடையும்போது இளம் குற்ற நடத்தைக்கான விதை விதைக்கப்படுகிறது.
- ஆய்வின்படி 14 வயது வரையுள்ள பிள்ளைகள் 50 வீதம் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை, அன்பு, ஆதரவினைப் பெற்றிருக்கின்றனர்.
- பூப்பின் தோற்றத்தில் இருந்து கட்டிளமைப் பருவத்தினரின் ஆர்வம், சமூகத் தொடர்பு விரிவடைவதால் தம்மை முதிர்ந்தவராக மதிக்க வேண்டும் என்ற மனப்பாங்கு ஏற்பட்டு சுதந்திரம் பெறுவதற்கான ஆர்வம் தடைசெய்யப்படும்போது வன்முறைத் தாக்குதல்களிலும், எதிர்ப்புகளிலும், சமூக எதிர் செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

**இளம் குற்ற நடத்தைக்கான காரணங்களை அறிதல்**

1. குறைந்த மனவெழுச்சிப் பொருத்தப்பாடுகளால் வீட்டில் உள்ள பிள்ளைகள் குற்றங்கள் புரிதலுக்கு ஆளாகின்றனர். சிறந்த பெற்றோர் பிள்ளைகள் உறவு இல்லாதபோது குற்ற நடத்தை ஏற்படுவது தவிர்க்க முடியாதது.

2. சூழ்நிலைக் காரணிகள் குற்றம் உருவாக காரணமாக உள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டும். கட்டுப்பாடற்ற மற்றும் பிழைசெய்யத்



தூண்டும் நிலைமை மலிவாகும் போது கட்டிளமைப் பருவத்தினர் தமது இச்சைகள், ஆசைகளை, சமூகநெறிக்கு மாறாக செய்ய வாய்ப்புள்ளது.

3. சமூகவியல் காரணிகள் வீட்டில் நிலவும் மோசமான ஒழுக்க நடத்தை பெற்றோர்கள் பிள்ளைகளைப் புறக்கணித்தல். பெற்றோர்கள் பிள்ளைகள்பால் கொண்டுள்ள உடைமை மனப்பாங்குகள் குழந்தைக்கு அல்லது இளவயதினருக்கு நாம் பின்பற்றக்கூடிய வகையில் ஒழுக்க நெறியினையுடைய முன்மாதிரி ஒன்றும் இல்லாமை குற்றங்களின் பால் இட்டுச் செல்கிறது..

♦ மோசமான ஒழுக்க நடத்தையுள்ள வீட்டுச்சூழல் வீட்டில் செல்லமும், தீவிரமான கட்டுப்பாடும் கலந்திருப்பதனையும், பெற்றோர்கள் தீவிரமான கட்டுப்பாட்டினையும், ஆதிக்கத்தினையும் செலுத்துபவர் களாக இருப்பதனையும் இது குறிக்கிறது. இந்நிலையில் குழந்தை மேலோட்டத்திலும் சாந்தமாகவும், நல்ல நடத்தையினை உடையதாகவும் காணப்படினும் உண்மையில் உளச் சிக்கல்களும், கிளர்ச்சித் தன்மையும் அவ்வாறான குழந்தையில் காணப்படும்.

♦ பெற்றோர்கள் குழந்தைகளை தமது சொத்தாக நினைத்து தாம் விரும்பும் வண்ணம் செயற்பட வேண்டும் என விரும்புவது அதனை அடங்காத எதிர்த்தெழுகின்ற தன்மையினையுடையதாக மாற்றி விடுகின்றது.

♦ பொருளாதாரத் தேடல், நெருக்கடிமிக்க வாழ்க்கை அமைப்பில் குழந்தைகள் அல்லது இளம் பருவத்தினர் தமக்கான அன்பு, உறவு வீட்டின் உள்ளே கிடைக்காத போது வெளியே தேடிச் செல்வதால் பிறழ்வான நடத்தை, தீயவர்களின் நட்பினால் வழி கெடுதல் போன்றவற்றால் குற்றங்களைப் புரிகின்றனர்.

குறிப்பு: இளம் குற்றநடத்தை அல்லது பருவ வயதில் ஏற்படும் பிரச்சினைகள் அல்லது சமூக நெறிக்கு எதிரான நடத்தை என்பது கட்டிளமைப் பருவத்தினர் வேண்டும் என்றே புரிவது கிடையாது. பரந்த உடலியல் மாற்றத்தால் ஏற்படும் ஏனைய மாற்றங்களின் விளைவுகள், சூழ்நிலை மற்றும் உள,சமூகவியல் காரணிகளே இதற்கு முழுக்க முழுக்கக் காரணமே அன்றி கட்டிளமைப் பருவத்தினரோ அல்லது இளம் பராயத்தவர்களோ அல்ல.

இளம்சாராரின் குற்றங்கள் அல்லது தவறுகளுக்கு குறித்த நபரை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் எந்த எதிர் நடவடிக்கையும் விடயம் பெரிதாகுதல், வளர்தல், குற்றம் புரிவதற்கான மாற்று ஒழுங்கு, சமூக நெறி சிதைதல் போன்றவற்றை நிச்சயம் ஏற்படுத்தும்.

எமது சூழலில் இளம் குற்ற நடத்தைகளுக்கு தண்டனைக்குரிய நிர்வாகம் சார்ந்த நோக்குகள் உள்ளனவேயொழிய, அதற்கான கல்விசார்ந்த, உளவியல் சார்ந்த ஏதும் காணப்படுவது இல்லை.

இளவயதினருக்கு இவர்களது தவறுகளுக்கு தேவையானது சீர்திருத்தமே அன்றி தண்டனை இல்லை. மேலும் அவர்களை குணப்படுத்துவதில் எந்தவொரு பொது நோக்கும் பயன்படாது என்பதனையும் நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக ஒவ்வொரு குற்றமும் சமூக சூழ்நிலையின் விளைவே. ஆதலால் சமூக சூழ்நிலையினை மாற்றவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

(தொடரும்...)

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

### குறுக்கெழுத்துப் போட்டி - 665

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | | | | 24 |
| | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

### குறுக்கெழுத்துப் போட்டி 663 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 து | 2 ஸ் | 3 ய | 4 ந் | 5 த | 6 ன் |
| 7 வா | 8 க் | 9 கா | 10 த | 11 டு | 12 ல் |
| 13 ர | 14 ணி | | 16 அ | 17 ல் | 18 வ |
| 19 கா | 20 பீ | | 22 ம் | 23 ர | 24 வ |
| 25 பு | | 27 ல் | 28 ர | 29 அ | 30 ல |
| 31 ரி | 32 டா | 33 சா | 34 கா | 35 ட் | |

**மேலிருந்து கீழ்**

1. இந்த சத்துக்குறைபாட்டால் இரத்தச்சோகை நோய் ஏற்படுகின்றது.
2. இரவில் வீட்டு மூலை முடுக்குகளில் இது கட்டப்பட்டிருக்கும். (குழம்பியுள்ளது)
3. சத்துள்ள கிழங்கு வகை ஒன்று. (குழம்பியுள்ளது)
5. குறிப்பேடு (ஆங்கில உச்சரிப்பு குழம்பியுள்ளது)
18. "........... காரியம் சிதறாது" (திரும்பியுள்ளது)
27. நீர் இறைக்கும் இயந்திரம். (திரும்பியுள்ளது)
29. ஒரு கிரகம்.

**இடமிருந்து வலம்**

01. தான் எடுத்துக் கொண்ட பணியை முறையாகச் செய்வது.
7. "........... பூனை அடுப்பங்கரையை நாடாது"
13. வறுமை. இன்மை. (குழம்பியுள்ளது)
19. ஊன். புலால்.
26. இளவேனில். ஒரு ராகம்.(குழம்பியுள்ளது)
31. -210°C வெப்பநிலையில் உள்ள புளூட்டோ கோளை இப்படி அழைக்கப்படுகிறது. (திரும்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 07.03.2016 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 665
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.663 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம்.அப்சரா,
ஹட்டன்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. என்.அஸ்வர், பிரதான வீதி, நிந்தவூர்.
02. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
03. அ.கவிவரதன், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.
04. என்.சேத்தன், பூவரசங்குளம், வவுனியா.
05. டி.நிசாந்தினி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
06. ப.உருத்திரகுமார், ரெட்பானா, விசுவமடு.
07. இ.அபிராமி, பசல்ஸ் லேன், வெள்ளவத்தை.
08. யோ.வரதராஜா, எட்டியாந்தோட்டை.
09. சி.வர்ணன், நீர்வேலி, யாழ்ப்பாணம்.
10. ய.ரம்மியா, கோவில் வீதி, தெல்லிப்பளை.



## தமன்னாவுடன் பள்ளிக்குச் செல்லும் கா

கார்த்தி நடிப்பில் தற்போது உருவாகியுள்ள படம் தோழா. இதில் கார்த்தி ஜோடியாக பையா, சிறுத்தை ஆகிய படங்களில் நடித்து அவருக்கு ராசியான ஜோடி எனப் பெயர் எடுத்த தமன்னா நடித்துள்ளார். மேலும் நீண்டநாட்களுக்குப் பிறகு நாகர்ஜுன் தமிழில் நடித்திருக்கிறார். ஒரு மாற்று திறனாளிக்கும், மனரீதியாக பெரும் போராட்டத்தில் ஈடுபடும் ஒருவனுக்கும் நடக்கும் போராட்டமே "தோழா" படத்தின் கதையாக உருவாக்கி

இருக்கிறார்கள். இப்படத்தின் டீசர் வெ
ரசிகர்களிடையே வரவேற்பு பெற்றுவருகி
இந்நிலையில் இப்படத்தின் இசையை 2
வெளியிடவும் படக்குழுவினர் முடிவுசெய்
இந்த விழாவை கார்த்தி சிறுவயதில்
பள்ளியான சென் பீட்ஸ் பள்ளியில் நட
படக்குழுவினர் முடிவு செய்திருக்கின்றன
றுவயதில் படித்த பள்ளிக்கு நாயகி த
கார்த்தி அழைத்துவர இருக்கிற
இந்த பள்ளியில் படிக்கும்
மாணவர்கள் முன்னி
படத்தின் ஓடியோ
என்றும் கூறப்ப
பி.வி.பி நி
தயாரித்து
இப்படத்
இயக்கிய
கோபி
இசைய
இப்படத்
வினோத்
செய்து
பிரகாஸ்
விவேக்,
மறைந்த
கல்பனா ஆ
முக்கிய கதா
நடித்திருக்கிறா





## தனுஷே ஒன்றும் சொல்லாமல் தான் இருக்கிறார் நான் என்ன சொல்ல? ஜீவா கோபம்

திருநாள், போக்கிரி ராஜா, கவலை வேண்டாம் என வரிசையாக படங்களில் நடித்துவருகிறார் ஜீவா. இதை தொடர்ந்து வெற்றிமாறன் இயக்கத்தில் தனுஷ் நடிக்கும் வடசென்னை படத்தில் முக்கியமான கதாபாத்திரத்தில் ஜீவாவை நடிக்க கேட்டுள்ளனர்.

ஆனால், அவர் இதுகுறித்து ஏதும் கூறவில்லை, சமீபத்தில் இப்படம் பற்றி பேசுகையில், "தனுஷே வடசென்னை படம் நடிப்பது குறித்து ஏதும் கூறவில்லை. அந்த படம் எப்போது ஆரம்பிக்கும் என இன்னும் தெரியவில்லை, அப்படியிருக்க எப்படி நான் அந்த படத்தை பற்றி பேசுவது" எனக் கோபமாக பதில் கூறினாராம்.

## அதிக திரையரங்குகளில் கணிதன்?

அதர்வா நடிப்பில் இந்த வாரம் திரைக்கு வரவிருக்கும் படம் கணிதன். ஏற்கனவே இவர் நடிப்பில் கடந்த வருடம் வந்த ஈட்டி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. இதை தொடர்ந்து இந்த படத்திற்கும் நல்ல வரவேற்பு இருந்து வருகின்றது.

இப்படம் தமிழகத்தில் மட்டும் சுமார் 400 திரை யரங்கு களுக்கு மேல் வெளிவரவிருக்கின்றதாம். இதுவரை வெளிவந்த அதர்வா படங்களில் இவை தான் அதிக திரையரங்கு எனக் கூறப்படுகின்றது.



## மிருதன் திரை

### திரை விமர்சனம்



நடிகர் : ஜெயம் ரவி, நடிகை : லட்சுமி மேனன், இயக்குனர் : சக்தி சௌந்தர்ராஜன், இசை : டி.இமான், ஒளிப்பதிவு : வெங்கடேஷ்

ஊட்டியில் டிராபிக் எஸ்.ஐ. ஆக இருக்கும் ஜெயம் ரவி, தங்கை அனிகாவுடன் வாழ்ந்து வருகிறார். தங்கைக்காக எதையும் தியாகம் செய்யக்கூடியரான ஜெயம் ரவி, ஒரு விபத்தில் டாக்டரான லட்சுமிமேனனை சந்திக்கிறார். இருவரும் அப்போதிலிருந்து ஒருவருக்கொருவர் காதல்வயப்பட்டு விடுகிறார்கள்.

இந்நிலையில், தொழிற்சாலையில் இருந்து கெமிக்கல் ஏற்றிச்செல்லும் ஒரு லொறியிலிருந்து கெமிக்கல் வெளியே கொட்டிவிடுகிறது. இந்த கெமிக்கலை ஒரு நாய் ஒன்று குடிக்க, அதனால், அந்த நாய் வெறிபிடித்து ஒரு மனிதரை கடித்து விடுகிறது.

கடிபட்ட மனிதனின் உடலுக்குள் பரவிய அந்த வைரஸ், அவருக்குள் ஒருவிதமான மாற்றத்தை ஏற்படுத்த அவர் மற்றவர்களை கடிக்க ஆரம்பிக்கிறார். இதனால் அந்த வைரஸ் ஊர் முழுக்க பரவுகிறது.

# ... செல்லும் கார்த்தி

...கிறார்கள். இப்படத்தின் டீசர் வெளியாகி ...ர்களிடையே வரவேற்பு பெற்றுவருகிறது. ...லையில் இப்படத்தின் இசையை 26ஆம் திகதி ...ியிடவும் படக்குழுவினர் முடிவுசெய்துள்ளனர். இந்த விழாவை கார்த்தி சிறுவயதில் படித்த ...ியான சென் பீட்ஸ் பள்ளியில் நடத்த ...குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர். தான் சி- ...யதில் படித்த பள்ளிக்கு நாயகி தமன்னாவை கார்த்தி அழைத்துவர இருக்கிறார் என்றும் இந்த பள்ளியில் படிக்கும் சுமார் 2500 மாணவர்கள் முன்னிலையில் இந்த படத்தின் ஓடியோ வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

பி.வி.பி நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தை வம்சி இயக்கியிருக்கிறார். கோபி சுந்தர் இசையமைத்துள்ள இப்படத்திற்கு வினோத் ஒளிப்பதிவு செய்துள்ளார். பிரகாஸ்ராஜ், விவேக், ஜெயசுதா, மறைந்த நடிகை கல்பனா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள்.



# யாக்கை விரைவில்...

யட்சன் படத்திற்குப் பிறகு கிருஷ்ணா நடிப்பில் தற்போது உருவாகியுள்ள படம் யாக்கை. இதில் கிருஷ்ணாவுக்கு ஜோடியாக ஸ்வாதி நடித்துவருகிறார். இப்படத்தை "ஆண்மை தவறேல்" படத்தை இயக்கிய குழந்தை வேலப்பன் இயக்கி வருகிறார்.

விறுவிறுப்பாக நடந்து வந்த இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது முடிந்துள்ளது. இதை நடிகர் கிருஷ்ணா உறுதிப்படுத்தியுள்ளார். படத்திற்கான பின்னணி வேலைகளை தீவிரம் காட்ட படக்குழு முடிவுசெய்துள்ளனர். விரைவில் இப்படத்தின் பாடல்கள் மற்றும் டீசர் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யுவன் ஷங்கர் ராஜா இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். இவருடைய இசையில் உருவான "நீ..." எனத் தொடங்கும் பாடல் காதலர் தினத்தை முன்னிட்டு வெளியானது. இது ரசிகர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றது. மேலும் ஐ டியூன் தமிழ் அட்டவணையில் முதல் இடத்துக்கு வந்தது மட்டுமல்லாமல், யூடியூபில் ஒரு லட்சம் பார்வையாளர்களால் பார்க்கப்பட்டுள்ளது.





...கிறார்

...களில் ...னுஷ் ...வ நடிக்க ... பற்றி ...வில்லை. ...யிருக்க ...ினாராம்.

...ிதன்?

... ஏற்கனவே ...ற்பை

நடிகை நித்யா மேனன் கைவசம் நிறைய படங்கள் உள்ளன. தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய 3 மொழிபடங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறார். தமிழ் ரசிகர்களிடம், ஓ காதல் கண்மணி, காஞ்சனா-2 படங்கள் அவரை பிரபலப்படுத்தியது.



# விரைவில் டைரக்டர் ஆவேன் நித்யா மேனன் பேட்டி

"நூற்றியென்பது, வெப்பம், மாலினி 22 பாளையங்கோட்டை, ஜே.கே எனும் நண்பனின் வாழ்க்கை போன்ற படங்களிலும் நடித்து இருக்கிறார். தற்போது சூர்யாவுடன் 24 என்ற படத்தில் நடிக்கிறார். விரைவில் டைரக்டராகப்போவதாக நித்யா மேனன் அறிவித்தார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டி வருமாறு:-

எனக்கு கதைகள் எழுதுவதில் ஆர்வம் உண்டு. ஓய்வுநேரங்களில் நல்ல நல்ல கதைகளை எழுதிவருகிறேன். இந்த கதைகளை வைத்து விரைவில் படங்கள் இயக்கத் திட்டமிட்டுள்ளேன். இப்போது நிறைய படங்களில் நடித்துக்கொண்டு இருக்கிறேன். எனக்கு மார்க்கெட் இருப்பதுவரை நடிப்பேன். படங்கள் குறைந்ததும் டைரக்டர் ஆகிவிடுவேன். படப்பிடிப்புகளில் காட்சிகளை எப்படி எடுக்கவேண்டும் என்று கற்றுக்கொண்டுவிட்டேன்.

டைரக்டர்கள் என்னிடம் கேட்டால் அவர்கள் எடுக்கும் படத்தில் திருத்தங்கள் சொல்கிறேன். அந்தளவுக்கு எனக்கு கதை அறிவு உள்ளது. நல்ல படங்கள் அதிகம் வரவேண்டும். அதற்காகத்தான் நான் டைரக்டராகப் போகிறேன். நான் குள்ளமாக இருப்பதாக பலர் பேசுகின்றனர். இதனால் எனக்கு வருத்தம் இல்லை. என்னுடன் துல்கர் சல்மான், நிதின், சந்தீப் மேனன் உட்பட பல கதாநாயகர்கள் நடித்து இருக்கிறார்கள். எல்லோருமே உயரமானவர்கள். சில காட்சிகளை ஸ்டூலில் என்னை நிற்க வைத்துதான் படமாக்குகின்றனர். நான் குள்ளமாக இருப்பதால் உயரமாக இருப்பவர்கள் என்மீது அக்கறை காட்டுகின்றனர்.

# விக்ரம் படத்தில் பிரம்மாண்ட சுரங்கம்

விக்ரம் தற்போது ஆனந்த் ஷங்கர் இயக்கிவரும் "இருமுகன்" படத்தில் நடித்துவருகிறார். இதில் நயன்தாரா, நித்யா மேனன் என இரண்டு கதாநாயகிகள் நடித்துவருகின்றனர். ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்துவரும் இப்படத்துக்கு ஆர்.டி. ராஜசேகர் ஒளிப்பதிவுசெய்து வருகிறார். மலேசியாவில் விறுவிறுப்பாக நடந்துவந்த முதல் கட்ட படப்பிடிப்பு சமீபத்தில் முடிந்தது. தற்போது 2ஆம் கட்ட படப்பிடிப்பை சென்னையில் நடத்திவருகிறார்கள். இதில் பிரம்மாண்டமான சண்டைக் காட்சி ஒன்றை எடுத்துவருகின்றனர். இதற்காக சுரங்கம் போன்ற செட் ஒன்று அமைத்து அதற்குள் படமாக்கிவருகிறார்கள். சுரங்க அரங்கினை "க்ரிஷ் 3" படத்துக்கு கலை இயக்குனராக பணியாற்றிய சுரேஷ் செல்வராஜ் அமைத்திருக்கிறார். சண்டை வடிவமைப்பை "ஜெய் ஹோ" படத்துக்கு சண்டை வடிவமைப்பாளராக பணியாற்றிய ரவி வர்மா அமைத்து வருகிறார். தமிழ் திரையுலகில் இதுவரை யாருமே இவ்வளவு பெரிய சுரங்கம் அரங்கு அமைத்து காட்சிகளை படமாக்கியது இல்லை என்று படக்குழுவினர் கூறுகிறார்கள். ஜூன் மாதத்திற்குள் மொத்த படப்பிடிப்பையும் முடிக்க படக்குழு திட்டமிட்டுள்ளது.

# நகைச்சுவை நடிகரை கலாய்த்த கீர்த்தி

தமிழ் சினிமாவில் தற்போதைக்கு முன்னணி நடிகை என்றால் கீர்த்தி சுரேஷ்தான். விஜய், தனுஷ், சிவகார்த்திகேயன் என வரிசை யாக முன்னணி நடிகர்களின் படங்களில் இவர்தான் ஹீரோயின். இவர் சமீபத்தில்தான் சமூக வலைத்தளமான டுவிட்டரில் இணைந்தார். இதில் நடிகர் சதீஷ், விஜய்-60யின் இணைந்ததற்கு வாழ்த்துக்கள் என கூறினார். அதன் பிறகு இருவரும் மாறி மாறி ஜாலியாக கலாய்த்துள்ளனராம்.

...ஜெயம் ரவி, நடிகை : லட்சுமி ...க்குனர் : சக்தி சௌந்தர்ராஜன், ...மான், ஒளிப்பதிவு : வெங்கடேஷ் ... டிராபிக் எஸ்.ஐ. ஆக இருக்கும் ... தங்கை அனிகாவுடன் வாழ்ந்து ...வருகிறார். தங்கைக்காக எதையும் ...தியாகம் செய்யக்கூடியரான ஜெயம் ...வி, ஒரு விபத்தில் டாக்டரான ...லட்சுமிமேனனை சந்திக்கிறார். இருவரும் அப்போதிலிருந்து ...ஒருவருக்கொருவர் காதல்வயப்பட்டு ...விடுகிறார்கள்.

இந்நிலையில், தொழிற்சாலையில் இருந்து கெமிக்கல் ஏற்றிச்செல்லும் ...ஒரு லொறியிலிருந்து கெமிக்கல் வெளியே கொட்டிவிடுகிறது. இந்த கெமிக்கலை ஒரு நாய் ஒன்று ...நடிக்க, அதனால், அந்த நாய் வெறிபிடித்து ஒரு மனிதரை கடித்து ...விடுகிறது.

கடிபட்ட மனிதனின் உடலுக்குள் ...ரவிய அந்த வைரஸ், அவருக்குள் ...ஒருவிதமான மாற்றத்தை ஏற்படுத்த அவர் மற்றவர்களை கடிக்க ஆரம்பிக்கிறார். இதனால் அந்த வைரஸ் ஊர் முழுக்க பரவுகிறது.

நிலைமை தீவிரம்டைய, பொலிஸ் அந்த ஊருக்குள் யாரும் வரக்கூடாது என்றும், ஊரை விட்டு யாரும் வெளியே செல்லக்கூடாது என்றும் ஆணை பிறப்பிக்கிறது. மேலும் இந்த வைரஸால் தாக்கப்பட்டவர்களை சுட்டுத் தள்ளவும் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண லட்சுமி மேனன் அடங்கிய ஒரு மருத்துவக்குழு ஜெயம் ரவியின் உதவியுடன், கோவையில் இருக்கும் மருத்துவமனையில் வைரஸை அழிக்கக்கூடிய மருந்தை கண்டுபிடிக்க செல்கின்றனர். ஆனால், இவர்களை வைரஸ் தாக்கப்பட்ட மனிதர்கள் செல்லவிடாமல் தடுக்கிறார்கள்.

இறுதியில், வைரஸ் தாக்கப்பட்டவர்களிடம் இருந்து ஜெயம் ரவி, லட்சுமி மேனன் தப்பித்தார்களா? வைரஸை அழிக்க மருத்து கண்டுபிடித்தார்களா? என்பதே மீதிக்கதை.

படத்தில் ஜெயம் ரவி, டிராபிக் எஸ்.ஐ.யாகவும், பாசமிகு அண்ணனாகவும் திறம்பட நடித்திருக்கிறார். படத்தின் முழுப்பொறுப்பையும் தன்மேல் ஏற்று நடித்திருக்கிறார். இவரை சுற்றியே படம் நகர்வதால், தனது கதாபாத்திரத்தை உணர்ந்து சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். படத்திற்காக தன்னால் முடிந்தளவு கடின உழைப்பையும் கொடுத்திருக்கிறார். இந்த படம் இந்த வருடத்தில் இவருக்கு முதல் வெற்றியை தேடிக் கொடுக்கும் என நம்பலாம்.

கதாநாயகியாக நடித்திருக்கும் லட்சுமி மேனனுக்கு, ஜெயம் ரவியுடன் டூயட் பாட வாய்ப்பில்லை. டாக்டர் கதாபாத்திரத்தில் டாக்டராகவே வாழ்ந்திருக்கிறார். ஜெயம் ரவியின் நண்பரான காளி, தங்கை அனிகா ஆகியோர் கொடுத்த கதாபாத்திரத்தை சிறப்பாக செய்திருக்கிறார்கள்.

ஆங்கிலப் படத்துக்கு இணையாக இந்த படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குனர் சக்தி சௌந்தர்ராஜன். இவருடைய துணிச்சலுக்கு பெரிய பாராட்டுக்கள். புதுமையான திரைக்கதை, படமாக்கப்பட்டவிதம் என ரசிகர்களிடம் கைத்தட்டல் பெற்றிருக்கிறார். ஆனால், நிறைய காட்சிகளில் லொஜிக் மீறல்கள் இருப்பது படத்திற்கு சற்று பின்னடைவு.

படத்திற்கு பெரிய பலம் டி.இமானின் இசை. பாடல்களாகட்டும், பின்னணி இசையாகட்டும் இரண்டிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார். வெங்கடேஷின் ஒளிப்பதிவும் படத்திற்கு பலம் சேர்த்திருக்கிறது.

மொத்தத்தில் மிருதன் மிரட்டுகிறான்.








விடுதலைப் புலிகளுக்குத் தேவையான போராளிகளைச் சேர்ப்பதற்காக வந்தவர்தான் சரவணன் மாஸ்ரர் என குடியிருப்பைச் சார்ந்த இளைஞர்கள் உறுதியாக நம்பி அவரைக் கிராமத்தை விட்டே துரத்தவேண்டும் என எண்ணியபோதும்... சரவணன் புலிகள் இயக்கத்தோடு சம்மந்தப் பட்டவர் என்பதால் தமது குடியிருப்புக்குள் அவரது செயற்பாட்டை தடுத்து நிறுத்த எமது இளைஞர்களுக்குத் துணிவு வரவில்லை. எனவே மௌனமாக இருந்துகொண்டு சரவணனின் செயற்பாட்டை மிக உன்னிப்பாக அவதானிக்கத் தொடங்கினர்.

அந்தக் குடியிருப்பைச் சார்ந்த இளைஞர்களைப் பற்றி எந்த ஒரு அக்கறையும் கொள்ளாத சரவணன் மாணவர்கள் மத்தியில் தனது பணியை ஆரம்பித்தார். பாலை வனத்தில் பூத்த பூக்களைப்போல தமது ஆளுமை விருத்திக்கும்

**தங்கன்**

அறிவுசார் வளர்ச்சிக்கும் சரியான வழிகாட்டல் இல்லாமல் மலையகத் தமிழ் மக்களின் குடும்பங்களில் பிறந்த ததால் பாடசாலையிலும் ஒதுக்கப்பட்ட மாணவர்களாய் பலவிதமான உளவியல் தாக்கங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்த அக்குடியிருப்பை சார்ந்த சிறுவர்கள் அனைவரையும் அந்தக் குடியிருப்பில் உள்ள பொது நோக்கு மண்டபத்திற்கு முன்னால் இருக்கும் ஆத்திமர நிழலின்கீழ் சரவணன் மாஸ்ரர் ஒன்றுகூடினார்.

சரவணன் மாஸ்ரரால் கூட்டப் பட்ட இக்கூட்டத்திலே 05 ஆம் ஆண்டிலிருந்து O/L வரை படித்துக் கொண்டிருந்த அனைத்து மாணவர் களும் மிகுந்த உற்சாகத்துடன் ஒன்றுகூடினர். கிட்டத்தட்ட நூற்று ஐம்பது வரையான சிறுவர்கள் ஒன்றாகக்கூடிய இக்கூட்டத்திலே எமது குடியிருப்பைச் சார்ந்த இளைஞர்களையும் பார்வையாளர் களாய் கலந்துகொள்ளுமாறு சரவணன் மாஸ்ரர் வேண்டிக் கொண்டார். சரவணனின் இந்த வேண்டுகோளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய குடியிருப்பு இளைஞர்கள் தமது உளவுப் பணிக்காக இக்கூட்டத்தில் பங்குகொண்டனர்.

சந்தேகக் கண்ணோடு அக்கூட் டத்தில் பங்குகொண்ட இளைஞர் களிற்கு சரவணனின் அணுகுமுறை மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது. வழமையாகப் புலிகள் இயக்கத்தில் இருந்து கிராமங்களிற்கு வருகை தரும் போராளிகள் ஒருவிதமான அதிகாரத் தோரணையோடுதான் மக்களை அணுகுவார்கள். மக்களின் உணர்வுகளை மதிக்கமாட்டார்கள். மக்களின் அபிப்பிராயங்களைச் செவிமடுக்கமாட்டார்கள். தாங்கள் சொல்வதை மட்டும் மக்கள் கேட்டுச் செயற்படவேண்டும் என்பதில் குறியாக இருப்பார்கள். மக்களுக்கு நல்லதைச் செய்வதாக இருந்தாலும் ஓர் வகையான இராணுவ மனோபாவத்துடனேயே செய்வார்கள். அவ்வாறுதான் புலி களோடு சம்மந்தப்பட்ட சரவணனும் இருப்பாரென இளைஞர்கள் கருதினர்.

ஆனால் அவரின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. அவர் பெரும்பாலான சிறுவர்களைப் பேசவைத்தார். அந்தப் பிஞ்சு உள்ளங்களின் இதயக் குமுறல்களை மிகுந்த பொறுமையுடனும் கவனத்துடனும் கேட்டார். சிறுவர் களை மதித்து மிகுந்த நேசத்துடன் அவர்களோடு பழகினார். இதனால் கூட்டத்தில் பங்குகொண்ட அனைத்துச் சிறுவர்களும் அவரால் ஈர்க்கப் பட்டனர். மூன்று வயது நிரம்பிய கோகிலவாணி அவரது மடியிலே ஏறி உரிமையுடன் அமர்ந்து கொண்டாள். அந்தக் குடியிருப்பிலேயே அடக்கமுடியாத சண்டியர்கள் என சகலராலும் கருதப்பட்ட அகத்தியன், அகச்செழியன் என்ற மூன்று வயது இரட்டையர்கள் சரவணன் மாஸ்ரரோடு சண்டித்தனம் செய்ய தொடங்கினார்கள்.

சிறுவர்களிற்கான இந்தக் கூட்டத்திலேதான் அதிகம்பேசாமல் மாணவர்களையே பெரும்பாலும் பேசவைத்த சரவணன் மாஸ்ரர் இறுதியில் எமது கிராமத்தில் வசித்த 'சதீஸ்' என்றும் O/L மாணவனின் தலைமையில் 11 பேர் கொண்ட ஓர் சிறுவர் அரங்கக்குழு நிர்வாகத்தை அமைத்ததோடு அந்தக் கிராமத்தில் வாழும் அனைத்துச் சிறுவர், சிறுமியரதும் பிரச்சினைகளை அந்த நிர்வாகமே பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்துடன் கூட்டம் நடைபெற்றது.

எமது கிராமத்தில் வசிப்பவரும் முரசுமோட்டை மகாவித்தி யாலயத்திலே 'பிறைமறி' ஆசிரிய ராகக் கடமையாற்றி வந்தவருமான சசிக்குமார் ஆசிரியர் மாணவர் களின் கூட்டத்தாலும் மாணவர் களுடனான சரவணன் மாஸ்ரரின் அணுகுமுறையிலும் மிகவும் கவரப்பட்டார்.

ஆரம்பத்தில் சரவணன் மாஸ்ர ருக்கு எதிராக இளைஞர்களை எச்சரிக்கைசெய்துவந்த சசிக்குமார் படிப்படியாக சரவணனோடு இணைந்து அக்குடியிருப்பிலே செயற்படத் தொடங்கினார். அதனால் சரவணனுக்கு எதிரான உணர்வுடன் இருந்த குடியிருப்பு இளைஞர்கள் சரவணனின் செயற்பாட்டோடு படிப்படியாக இணையத் தொடங்கினர்.

அரங்கச் செயற்பாட்டின்மூலம் கல்வி என்ற தொனிப்பொருளுடன் கோரக்கன்கட்டு குடியிருப்பில் உருவான சிறுவர் அரங்கக் குழு மிகுந்த உற்சாகத்துடன் செயற்பட ஆரம்பித்தது. முதலில் மூன்று நாட்கள் தொடர் அரங்கப் பயிற்சியை மேற்கொண்டதன் மூலம் சிறுவர்கள் மேலும் உற்சாகப்படுத்தப்பட்டார்கள். அடுத்ததாக மாபெரும் சிறுவர் அரங்க விழா ஒன்றை அக்குடியிருப்பு நடத்திமுடித்தது.

இவ்விழாவானது எமது குடியிருப்பு மக்களை மிகவும் கவர்ந்ததோடு எமது குடியிருப்பு இளைஞர்களும் இவ்விழாவினால் மிகுந்த உற்சாகத்திற்குள்ளானார்கள். இவ்விழா நடைபெற்று முடிந்து ஒரு கிழமையால் "எங்கள் வருங்கால சந்ததிக்காகவே எமது வாழ்க்கை" என்ற தொனிப்பொருளுடன் ஓர் இளைஞர் அமைப்பை உருவாக்கினர்.

மேற்படி இளைஞர் அமைப் பானது...! "ஓர் எழுபதுவரையான இளைஞர்களை என்னிடம் தாருங்கள். நான் இந்தியாவையே தலைகீழாய் மாற்றித் தருகிறேன்" என்ற சுவாமி விவேகானந்தரின் கூற்றை அடிப்படையாகக்கொண்டு "ஒரு ஞானியின் தீர்ப்பு" என்ற நாடகத்தைத் தயாரித்தது. இரண்டு குடியிருப்பைச் சார்ந்த இளைஞர்கள் பங்குகொண்ட இந்த நாடகமானது மிகவும் சிறப்பான முறையில் எமது குடியிருப்பில் ஆற்றுகை செய்யப்பட்டது. இந்த நாடக ஆற்றுகையோடு எமது இளைஞர்கள் மிகந்த உற்சாகம் கொண்டனர்.

இவ்வாறு உற்சாகம் கொண்ட எமது இளைஞர்களின் உதவியோடு எமது சிறுவர் அரங்கக் குழுவானது பி.பகல் 7 மணி தொடக்கம் 9 மணி வரை எமது சிறுவர் பராமரிப்பு மண்டபத்தில் தினமும் கூடியிருந்து படிக்க ஆரம்பித்ததோடு மாதா மாதம் மாணவர் மன்றத்தைக் கூடி விநாடி வினாப் போட்டி, கவிதை வாசித்தல், கதை சொல்லல், கட்டுரை படித்தல் பாடப்புத்தகத்தில் உள்ள விடயங் களை நாடகமாக்கி ஆற்றுகை செய்தல் எனத் தனது செயற் பாட்டைத் தொடர்ந்துகொண்டிருந்த அதேவேளை...!

சரவணன் எமது இளைஞர் அமைப்பின் உதவியோடு மேலும் பல கிராமங்களில் சிறுவர் அரங்கக் குழுக்களை அமைத்து சிறுவர் அரங்க விழாக்களை நடாத்தியதோடு மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை மேற்படி அரங்கக் குழுக்களிடையே பாடப்பரப்பிற்குள் வினாடி வினாப் போட்டிகளை நடாத்தி வெற்றிபெறும் குழுக்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். இதனால் சிறுவர்கள் பெரும் உற்சாகம் அடைந்தனர்.

இவ்வாறு எமது சிறுவர்களின் கல்வியும் எமது குடியிருப்பு மக்களின் பண்பாட்டு வாழ்வும் மிகச்சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருந்த சூழலில்தான் வன்னி யுத்தம் ஆரம்பமானது. இந்த யுத்தத்தால் எமது குடியிருப்பும் அயல் குடியிருப்புக்களும் பெரும் அவலங்களைச் சந்தித்தன. எமது இளைஞர் அமைப்பின் ஸ்தாபகர் களில் ஒருவரான 'றாஜ்' என்ற இளைஞன் பின்தள வேலை களிற்காக கொண்டுசெல்லப்பட்டு ஷெல் வீச்சில் உயிர்துறந்தார். ஒரு ஞானியின் தீர்ப்பு நாடகத்தில் பிரதான பாத்திரமேற்கு நடித்தவரும் இளைஞர்குழு நிர்வாக உறுப்பின ருமான ஊரியான் ரமேஷ் அவர்கள் ஷெல் வீச்சில் காலமானார்.

எமது சிறுவர் அரங்கக் குழு நிர்வாக சபையில் மிகுந்த உற் சாகத்துடன் செயற்பட்ட சங்கீதா, வினோஜா ஆகிய இருவரும் கட்டாய ஆள்சேர்ப்பிற்குள் அகப்பட்டு வீரச்சாவடைந்தனர். இவ்வாறான துயரங்களிற்கு மத்தியிலும் எமது குடியிருப்பைச் சார்ந்த 'தீர்க்க சுமங்கலி' புஸ்பறோசி ஆகிய இருவரும் 2015 இல் யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்கள். அத்தோடு Y.M.C.A சிறுவர் அரங்கக் குழுத் தலைவராகச் செயற்பட்ட மா.சுரேந்திரனும் யாழ். பல்கலைக்கழகம் தெரிவானார். இந்த மகிழ்ச்சியான செய்திகளிற்கு அன்றைய சிறுவர் அரங்கக் குழுச் செயற்பாடே அத்திவாரமாய் அமைந்தது என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

யுத்தத்தால் இடம்பெயர்ந்து ஊர் ஊராய் அநாதைகள்போல் அலைந்து திரிந்து சொல்லமுடியாத துயரங்களைச் சுமந்து வாழ்ந்த நாங்கள் 2015 ஆம் ஆண்டு பிற்பகுதியில் மீண்டும் எமது குடியிருப்புக்குத் திரும்பினோம். எமது குடியிருப்போ யுத்தத்தால் சிதறி சின்னாபின்னப்பட்டுப்போய் கிடந்தது. எமது குடியிருப்பின் நடுவே ஓர் இராணுவ முகாமும் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

(தொடரும்)

# கசப்பானதொரு உண்மை

இந்த வார சிறுகதை

- ஷிவாணி -

என் காதலியைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் உங்களுக்கு இந்த ஒரு நாள் போதாது. ஆம்... பார்வையால் அவள்பேசும் மொழி எனக்கு மட்டுமே புரியும்... அவளது பாதம் போடும் கோலங்கள் என் வீட்டு வாசலுக்கு மட்டுமே தெரியும் இப்படி காதலில் உருகி உருகி நான் உழுன்றுகொண்டிருந்தாலும் அவள் என்னிடம் இயல்பாகவே இருக்கிறாள்.

அதுதான் எனக்கு பெரிய தவிப்பை தருகிறது. நான் காதலிப்பது அவளுக்குத் தெரியுமா என்ற ஒரு தவிப்பும், அவள் என்னை காதலிக்கிறாளா என்ற கேள்வியும் பலநேரங்களில் என்னை தவிப்பில் விட்டுள்ளது.

என்றாவது ஒரு நாள் அவளது கண்களைப் பார்த்து என் காதலை உரைக்க பல முறை பயிற்சி எடுத்தும், ஒரு முறை யிலும் நான் வெற்றி பெறவில்லை. காரணம், தேர்வெழுதாதவன் எப்படி வெற்றி பெறமுடியும். சரி... இது எல்லோருக்கும் இருக்கும் பிரச்சினை தான் என்று



என்னை நானே தேற்றிக்கொண்டேன். படித்து முடித்ததும் சொல்லிவிடலாம் என்று இருந்தேன்... வேலை கிடைத்ததும் சொன்னால் நிச்சயம் பலன் இருக்கும் என்று தள்ளிப்போட்டேன். உண்மையிலேயே காதலை உரைக்க சக்தியற்றுத்தான் அப்படி நினைத்தேனா எனக்குத் தெரியவில்லை.பல இடங்களில் பணிக்கு முயற்சித்ததில் வந்தது ஒரு கடிதம்... கொழும்புக்கு உடனே புறப்பட்டுச் சென்று பண-யில் சேர்ந்தேன்... பிறகுதான் வீட்டுக்கு போன்செய்து வேலை கிடைத்த விஷயத்தையே சொன்னேன். ஆம், எதை-யும் முன்கூட்டியே சொல்லிவிட்டால் அது நடக்காது என்று ஒரு நம்பிக்கை எனக்கு, அது மூடநம்பிக்கையாகக் கூட இருக்கலாம். ஆனால் அதை நான் நம்புகிறேன்... அதனால் அது எனக்கு நம்பிக்கைதான்.

ஆனால் அப்போதும் எனக்கு வேலை கிடைத்த விஷயத்தை அவளுக்கு சொல்ல முடியவில்லையே என்று ஏங்கியது மனது. எப்படி சொல்லலாம், யாரிடம் சொல்லி அனுப்பலாம் என்று கண்டபடி குழம்பிக் கொண்டிருந்தேன்.ஒவ்வொரு முறையும் கொழும்பில் நம்ம ஊர்க்காரர் களின் தெரிந்த முகம் ஒன்று கண்ணில்படாதா, அவர்களிடம் சொல்லி அனுப்பமாட்டோமா என்று ஏங்கினேன். பணியில் சேர்ந்ததும் விடுமுறை எடுத்து ஊருக்குச் செல்லவும் மனம் தயங்கியது.

இப்படியே நாட்கள் செல்ல... அலுவலகத்தில் எனக்கு ஒரு தோழி அறிமுகமானாள். வேலையில் கெட்டிக்காரியான அவள், எனக்கு பலநேரத்தில் உதவியதுடன் பணிச் சூழலையும் எளிதாக்கினாள்.

கொழும்பில் யாரையும் நம்பக்கூடாது என்று நண்பர்கள் கற்றுக்கொடுத்த வேதம் அவளிடம் பொடிப்பொடியானது. முற்றிலும் நம்பினேன். என் தோழியாக அவளை நினைத்தேன். அவளது அருகாமை எனது பல பிரிவு களின் துயரங்களுக்கு மருந்து போட்டது. ஆனால், காதலில் ஏற்பட்ட தவிப்பு நீறுபூத்த நெருப்பாக எரிந்து கொண்டிருந்தது.

முதலில் நான் காதலிப்பதை அவளிடம் சொல்லிவிடவேண்டும் என்று நினைத்தேன், பிறகுதான், சொல்லிவிட்டால் நடக்காமல் போய்விடுமோ என்ற என் நம்பிக்கை என்னைத் தடுத்தது.

நாட்கள் சென்றன... அடுத்த வாரம் தீபாவளி... ஊருக்குப் போகவேண்டும் என அனைத்து ஏற்பாடுகளையும் காதல் உணர்வோடு செய்து கொண்டிருந்தேன். அவளுக்கு என்று சில பரிசுகளையும் வாங்கினேன் அப்போது ஞாபகம் வர, என் தோழிக்கும் பரிசு வாங்கிக் கொடுக்க நினைத்தேன். ஒரே மாதிரி யான இரண்டு பொருட்களை வாங்கி தனித்தனியாக பேக் செய்து எடுத்துக் கொண்டேன்.

தீபாவளிக்கு முந்தைய நாள் ஊருக்குச் செல்ல பேரூந்து டிக்கெட்டை எடுத்து வைத்திருந்ததை அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டேன். அதில் திகதிக்கான பதிவை தொடும்போது, எனது ஊர் மண்ணையே தொட்டது போன்ற உணர்வு ஏற்பட்டது. சரி அந்த நாளும் வந்தது. பேரூந்து நிலையத்துக்குச் செல்வதற்கு முன்பு என் தோழியை சந்தித்து தீபாவளி வாழ்த்துகளை கூறி, அவளுக்காக வாங்கி வைத்த பரிசையும் கொடுத்தேன். ஆனால், அவள் முகத்தில் ஒரு தடுமாற்றம் இருந்ததைப் புரிந்துகொண்டு நானாக அவளை என்ன பிரச்சினை என்று கேட்டேன்.

அவள் சொன்ன விஷயம் என்னை சற்று அதிரவைத்தாலும், உடனே சுதாகரித்துக்கொண்டேன். எனது நிலையை விளக்கவேண்டுமா, வேண்டாமா என்ற குழப்பத்தில், இறுதியில் அவளது கண்ணீர் எனது மௌனத்தை கலைத்தது. சொல்லிவிட்டேன்.. நான் உருகி உருகி காதலிப்பதையும், அவளிடம் என் காதலை சொல்லவே தீபாவளிக்குச் செல்வதையும்...

அவளும் ஒருவாறு அவளை சமாளித்துக் கொண்டு எனக்கு வாழ்த்துக்களை கூறிவிட்டு சென்றாள். மிகப்பெரிய சந்தோஷ ஊற்றுக்கு ஒரு வேகத் தடை போட்டது போலிருந்தது இந்த சம்பவம்.

இரு வேறு உணர்வுகளின் கலப்புடன் பேரூந்தில் பயணம் செய்தேன். ஊரில் சென்று இறங்கியதும் வீட்டுக்குச் சென்று உறவுகளின் நலம் விசாரித்தேன்.

எனது உறவின் நலம் குறித்து யாரை கேட்டு விசாரிப்பது என்று தெரியாமல், வீட்டுக்கு வெளியே சென்று பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்களது வீடும் வெள்ளை யடிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டிருந்தது.

அங்கிருந்தவாறு அவள் வெளியே வரமாட்டாளா, தனியே பேசமுடியாதா என்று பார்த்துக் கொண்டிருந்தபோது, சைக்கிளே ஒன்றிரண்டு வரும் எங்கள் சாலையில் மண்புழுதியை கிளப்பிக் கொண்டுவந்த கார் அவர்கள் வீட்டு வாயிலில் நின்றது.

அதில் இருந்து மிக அழகான இளைஞன் புன்னகையுடன் இறங்க, அவனது கைப்பற்றி இறங்கியது ஆம்... என் காதலிதான்... திருமணமாகிச் சென்று தலை தீபாவளிக் கொண்டாட தாய்வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்றதும் எனது இதயத்துக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் தவித்தேன்.

அழவும் தோன்றாமல், அங்கு நிற்கவும் முடியாமல் என் அறைக்குச் சென்று படுக்கையில் விழுந்தேன்.என் மனம் விம்மியபடியே கேட்டது ஒரு கேள்வி.. காதலை பற்றி என் தோழி யிடம் சொன்னதால் நேர்ந்ததோ இந்த கதி என்று.

# கறுப்பாக இருப்பவர்கள் வேற்றுக்கிரகவாசிகள் அல்ல!



என்னதான் நாம் நவநாகரிக மனிதர் களாக மாறி இருந்தாலும், நமது உடையும் பேச்சும் மாறி இருக்கும் அளவுக்கு நமது மனநிலை மாறவில்லை என்பதே உண்மை. அதில் முக்கியமானது இந்த நிறம். “சிவிலைஸ்டு சொசைட்டி” (Civilized Society) என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் நாம், உண்மையில் நிறம் என்ற ஒன்றை காட்டுமிராண்டித்தனமாக தூக்கிப் பிடித்துக்கொண்டுதான் நிற்கிறோம். அதுவும் இன்றைய இளைஞர்கள் மத்தியில் நிறவேறுபாடு குறித்த எண்ணம் ஆழமாக வேரூன்றி கிடக்கிறது.

வெப்ப மண்டல பகுதியைச் சேர்ந்தவன் கறுப்பாகத்தான் இருப்பான். இருப்பினும் கறுப்பின் மீதான இந்த ஒவ்வாமை என்பது எங்கிருந்து வந்தது என்று பார்த்தால், உண்மையில் அது தொடங்கியது தமிழ் மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பிறகுதான். அவர்களுக்குப் பின்னர் வந்த அனைத்து ஆட்சியாளர்களுமே தமிழர்களைவிட சற்று அதிகமான வெள்ளை நிறத்தைக் கொண்டவர்கள் அதிகாரம் அவர்கள் கையில் இருந்தது. வெள்ளை நிறம் அதிகாரமும் ஆன்மீகமும் நிறைந்ததாகக் காட்டப்பட்டது. கறுப்பு நிறமுடையவர்கள் ஆளப்படுபவர்களாகவும், அழகற்றவர் களாகவும், அதிகாரத்திற்கு தகுதி அற்றவர்களாகவும் கருதப்பட்டனர்.

சிறிது நிறம் குறைவான பெண் என்றால் அதிகமான வரதட்சணை கேட்பது தொடங்கி, நிறம் குறைவானவர்களின் மீதான நம்பகத்தன்மைவரை நிறம் தொடர்பான நமது பிற்போக்கான எண்ணம் விரவிக்கிடக்கிறது. இன்னொருபுறம் நிறத்தின் பின்னே நம்மை ஓடவைக்கின்றன சில பெருநிறுவனங்கள். இதில் பெண்களின் நிலைதான் மிகவும் மோசம்.

பிறந்தது முதலே தொடங்கும் இந்த நிறம் சார்ந்த பிரச்சினை பிள்ளைகளின் மனதில் முழுமையாக பதிவது பள்ளி நாட்களில்தான். எப்படி மதத்தையோ, சாதியையோ நாம் தீர்மானிக்காமலேயே நம்மீது முத்திரை குத்தப்படுகிறதோ அது போன்றதுதான் இந்த நிறமும், நாம் பிறக்கும் முன்னே நம்மில் ஏறிக்கொள்கிறது. தான் தீர்மானிக்காது தன்மீது குத்தப்பட்ட முத்திரைக்கு பிள்ளைகள் கொடுக்கும் விலை மிகப்பெரியது. தொடர்ந்து பெண்கள் என்னதான் அதிகமாக பாதிக்கப்பட்டாலும், ஆண்களும் இந்த நிற வேறுபாட்டால் போராட்டங்களை சந்திக்கவேண்டியுள்ளது.

கறுப்பானவர்களை ஒரு வேற்றுக்கிரகவாசிகள் மாறிதான் பார்க்கிறார்கள். “தன்னை ஏற்றுக்கொள்ளுதல்” என்ற முதிர்ச்சி பெரியவர்களுக்கே இல்லை என்னும்போது சிறு பிள்ளைகளின் நிலை எண்ணிப்பார்க்க முடியாததாகவே உள்ளது. சிறுவயதில் இருந்தே மிகப்பெரும் மனஉளைச்சலை சுமந்துவருவது மிகவும் வலியைத் தரக்கூடிய ஒன்று.

உலகமயமாக்கலின்மூலம் இங்கு நுழைந்த கார்ப்பரேட் பேய்கள், கறுப்பினை நமக்கு அசிங்கமானதாக மூளைச்சலவைசெய்து வெள்ளை நிறத்தைப்பெற களிம்புகளை நோக்கி ஓடவைத்தன. கறுப்பாக இருக்கும் பெண்களுக்கு ஒரு பாதுகாப்பற்ற உணர்வினை ஏற்படுத்தி இருப்பவை இந்த காஸ்மெடிக்ஸ். ஏழு நாட்களில் சிகப்பழகு என்ற விளம்பரம் பொய் என்று தெரிந்தும் அதனை வாங்க வைத்திருப்பதன்மூலம் நம்மை ஏமாளிகளாக்கி கொழுத்து பெருத்திருக்கின்றன இந்தப் பெருநிறுவனங்கள். பிறந்ததில் இருந்து நமது குணத்தை தீர்மானிப்பதில் இருந்து (வெள்ளையா இருக்குறவன் பொய் சொல்லமாட்டன், டா), நமது இடத்தை அல்லது நிலையை தீர்மானிப்பதுவரை இந்த நிறம் அதனது ஆதிக்கக்கரங்களை செலுத்துகிறது. இன்றைக்கும் நிறவேறுபாடு என்பது சமூகத்தில் இயங்கிக்கொண்டு இருப்பது அதன் உண்மைநிலையை விளக்குகிறது.





# காதல் ஹோர்மோன் என்ன செய்யும்?

மூளையின் உட்பகுதியில் உற்பத்தியாகும் ஒக்ஸிடோசின் என்னும் ஹோர்மோன்தான் மனிதர்களின் காதல், காம உணர்வு களைத் தூண்டுகிறது. எனவே இதனை காதல் ஹோர்மோன் என்று செல்லப்பெயரிட்டு அழைக்கின்றனர். இந்த ஹோர்மோன் தம்பதியரிடையே யான பிணைப்பை அதிகரிக்கிறது.

குழந்தை பிறப்பு, மனஅழுத்தம் போக்குவது, உள்ளிட்ட 11 வகை யான நன்மைகளை செய்கிறது என்று நிபுணர்கள் கூறியுள்ளனர். மூளையின் அடிப்பகுதியில் உள்ள ஹைப்போதலாமஸின் பராவென்ட்ரிகுலர் உட்கருவில் சுரக்கிறது ஒக்ஸிடோசின் என்னும் ஹோர்மோன். தாம்பத்திய உறவிற்குப் பின்பு பெண்களுக்கு ஒக்ஸிடோசின் சுரப்பு அதிகரிக்கிறது. இதனால் கணவர்மீதான காதல் அதிகமாகும் என்கின்றனர் நிபுணர்கள். அதனால் உறவுமுடிந்த பின்னரும் கணவரை கட்டிக்கொண்டு உறங்குவது.

முத்தம் கொடுப்பது என அன்பால் திணறடிக்கின்றனராம். மனிதர்களின் காமஉணர்வுகளை கிளர்ச்சியடையச் செய்கிறது. மூளையில் இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி தம்பதியர்



காதலர்கள் இடையேயான உறவை, பிணைப்பை அதிகரிக்கிறது. அடிக்கடி கட்டிப்பிடிப்பது, முத்தமிடுவதன் மூலம் இந்த ஹோர்மோன் சுரப்பு அதிகரிக்கிறது. கர்ப்பகாலத்தில் சுரக்கும் 'ஒக்ஸிடோசின்" ஹோர்மோன், கர்ப்பப்பைக்கும் நன்மையை ஏற்படுத்துகிறது.

மனஅழுத்தம் சிலருக்கு மிகப்பெரிய பிரச்சினையை தரும். தூக்கத்தைக் கூட கெடுக்கும். இந்த ஒக்ஸிடோசின் சுரப்பு மனஅழுத்தம் தரும் கார்டிசோல் ஹோர்மோன் சுரப்பை கட்டுப்படுத்துகிறது. நன்றாக உறக்கத்தை தரும் என்கின்றனர் நிபுணர்கள்.

பெண்களின் மகிழ்ச்சியை அதிகரிப்பதோடு பிரசவ காலத்தில் இந்த ஹோர்மோன் அதிக மாகச் சுரந்து எளிதான பிரசவத்தை ஏற்படுத்தும்.

அதிகரிக்கும் குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் இடையேயான உறவுப் பிணைப்பினை அதிகரிக்கும். நேசத் தோடு பழகுவதற்காக சூழலை உருவாக்கும்.

## உருளைக்கிழங்கு பொடி சாதம்

**தேவையான பொருட்கள் :**

உருளைக்கிழங்கு - 2
சாதம் 1 கப் (உதிரியாக வடித்தது)
உப்பு - சுவைக்கு

**வறுத்து பொடிக்க :**

காய்ந்த மிளகாய் - 3, மல்லி - 1 கரண்டி, கடலைப்பருப்பு - 1 கரண்டி
உளுத்தம் பருப்பு - கரண்டி

**தாளிக்க :**

கடுகு, பெருங்காயத்தூள்
கறிவேப்பிலை, உளுத்தம்பருப்பு
கறிவேப்பிலை

**செய்முறை :**

வறுத்து பொடிக்க கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை வெறும் கடாயில்போட்டு வறுத்து ஆறவைத்து மிக்சியில் போட்டு பொடித்துக்கொள்ளவும். உருளைக்கிழங்கை வேகவைத்து சிறிய துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும். கடாயில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் தாளிக்க கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை போட்டு தாளித்தபின் உருளைக்கிழங்கை போட்டு வதக்கவும்.

உருளைக்கிழங்கு நன்றாக வெந்தவுடன் அடுத்து அதில் வறுத்து பொடித்த பொடி, உப்பு போட்டு சிறிது கிளறி சாதத்தை போட்டு மிதமான தீயில் வைத்து 5 நிமிடம் மூடிவைத்து கிளறி இறக்கவும். சுவையான உருளைக்கிழங்கு பொடி சாதம் தயார்.




**வாரமொரு சிந்தனை**

சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்



# இலட்சிய சமுதாயம்

மனிதன் தனியே வாழ்ந்துவிட முடியாது. அவன் பலருடன்கூடி வாழவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதனால், கூடி வாழ்கிறான். அதனால், அப்படிக்கூடி வாழ்வது அன்பின் அடிப்படையில், உறவுகளின் அடிப்படையில் இல்லை. நாடகம் நடத்துகிறான்; சுயநலத்திற்காகவும் பயத்திற்காகவும் கூடி வாழ்வதைப் போல நடித்து வாழ்கின்றான்.

அவன் அன்புடன்கூடிய உறவு வாழ்க்கையைக் கூடி வாழ்தலைப் பெரும்பேறாகக் கருதுவதில்லை. இத்தகைய மனிதன் கூட்டத்தில் அன்பு கடைச்சரக்கேயாம்.

நம்முடைய நாட்டில் இன்னமும் சமுதாயம் உருவாகவில்லை. "ஒருவர் எல்லோருக்காகவும், எல்லோரும் ஒருவருக்காகவும்" என்ற சமுதாய நியதி, ஒழுங்கு, ஒழுக்கம் வெற்றி பெற்றால்தான் சமுதாயம் உருவாகும். இன்று மனித குலத்தை வருத்தும் தீமைகளை எதிர்த்துப் போராட வேண்டுமாயின், முதலில் சமுதாய அமைப்பு உருவாகவேண்டும். அங்ஙனம் ஒரு சமுதாயம் திடீரென்று உருவாகிவிடாது. ஒரு இலட்சியம் தோன்றினால்தான் சமுதாயம் உருவாகும்.

இன்று, நம்பிக்கையும் நல்லெண்ணமும் நிறைந்த ஓர் இலட்சியநோக்கமுடைய சமுதாயத்தைக் காண்பதற்கு, தடைகள் பலப்பல உள்ளன. அவற்றுள் தலையாயது பணம்!

அடுத்த தடைகள் அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய தீயபண்புகள்! இத்தீய பண்புகளின் படைக்கலன் களாக உள்ளவை. பூட்டுக்கள். களவு - காவல், சுவர்கள், வேலிகள் பட்டங்கள், பதவிகள் முதலியன. இவையெல்லாம் ஒருங்கிணைந்து கொண்டு சமுதாயம் அமைத்தற்குரிய அடிப்படைகளைத் தகர்க்கின்றன; மனிதனைப் பிரித்துவிடுகின்றன.

இன்று, ஊர், அரசுக் கணக்கின் படிதான் உள்ளது. ஊர் என்று இலக்கணப்படி "ஒருவருக்காக எல்லோரும், எல்லோருக்காகவும் ஒருவர்" என்ற இலட்சியம் மக்களிடத்தில் இல்லை. ஆரோக்கியம் இல்லாத போட்டிகள், இலாபவேட்டைகள், தலைமைத்தனத்திற்கு ஆசை முதலியன ஊரை நாள்தோறும் அழித்துவருகின்றன. இவற்றை நாளும் எதிர்த்துப் போராடிச் சமுதாயத்தை விரிவாக்கவேண்டும். இலட்சியத்தை உருவாக்கவேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் மனிதகுலத்தில் ஏற்பட்டுள்ள பிரிவு களை அகற்றி, மனிதகுலத்தைச் சமுதாயமாக உருவாக்கணும், ஊர்கூடி வாழ அமைத்தலும்கூட ஒரு நல்ல இலட்சியமாகும். இந்த இலட்சியத்தை இந்தத் தலை முறையில் அடைந்தால் நம் நாடு வளரும்; வாழும்!

"பொருளில்லார்க்கு இவ்வுலகு இல்லை" என்பது வள்ளுவம்? "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும் என்பது மாணிக்கவாசகரின் வாக்கு! சமூகத்தை இயக்கும் சக்தி பொருளுக்கே உண்டு! நமது நாடு வளமான நாடு! பொருள் உற்பத்திக்கு ஏற்ப, இயற்கை வளமும் மனித சக்தியும் உள்ள நாடு. ஆயினும் நம் நாட்டில் பெரும்பான்மையினர் ஏழைகளாக இருக்கிறார்கள். ஏன்? உடைமை உடையவர்களிடத்தில் உடைமையைக் காண்பது அரிது! உழைப்பவர்களிடத்தில் உடைமை யைக் காண்பது இயலாது. இது நாட்டின் சமூக, பொருளாதார அமைப்பு.


நமது நாட்டில் சோசலிசம் அல்லது சர்வோதயம் அல்லது பொதுவுடைமைச் சமுதாயம் காண இயலாது. "உடைமைக்கு ஊழே காரணம்" என்ற சித்தாந்தம் மக்களின் மூளையில் இடம் பெற்றுள்ளவரை, மக்கள் தங்களிடம் பொருளின்மை அல்லது உடைமையின்மை குறித்து வருந்தமாட்டார்கள்!

கம்பன், "எல்லாரும் எல்லா பெருஞ்செல்வமும் எய்தலாம்" என்று ஓர் இலட்சியப் பொருளாதார சமுதாயத்தைக் காண்கிறான். "உடைமையைப் பொதுமை செய்!" என்றான் பாவேந்தன் பாரதிதாசன். நமது பொருளாதாரம் கடன் பொருளாதாரமாகவே இருக்கவேண்டும்.

(தொடரும்)




# பாப்பா முரசு



சிறுவர் கதை

## வாரம் ஒரு திருக்குறள்



### உட்பகை

**"ஒன்றாமை ஒன்றியார் கட்பழன் எஞ்ஞான்றும்
பொன்றாமை ஒன்றல் அரிது."**

ஒருவனுடைய உற்றாரிடத்தில் பகைமை ஏற்படுமானால், அந்த உட்பகையால் அவன் அழியாமலிருத்தல் எப்போதும் அரிது.

குறள் : 886

## பார்வையற்றவருக்கு எதற்கு விளக்கு?



ஒரு ஊரில் ஒரு ஜென் குரு இருந்தார். அவரது கருத்துக்களைக் கேட்க பல இடங்களில் இருந்தும் பல தரப்பட்ட ஆட்கள் வருவது வழக்கம்.

ஒரு நாள், ஜென் குரு அங்கு கூடி இருந்தவர்கள் இடையே பல நல்ல கருத்துக்களை மிக சுவார சியமாக கூறிக்கொண்டிருந்தார். நேரம்போனதே தெரியவில்லை.

ஜென் குரு பேசி முடிக்கும் போது இரவு வெகு நேரமாகி விட்டது.

அந்த ஆச்சிரமத்தில் இருந்து காட்டுவழியாக இருளில்தான் செல்லவேண்டும். மின்சார விளக்கு வசதி ஏதுமில்லை.

ஆச்சிரமத்தில் இருந்து ஒவ்வொருவராக புறப்பட்டனர். கடைசி யாக கிளம்பத் தயாரானவர் ஒரு பார்வையற்றவர்.

அவரைப் பார்த்த ஜென் குரு, தனது சீடரை அழைத்து, "இந்த பார்வையற்றவர் இருளில் பத்திரமாக வீடு திரும்ப அவர் கையில் ஒரு விளக்கைக் கொடுத்தனுப்பு," என்று உத்தரவிட்டார்.

சீடருக்கு இதனை கேட்டதும் மிகப் பெரிய குழப்பம்.

வந்து இருப்பவர், பார்வையே இல்லாதவர். இவருக்குத்தான் வெளிச்சமே தெரியாதே. அவர் இருளிலும் நடந்து செல்லக் கூடியவர்தானே. அப்படி இருக்கும்போது அவருக்கு ஏன் விளக்கைக் கொடுக்கும்படி குரு கூறுகிறார்? இந்த விளக்கு வெளிச்சம் அந்த பார்வையற்றவருக்கு தேவைப்படாதே? என்று சீடர் குழம்பினார்.

ஆனாலும் குருவின் கட்டளையாச்சே! அந்த பார்வையற்றவருக்கு நல்ல வெளிச்சம் தரும் விளக்கு ஒன்றை கொடுத்து வழியனுப்பி வைத்தார்.


ஒரு வாரம் ஆனது. ஆனாலும் அந்த சீடரின் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

குழப்பமான நிலையில் காணப்பட்ட அந்த சீடரை ஜென் குரு அழைத்து, "உனக்கு என்ன சந்தேகம்? ஏன் குழம்பிப் போய் இருக்கிறாய்," என்று கேட்டார்.

அப்போது அவரிடம் அந்த சீடர், "ஐயா! கடந்த வாரம் இங்கு வந்த கண்பார்வையே இல்லாத ஒருவரிடம் ஏன் விளக்கைக் கொடுத்து அனுப்பினீர்கள்? அந்த விளக்கால் அவருக்கு என்ன பயன் இருந்திருக்கும்?" என்று தனது மனதில் உள்ள சந்தேகத்தைக் கேட்டார்.

என்ன பதில் சொல்லியிருப்பார் குரு? யோசித்து கண்டுபிடியுங்கள்.

## சீனப்பெருஞ்சுவர்!



1368 முதல் 1620 வரை "மிங்" பரம்பரை சீனாவை ஆண்டது. 1368இல் பட்டத்துக்கு வந்த மிங் மன்னன் 4ஆவது முறையாகப் பெருஞ்சுவரைக் கட்டினான். மங்கோலியரை வீழ்த்திவிட்டு ஆட்சிக்கு வந்தவன் இவன். எனவே மங்கோலியர்கள் மீண்டும் படையெடுக்க முடியாதபடி சுவரை வலுவாகக் கட்டினான். அப்போது சுவரின் நீளம் 7300 கி.மீ.!

மலைகளிலிருந்து கல் எடுத்து இப்பெருஞ்சுவர் கட்டப்பட்டது! செங்கல்லும் பயன்படுத்தப்பட்டது. கல் கிடைக்காத பாலைவனப் பகுதிகளில் மரக்கட்டைகள் பயன்படுத்தப்பட்டன.

கோட்டையின் உயரம், அகலம், இடத்துக்கு இடம் மாறுபட்டது. பீஜிங் பகுதியில் சுவரின் உயரம் 7.8 மீற்றர்! அகலம் 5.8 மீற்றர்! சுவர்மீது ஒரு குதிரைப் படை தாராளமாகப் போய்வரலாம்!


பீஜிங்கிலிருந்து 110கி.மீ தொலைவிலுள்ள சீமாட்டை என்ற இடத்தில் மலைமீது சுவர் இருக்கிறது! இந்த இடத்தில் சுவரின் அகலம் 40 சென்ரிமீற்றர்கள்தான். இந்தப் பாதையை "வான ஏணி" என்றும் "சொர்க்கப் பாதை" என்றும் சொல்கிறார்கள்! கடைசியாக "மிங்" மன்னர்கள் கட்டிய பெருஞ்சுவரும் பல இடங்களில் இடிந்து விழுந்துவிட்டது. சில இடங்களில் தடயம் மட்டுமே இருக்கிறது. சுவரில் 1/3 பகுதிதான் மிச்சம்!

சீனப் பெருஞ்சுவர் சீனாவின் சின்ன மாக விளங்கக்கூடியது. என்று சீன அரசு எண்ணியது. எனவே பெருஞ் சுவரைப் புதுப்பிக்க முயற்சி எடுத்துக் கொண்டது. பீஜிங்கிலிருந்து 60 கி.மீ. தொலைவிலுள்ள பதாலிங் என்னும் இடம் இதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இது பீஜிங்கிற்கு அருகில் இருந்ததுடன் ஓரளவு புதுப்பிக்கும்படியும் இருந்தது. எனவே சுவரைப் புதுப்பித்து, சீரமைத்துக் கட்டினார்கள். சுவரைப் பார்த்தால் புதுப்பிக்கப்பட்டது தெரியும்.

பொதுமக்கள் பார்க்க 1970ஆம் ஆண்டில் பெருஞ்சுவர் திறந்து விடப்பட்டது. 2008வரை 14 கோடிப்பேர் வந்து பார்த்துப்போனார்கள். அந்த அளவு சீனப் பெருஞ்சுவர் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து இழுக்கிறது. சீன அரசுக்கு நல்ல வருமானமும் கிடைக்கிறது.

இங்கேயிருந்து சுவர்மீது நடந்து சென்றால் 3 நாள் பயணத்தில் "சீமாட்டை"யை அடைந்துவிடலாம். அங்கு "மிங்" மன்னர்கள் கட்டிய அசல் சுவரைப் பார்க்கமுடியும். இது மலைப்பாதை..., எனவே யாரும் நடப்பதில்லை. தனியாகப் போகக் கூடாது என்றும் சொல்கிறார்கள். சில பயணிகள் பீஜிங்கிலிருந்து சீமாட்டை போய் மலைமீது ஏறி சுவரைப் பார்க்கிறார்கள்.

(தொடரும்...)






## நெட் பேக் கட்டணங்களை சேமிக்கும் வழிமுறைகள்

தற்போது மொபைல் பேஷன் பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலையில் நெட் பேக் கட்டணமும் உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நெட் திட்டங்கள் பலவகைகளில் நம்மை கவர்ந்தாலும் நாம் அவற்றை தேர்வுசெய்வதில் கவனமாக இருக்க வேண்டும். இதன்மூலம் அதிகளவில் பணத்தை சேமிக்கமுடியும்.

உங்கள் மொபைல் நெட் பயன் பாட்டை குறைக்க WiFi பயன்பாடு உதவியாக இருக்கும். நெட் திட்டத்தை செயற்படுத்துவதைவிட இந்த முறையால் உங்களுக்கு இலாபம்தான். எப்படி இருந்தாலும் உங்கள் போனில் நெட் பயன்பாடு நன்றாக கிடைக்க வேண்டுமெனில் நெட் கனக்ஷன் நன்றாக இருப்பது அவசியம்.

தள்ளுபடி திட்டத்தை நீங்கள் கேட்கமுடியும். விசேட நாட்களில் நெட் திட்டத்தில் பலவித தள்ளுபடி கொடுக்க பலர் முன்வருவார்கள். அதை நீங்கள் எடுத்துக்கொண்டால் உங்களுக்கு இலாபம்தான். அதிலும் வியரிட் கனக்ஷன் எடுத்துக்கொண்டால் கூடுதல் இலாபம்தான்.

உங்கள் நெட் பயன்பாட்டை நீங்கள் மதிப்பீடு செய்துகொண்டே இருக்க வேண்டும். எத்தனை ஈமெயில்கள் அனுப்புகின்றீர்கள், பாடல்கள் டவுன்லோட் செய்கின்றீர்கள், படம் பார்க்கின்றீர்கள் என்பதை பற்றி அறிந்துவைத்திருத்தல் அவசியம். நீங்கள் பார்த்த வெப்சைட்ஸ் வெப் பக்கங்கள் போன்றவற்றை பற்றியும் அறிந்து இருத்தல் வேண்டும். இதன் மூலம் உங்கள் தரவுகளின் திட்டத்தை தெளிவாக எடுக்கமுடியும்.

எந்த திட்டதை செயல்படுத்தவேண்டும் என்பதில் விரைவான ஒரு முடிவை எடுக்கவேண்டும். நெட் திட்டங்கள் அதுவும் வேகமாக செயற்படும் நெட் திட்டங்கள் மார்க்கெட்டில் வரும்போது விரைவாக பயன்படுத்தி கொள்ள வேண்டும். நல்ல நெட் திட்டம் வருவதை அறிந்து அறிவுபூர்வமாக செயற்பட வேண்டும்.

நீங்கள் நெட்டை அதிகளவு பயன்படுத்துகின்றீர்களா என்பதை பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். தேவையில்லாமல் அதிகளவில் பயன்படுத்தினால் அதை நிறுத்திவிடுவது நல்லது.


நெட் பயன்பாட்டில் முன் கட்டணம் செலுத்தி பயன்படுத்துவது என்பது சிறந்த சேவையாகும். நீங்கள் 1GB திட்டம் எடுத்தால் நீங்கள் எந்த திட்டம் எடுத்துள்ளீர்கள் என்பதில் தெளிவாக இருக்கலாம். இதனால் உங்கள் பயன்பாட்டை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும். உங்கள் குடும்ப நபர்கள் ஒரே டெலிகாம் ஒப்ரேட்டர் வைத்திருந்தால் இந்த திட்டம் கண்டிப்பாக உதவியாக இருக்கும். இதனால் உங்களுக்கு கூடுதல் இலாபம் கிடைக்கும். இதன்மூலம் தரவுகளை அதிகளவில் சேமிக்கமுடியும்.

இதன்மூலமும் உங்களால் சேமிக்க முடியும். உங்கள் கோல் கட்டணம் மற்றும் டேட்டா கட்டணம் இதில் அடங்கும்.

உங்கள் குடும்ப நபர்கள் ஒரே டெலிகொம் கேரியரை பயன்படுத்தினால் உங்கள் மொபைல் கட்டணத்தை அதிகளவு சேமிக்கமுடியும். இந்த திட்டம் ஒரு சிறந்த திட்டமாகும். இதில் எண்ணற்ற சேவைகளை பெறமுடியும். கோல்கள், தரவுகள், எஸ்.எம்.எஸ் என பலவகைகளுக்கு சிறந்த திட்டமாகும். இலவச மெசேஜர் ஆப்களின் மூலம் பணத்தை சேமிக்கமுடியும். எஸ்.எம் எஸ் அதிகளவில் பணம் இழுப்பதால் இந்த ஆப்கள் உங்கள் பணத்தை சேமிக்க உதவும்.

# வாராந்த செய்திக்கொத்து

## பிரச்சினையை தீருங்கள் கலப்பு திருமணம் பற்றி பின்னர் யோசிக்கலாம்! ஆளுநரின் உரைக்கு விக்கினேஸ்வரன் பதில்



வடகிழக்கை தாயகமாகக்கொண்ட தமிழ் மக்களுக்கு அவர்களின் உரித்துக்களை, உரிமைகளை கொடுங்கள் பின்னர் கலப்பு திருமணங்கள் குறித்து நாங்கள் பார்த்துக்கொள்ளலாம். நாங்கள் கலப்பு திருமணங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. என வடமாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

## வேலையற்ற பட்டதாரிகள் விடயத்தில் அரசின் தீர்வு என்ன?



வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கோரி அண்மைய நாட்களாக நாடளாவியரீதியில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இப்போராட்டங்களின் தொடர்ச்சியாக கடந்த வாரம் கொழும்பில் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கோரி அரசாங்கத்திடம் முன்வைத்த காலக்கெடு முடிவடைந்த நிலையிலேயே இவ் ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகத்தினை நோக்கி முன்னேற முற்பட்ட வேளையில் அங்கு பெரும் களோபரமும் இடம்பெற்றது. இவ்வாறாக வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைகளும் போராட்டங்களும் நாட்டில் தொடர்ச்சியாக அதாவது ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. குறைந்தது 3 ஆண்டுகளுக்கு ஓர் முறையேனும் பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியேறிய பட்டதாரிகள் வீதிக்கு இறங்கி வேலைவாய்ப்புக்களுக்காக போராடவேண்டியுள்ளது.

## கச்சதீவு தாரைவார்ப்பு இந்திய மீனவர்களுக்குப் பாரிய இழப்பு! ஆதங்கப்படும் மீனவர்கள்



கச்சதீவு தாரைவார்க்கப்பட்ட விவகாரம் இந்திய மீனவர்களுக்குப் பாரிய இழப்பாக அமைந்துள்ளதாக இராமேஸ்வரம் மீனவர்கள் தமது ஆதங்கத்தினை பி.பி.சி. சந்தேசயவிடம் வெளிப்படுத்தியுள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், இந்திய மீனவர்களுக்கான மீன்பிடி எல்லை மிகக்குறுகியது. எனினும் மீனவர்கள் எண்ணிக்கை பாரியது. இவ்வாறான நிலையில் கச்சதீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது பாரிய இழப்பாகும்.

## பௌத்த சமயத்தை பரப்பும் மத்திய நிலையமாக இலங்கை மாற்றப்படும்: ஜனாதிபதி மைத்திரி



பிக்குமாருக்கு பௌத்த கல்வி கிடைப்பதற்காக வசதிகளை மேலும் விரிவுபடுத்தி, பௌத்த சமயத்தை உலகம் முழுவதும் பரப்பும் மத்திய நிலையமாக இலங்கை மாற்றப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அனுராதபுரம் பிக்கு பல்கலைக்கழகத்தின் 3 மாடிகளை கொண்ட புதிய நூலகத்தை திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார். நாட்டை ஆன்மீகரீதியாக, பௌதீகரீதியாக அபிவிருத்தி செய்யும்போது, படித்த, தேர்ந்த பிக்குகளின் ஆலோசனைகள் அரசாங்கத்திற்கு தேவை. நாடுமுழுவதும் உள்ள சகல விகாரைகளிலும் குறைபாடுகளை கண்டுபிடித்து அவற்றை நிர்த்திக்க புதிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

## சாவகச்சேரி யாழினி அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் சாவகச்சேரி நுணாவில் இராசா கடைக்கு அருகிலுள்ள வீடொன்றில் இருந்து பெண்ணொருவரின் சடலம், கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) மீட்கப்பட்டுள்ளது. விஜிதரன் யாழினி (வயது 35) என்பவரது சடலமே இதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த வீட்டில் துர்நாற்றம் வீசியதையடுத்து அப்பகுதி மக்கள், பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர். சடலம், தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த மரணம் தொடர்பில் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

## தேசிய நல்லிணக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை உணர்த்திய யாழ். சாரணர் நிகழ்வு! ஜனாதிபதி

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் எப்படியானதாக உருவாகவேண்டும், இருக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் எதிர்பார்ப்பை படம்பிடித்துக் காட்டுவதைப்போல் 9ஆவது தேசிய ஜம்போறி நிகழ்வில் சாரணியர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பேதம் இல்லாமல் ஒன்றிணைந்து இருக்கும் காட்சி அமைந்துள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். 9ஆவது தேசிய ஜம்போறி நிகழ்வை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

## உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீ.சு.கட்சியுடன் கூட்டணி அமைக்க 17 கட்சிகள் ஆயத்தம்



உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியுடன் கூட்டணி அமைத்து களமிறங்குவதற்கு இதுவரை 17 கட்சிகள் முன்வந்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான எஸ்.பீ.திஸாநாயக்க தெரிவித்தார். ஹற்றன் லக்ஷபான பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை இரண்டாக பிளவுபடுத்துவதற்கு சிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் இந்த கட்சி இரண்டாக பிளவடையக்கூடிய சாத்தியம் கிடையாது. அதற்கு நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

## மலேசியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் உள்ளிட்ட 971 பேர் கைது

சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டவிரோதமான முறையில் நாட்டில் தங்கியிருந்த இலங்கையர்கள் உள்ளிட்ட 971 பேரை கைது செய்துள்ளதாக மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வெள்ளிக்கிழமை முதல் நாடுமுழுவதிலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் மூலம் இவ்வாறு 971 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை, நேபாளம், இந்தியா, பங்களாதேஸ், பர்மா, இந்தோனேசியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மலேசியாவில் அதிகளவான வெளிநாட்டுப் பிரஜைகள் தொழில்களில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நடைபெற்று முடிந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கத்தினையும் ஒரு வெண்கலப் பதக்கத்தினையும் வென்ற பொத்துவில் அஷ்ரப்.

# சம்பியனானது இளவாலை ஹென்றிக்





19 வயதிற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான கொத்மலை சொக்ஸ் கால்பந்து போட்டித் தொடரின் இறுதிப்போட்டியில் நடப்புச் சம்பியனாக இருந்த கொழும்பு சாஹிரா கல்லூரியை இளவாலை புனித ஹென்றிக் கல்லூரி வெற்றிகொண்டு கிண்ணத்தை சுவீகரித்துள்ளது.

# யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி வெற்றி



இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான தேசியமட்ட விளையாட்டு நிகழ்வுகள் கடந்த 17ஆம், 18ஆம் திகதிகளில் கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க விளையாட்டரங்கில் இடம்பெற்றன. இதில் நாடுமுழுவதிலும் இருந்து 14 உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனங்கள் கலந்துகொண்டன. வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவன அணி காலி உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தை 14:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.



# மருத்துவம்

## சிறுநீரகத்தை காக்க ஆரோக்கியம் மிக அவசியம்

நாம் உண்ணும் உணவில் உள்ள ஊட்டச்சத்துக்கள் இரத்தத்தில் கலந்து கல்லீரலுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அங்கு, உடலுக்குத் தேவையான விதத்தில் அவை மாற்றப்பட்டு, இரத்தத்தின்மூலம் உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. இப்படி, ஊட்டச்சத்துக்கள் உடைக்கப்படும்போது, நச்சுப்பொருட்களும் உருவாகின்றன. இவற்றை அப்புறப்படுத்தும் பணியை சிறுநீரகங்கள் செய்வதுடன், உடலில் நீர்ச்சத்து சமநிலையில் இருக்கவும் உதவுகின்றன. சிறுநீரகங்களைப் பாதிக்கும் சில விஷயங்கள், அவற்றைத் தவிர்க்கும் வழிகள் பற்றி அறிவோம்

### இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்தல்

இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்கும்போது, அது சிறுநீரகத்தின் நுண்ணிய வடிகட்டி அமைப்பைப் பாதிக்கும். இதனால், "அல்புமின்" என்ற புரதம் சிறுநீர் வழியாக வெளியேறிவிடும். முதலில், இது மைக்ரோ அளவில் வெளியேறும். மேலும் மேலும் பாதிக்கப்படும்போது, மேக்ரோ அளவில் வெளியேற ஆரம்பித்துவிடும். மேலும் உடலில் பொட்டாசியம், பொஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் தங்க ஆரம்பித்துவிடும். இரத்தத்தில் உள்ள நச்சு மற்றும் அதிகப்படியான நீரை வெளியேற்றும் திறனை சிறுநீரகம் இழந்துவிடும். பல்வேறு உடல்நலக் குறைபாட்டையும் ஏற்படுத்தும்.

உயர் ரத்த அழுத்தத்தின்போது, இதயம் அதிகமாகத் துடிக்கும். இதனால், இதயம் மற்றும் இரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டு மாரடைப்பு, கண் நோய்கள், சிறுநீரகப் பிரச்சினைகள் வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். எனவே, இரத்த அழுத்தம் 120/80-க்குக் கீழ் என்ற அளவில் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு மேல் இருந்தால் வாழ்க்கை முறை மாற்றத்துடன், மருத்துவரின் ஆலோசனையின்படி தேவையெனில் மாத்திரை மருந்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### உப்பை குறைக்க வேண்டும்

ஒருநாள் தேவையைக் காட்டிலும் அதிகளவில் சோடியம் உப்பை உணவில் சேர்க்கிறோம். இது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கச் செய்து, சிறுநீரகத்தில் கல் உருவாக வழிவகுக்கும். ஒரு நாளைக்கு ஆறு கிராமுக்கும் குறைந்த அளவு உப்பு (ஒரு தேக்கரண்டி) எடுத்துக்கொண்டாலே போதும். சிறுநீரகப் பாதிப்பு உள்ளவர்கள், அதைவிடக் குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேவையான அளவு தண்ணீர் உடல் நீர்ப்பதத்துடன் இருக்கவும், நச்சுக்களை சிறுநீரகம் வெளியேற்றவும் தண்ணீர் உதவுகிறது. மேலும், உடலின் வெப்பநிலை சீராகவும், இரத்தம் கட்டித்தன்மை அடைந்துவிடாமலும் காக்கிறது. மேலும் போதுமான அளவு நீர்குடித்து, சிறுநீர் கழிப்பதன்மூலம் சிறுநீர்ப்பாதையில் ஏற்படும் பக்ரீரியாத் தொற்றையும் தடுக்கிறது. நமக்கு எவ்வளவு நீர் தேவை என்பதை, நம்முடைய உடலே கேட்கும். பொதுவாக ஒன்றரை முதல் இரண்டரை லீற்றர் அதாவது, நாள் ஒன்றுக்கு 8 - 10 டம்ளர் தண்ணீர் அருந்தவேண்டும். நான்கைந்து லீற்றர் என்று அருந்தினால் அது, இரத்தத்தில் சோடியம் அளவையும் சிறுநீரகத்துக்கு அதிகப்படியான வேலைப்பளுவையும் கொடுத்து பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

பதப்படுத்தப்பட்டவை, பைக்கெட் உணவுகள் மற்றும் அப்பளம், ஊறுகாய், கருவாடு போன்ற உப்பு அதிகம் உள்ள உணவுகளைத் தவிர்த்து வீட்டில் சமைத்த உணவுகளைச் சாப்பிடுவது நல்லது.

### ஆரோக்கியமான பானங்கள்

கோப்பி மற்றும் குளிர்பானங்களில் உள்ள கா.ஃ.பின் என்ற இரசாயனம் உடலில் உள்ள நீர்ச்சத்தைக் குறைக்கும் தன்மைகொண்டது. இதனால், சிறுநீரகம் அதிகப்படியான வேலை செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகும். கோப்பி, பால் மற்றும் கார்பனேட்டட் குளிர்பானங்கள், சோடா போன்றவற்றைத் தவிர்த்து, தினமும் பழச்சாறுகள், இளநீர் அருந்தலாம். இதனால், உடலுக்கு நீர்ச்சத்து அதிகம் கிடைக்கும். சிறுநீரகப் பிரச்சினை உள்ளவர்கள் ஒக்சலேட் அமிலம் அதிகம் உள்ள கீரை மற்றும் பீட்ரூட்டைத் தவிர்க்கவேண்டும்.



### சிறுநீர் கழிக்காமை...

சிறுநீரகத்தின் முக்கிய வேலையே, இரத்தத்தில் உள்ள நச்சுக்களை நீக்கி சுத்தப்படுத்துவதுதான். இதனால், இரத்தத்தில் உள்ள அதிகப்படியான நீர், நச்சுடன் சேர்த்து பிரிக்கப்பட்டு சிறுநீர்ப்பைக்கு அனுப்பப்படும். 150 மி.லீ அளவு சேர்ந்ததும் சிறுநீர் கழிக்கவேண்டும் என்ற உணர்வுவரும். அப்போது, உடனடியாக ரெஸ்ட் ரூம் சென்றுவிடவேண்டும். இல்லையெனில், சிறுநீர்ப்பை தன் கொள்ளளவைத் தாண்டி சேமித்துவைக்கவேண்டிய நிலைக்கு ஆளாகும். இதனால் சிறுநீரகத்தின் செயல்திறன் பாதிக்கப்படும். மேலும், பக்ரீரியா வளர்வதற்கும் வழிவகுக்கும்.

### சரியான உணவு

ஜங்க்.ஃபுட், ஃபாஸ்ட் ஃபுட், எண்ணெயில் பொரித்த உணவு உட்கொள்ளும்போது, அது சிறுநீரகத்தையும் பாதிக்கிறது. சிறுநீரகத்துக்குப் பலம் தரும் மீன், கீரை, பூண்டு போன்ற உணவுகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். தர்ப்பூசணி, ஒரேஞ்சு மற்றும் எலுமிச்சை எடுத்துக்கொள்ளலாம்.

### மது மற்றும் சிகரெட்

மது அருந்துவதால் உடலில் உள்ள எலக்ட்ரோலெட் சமநிலை பாதிக்கப்படுகிறது. இதை சரிப்படுத்த ஹோர்மோன் சுரப்பு நிகழ்கிறது. சிகரெட் புகைக்கும்போது சிறுநீரகத்துக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைகிறது. இதன்காரணமாக சிறுநீரகத்தின் செயல் திறன் பாதிக்கப்படுகின்றன. மேலும், சிறுநீரகப் புற்றுநோய், சிறுநீர்ப்பை புற்றுநோய்க்கான வாய்ப்பும் அதிகரிக்கிறது.

### தினசரி உடற்பயிற்சி

உடல் பருமனாக உள்ளவர்களுக்கு சிறுநீரகப் பாதிப்பு வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்கின்றன ஆய்வுகள். உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க, தினசரி உடற்பயிற்சி ஆரோக்கியமான உணவுப் பழக்கம், தேவையான அளவு புரதச்சத்து எடுத்துக்கொள்ளுதல் போன்றவை உடலைப் புத்துணர்வாக வைத்திருப்பதுடன் சிறுநீரகத்தைப் பாதுகாக்கும்.

### சுயமருத்துவம்

டாக்டர் பரிந்துரையின்றி மாத்திரைகள் அல்லது மருந்து டோஸ் அளவு அதிகரித்தாலும், சிறுநீரகத்தின் வேலைப் பளுவும் அதிகரித்துவிடும். எந்த ஒரு மருந்தாக இருந்தாலும் டாக்டர் பரிந்துரையின்றி எடுக்கக் கூடாது. பொதுவாக வலி நிவாரணிகளை மருத்துவர் பரிந்துரையின்றி எடுத்துக் கொள்கின்றனர். ஒருநாள் எடுத்துக்கொள்வதில் தவறு இல்லை.

ஆனால், அதையே தொடர்ந்து எடுத்துக்கொள்ளும்போது அது சிறுநீரகத்தைப் பாதிக்கும். சில மாற்று மருத்துவ மருந்துகளில் உலோகம் அதிகளவில் இருக்கும். இதுவும் சிறுநீரக செயற்பாட்டைப் பாதிக்கலாம். அதேபோல விற்றமின், தாதுப்புக்கள் மாத்திரையாக இருந்தாலும் சரி, இயற்கை மூலிகை மருந்தாக இருந்தாலும் சரி டாக்டர் பரிந்துரையின் பேரில் மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும். இவற்றைத் தவிர்ப்பதன்மூலம் சிறுநீரகத்தைப் பாதுகாக்கலாம்.

### நோய் பரப்பும் கிருமி

நோய் பரப்பும் கிருமி சிறுநீர்ப்பாதை வழியாக சிறுநீர்ப்பையை அடைந்து, வளர்ச்சி அடைவதால் சிறுநீர்ப்பாதை நோய்த்தொற்று ஏற்படுகிறது. இது ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது. சுகாதாரமற்ற அல்லது பொதுக் கழிப்பறைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். சிறுநீர் கழித்தபிறகு, நன்றாக நீர்விட்டு சுத்தம் செய்யவேண்டும். அதிக அளவு தண்ணீர் குடிப்பதன்மூலம் இந்தத் தொற்றைத் தவிர்க்கலாம்.

---

## எல்லோரும் அறிந்திருக்க வேண்டிய மருத்துவக் குறிப்புகள்

### எச்சரிக்கை

94. வெற்றிலை - பாக்கு, புகையிலை, சீவல், புகை போன்றவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவோரின் வாயானது, உட்புறம் மென்மைத் தன்மையை இழந்து, நார்நாராகக் காட்சியளிக்கும். இது, வாய் புற்றுநோய்க்கு வழிவகுக்கும்.

95. இரவு உணவுக்குப் பிறகு நீண்ட நேரம் வெறும் வயிறாக இருப்பதால், அசிட் நிறைய சுரந்திருக்கும். எனவே, காலையில் கட்டாயம் சாப்பிடவேண்டும். சரிவர சாப்பிடாமல் பழகிவிட்டால், அது வயிற்றில் புற்றுநோயை உருவாக்கும்.

96. இரவு வெகுநேரம் வேலை செய்யவேண்டியிருந்தால், மறுநாள் காலையில் வாக்கிங், ஜாகிங் போகக்கூடாது. அது, பயனளிப்பதற்குப் பதிலாகக் கெடுதலையே தரும்.

97. அலேர்ஜி - ஆஸ்துமா போன்ற நோய்கள் இருந்தால், செல்லப்பிராணிகளைக் கொஞ்சம் தள்ளியே வையுங்கள். அலேர்ஜி நோய்க்கு, கரப்பான் பூச்சி ஒரு முக்கிய காரணம்.

98. நாற்பது வயதுக்குமேல் தொடர்ச்சியாக அல்சர் தொந்தரவு இருந்தால் என்டோஸ்கோபி பரிசோதனை செய்துவிடுவது நல்லது. ஃபாஸ்ட்ஃபுட் வகையறாக்களைத் தொடவே கூடாது.

99. சுகாதாரமற்ற முறையில் பச்சை குத்துதல் மற்றவர்களுடைய நோயை நமக்கு வாங்கித் தந்துவிடும்

1. குழந்தைகளின் காலில் முள் குத்தி இருந்தால் எடுக்கும்போது வலி தெரியாமல் இருக்க முதலில் சிறிது ஐஸில் வைத்து மரத்துப் போகச் செய்துவிட்டு பிறகு எடுக்கவும்.

2. மாம்பழத்தில் இனிப்புச்சத்து அதிகம். எனவே நீரழிவு நோயாளிகள் மாம்பழம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

3. பப்பாளிப் பழத்தைத் தேனில் தொட்டு உண்டால் தாய்ப்பால் நன்றாகச் சுரக்கும். இதை தாய்ப்பால் கொடுப்பவர்கள் தினமும் உண்ணலாம்.

4. தொடர்ந்து முட்டைக்கோசை சாப்பிடுபவர்களுக்கு நெஞ்சுவலி வராது. அடிக்கடி தடிமல் வராது.

5. நாய்க்கடிக்கு சுண்டைக்காய் செடி இலையையும் உப்பையும் அரைத்து கடிவாயில் பூசவும்.

6. நெல்லிக்காயைத் தேனில் ஊறவைத்துச் சாப்பிடுவது இளமையோடிருக்க உதவுகிறது.

7. வாழைத்தண்டு, முள்ளங்கி, வெள்ளரி ஆகியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் அதிக உடல் எடை குறைந்து சீரான உடல் எடை வரும்.

8. வசம்பை எடுத்துச் சுட்டுக் கரியாக்கி அதனுடன் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய் ஆகிய மூன்றையும் கலந்து அடி வயிற்றில் பூச வயிற்றுப் பொருமல் நீங்கும்.

9. சுக்கு, மிளகு இரண்டையும் ஒரு கரண்டி பால்விட்டு அரைத்து பொட்டிலும், மூக்கின் மேலும் நெற்றியிலும், தடவினால் தலை வலி மறைந்துபோகும்.

10. மாதுளம் பழத் தோல்களின் உள்பாகத்தை எடுத்து பல் தேய்த்தால் பல்லுக்கும் உறுதி, பல்லும் பளிச்சென்று இருக்கும்.




## விளக்கு மட்டுமா சிவப்பு?

சக்திவேல் பொய் சொல்லவில்லை. அவன் மனைவி அங்கே ஒரு பூமாலைக்கும் வழியின்றிப் பள்ளி கொண்டிருந்தாள். அவள் தலைமாட்டிலே இரண்டு கண்ணும் தெரியாத ஒரு கிழவி அமர்ந்து அவள் தலையைத் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தாள். மூன்று குழந்தைகளும் அலங்கோலமாகத் தூங்கிக்கொண்டிருந்தன.

உள்ளே நுழைந்ததும் மனைவியின் பிணத்தின்மீது விழுந்து அழுதான். “அம்மா ஐயா வந்திருக்கிறார் பாரம்மா! புண்ணியவான் வந்திருக்கிறார் பாரம்மா!” என்று புலம்பினான்.

தன்னை மறந்து வேதநாயகம் அழுதுவிட்டார்.

சரசுவுக்கு உலகமே தலைகீழாக நடப்பதுபோல் தோன்றிற்று. அவளும் அழுதுவிட்டாள்.

‘ஐயா! உங்களை உட்காரச் சொல்ல ஒரு நாற்காலி கூடக் கிடையாது” என்றான் சக்திவேல்.

“பரவாயில்லை” என்று சொன்ன வேதநாயகம் தரையில் உட்கார்ந்தார்.

பிணத்தின் தலைமாட்டிலேயே போய் உட்கார்ந்தாள் சரசு.

சிமிலி விளக்கைக் கொஞ்சம் தூண்டிவிட்டான் சக்திவேல்.

அதுவம் எண்ணெய் இல்லாமல் ‘போகவா வரவா’ என்று கேட்டுக்கொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அக்கம் பக்கத்துக் குடிசைகளில் இருந்தவர்கள் எழுந்து வரத்தொடங்கினார்கள்.

ஒரு குடிசை அருகே கார் வந்து நிற்கிறதென்றால் பக்கத்து வீட்டுக்காரர் களுக்குக் கரிசனை வந்துவிடாதா?

எல்லோருமே ஏழைகளாக இருந்தாலும் ஏழை என்ற அடிப்படையில்கூட ஒற்றுமையில்லாத பூமியல்லவா இது?

“காலையிலேகூட நல்லாயிருந்தாள் சாமி! வயித்தைக் கட்டி வாயைக் கட்டி இந்த புள்ளைகளைக் காப்பாத்திக்கிட்டிருந்தா. என்னமோ அங்காளம்மனுக்குப் பொறுக்கலே” என்றால் ஒருத்தி.

ஒவ்வொருவரும் மிகுந்த அக்கறையோடு பேசக் கண்டு வேதநாயகத்திற்குச் சிரிப்பு வந்தது.

அனுதாபம் எவ்வளவு வார்த்தையளவில் விளையாடுகிறது. அவசரம் என்று வரும்போது உதவி செய்யக் கூடியவர்கள் எத்தனை பேர்?

அவர் பொக்கெட்டிலிருந்து கொஞ்சம் பணத்தை எடுத்தார்.

பொழுது விடியத் தொடங்கிற்று. மூங்கில் புஸ்பங்கள், தேங்காய், கச்சை அனைத்தும் வாங்கிவரச் சொன்னார்.

காலையில் குப்பம் முழுவதும் அந்தக் குடிசை அருகே கூடிவிட்டது. நிறையப் பலகாரங்கள் வாங்கிவரச் சொல்ல அந்தக் குழந்தைகளுக்கு ஊட்டிவிட்டாள் சரசு.

பத்து மணி சுமாருக்கு அந்தச் சடலம் தூக்கப்பட்டது. சக்திவேல் தரையில் விழுந்து கதறி அழுதான்.

குழந்தைகள் கதறி அழுதன.

மரணம் வழக்கமான நிகழ்ச்சிதான்.

ஆனால் அதைப் பற்றி தெரிந்தவர்கள்கூடக் கண்ணீர் என்னும் காணிக்கையோடுதானே வழியனுப்ப வேண்டியிருக்கிறது.

சடலத்தைத் தொடர்ந்து சக்திவேல் போகவில்லை.

“அந்த உடம்புக்கு நெருப்பு வைப்பதை எப்படி ஐயா பார்ப்பேன்”? என்றுசொல்லியபடி முட்டி மோதிக்கொண்டான்.

கொள்ளிவைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட குப்பத்துக்காரர்கள் கூட்டமாக காடு நோக்கிச் சென்றார்கள்.



# ஒருமுறை வழக்கிலே சிக்கிக் கொண்டவன் பிறகு யோக்கியனாக வாழ விரும்பினாலும் முடியாது!

வெறிச்சட்டுக் கிடந்த குடிசைக்குள்ளே, “அம்மா அம்மா!” என்று அழுத குழந்தைகளை அணைத்தவாறு நின்ற சக்திவேலைப் பார்த்த வேதநாயகம் மற்றொன்றையும் பார்க்கத் தவறவில்லை.

அதாவது அந்தக் குடிசையில் மாட்டப்பட்டிருந்த ஒரே படம்.

அது ஹிட்லரின் படம்!

அந்த நேரத்தில் அதற்கு விளக்கம் கேட்க வேதநாயகம் விரும்பவில்லை.

“இனி நீ என்ன செய்யப் போகிறாய்?” என்று கேட்டார்.

“இந்த மூணு பிள்ளைகளையும் அனாதை விடுதியிலே சேர்த்து விட்டிருங்க ஐயா! பிறகு நான் மூட்டை தூக்கியாவது பிழைத்துக் கொள்கின்றேன். பொலிஸ்காரங்க மட்டும் அடிக்கடி பிடிச்சு சந்தேகக் கேஸ் போடாமலிருந்தால் போதும்” என்றான் சக்திவேல்.

அப்போதுதான் வேதநாயகத்திற்கு அந்த விஷயமே ஞாபகம் வந்தது. ஒரு முறை வழக்கிலே சிக்கிக் கொண்டவன் பிறகு யோக்கியனாக வாழ விரும்பினாலும் முடியாது.

சட்டம் அப்படி.

வேறு ஆள் கிடைக்காத போதெல்லாம் அவனைப் பிடிப்பது பொலிஸ் தர்மகர்த்தாக்களின் நித்திய பணி.

சக்திவேலின் பாதுகாப்பற்ற தன்மை வேதநாயகத்திற்குப் புரிந்தது.

“குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு ஏறு காரிலே” என்றார்.

பதில் பேசாமல் குழந்தைகளோடு சக்திவேல் காரில் ஏறி உட்கார்ந்தான்.

“போய்யா! ஐயா கிட்டேயாவது போய், நல்லபடியா பொழைச்சுக்க” என்று பல குப்பத்துவாசிகள் ஆசீர்வாதம் பண்ணி அனுப்பினார்கள்.

காரில் போய்க்கொண்டிருக்கும் போதே வேதநாயகம் சக்திவேலைப் பார்த்து, “எதற்காக உன் குடிசையில் காந்தி படம்கூட இல்லாமல் ஹிட்லர் படம் வைத்திருக்கிறாய்?” என்றார்.

“இந்த நாட்டில் ஒரு ஹிட்லர் பிறந்திருந்தால் நான் திருடனாக ஆகியிருக்கமாட்டேன்” என்றான் சக்திவேல்.

“என்னப்பா உன் தத்துவம்?” என்று சிரித்தார் வேதநாயகம்.

அதற்குமேல் அதைப்பற்றி விவாதிக்க அவர் விரும்பவில்லை.

உரிமைகளால் அவஸ்தைப்பட்டவன் கண்டுபிடிக்கும் மறு எல்லை ஹிட்லராகத்தானே இருக்கமுடியும்?

அவர்கள் வீடு வந்து சேர்ந்த போது ஜெயஸ்ரீ அங்கு காத்துக் கொண்டிருந்தாள்.

### மயங்குகிறாள் ஒரு மாது

‘பொது வாழ்க்கை’ என்று மேற்கொண்டுவிட்டால் அது ஒரு வேதனை நிறைந்த சுமைதான்.

தன்னலமற்ற பொது வாழ்வில் ஆன்மாவுக்கு ஒரு சந்தோஷம் இருக்குமேதவிர, ஆயுட்கால நிம்மதி இருக்காது.

அதையே தொழிலாக நடத்துகிறவர் களுக்கு அது ஒரு நல்ல வியாபாரம்.

அவர்கள் படும் கஷ்டமெல்லாம் ஒரு வியாபாரி விருப்பத்தோடு ஏற்றுக்கொள்ளும் கஷ்டமே தவிர, தியாகத்தால் விளையும் கஷ்டம் அல்ல.

வேதநாயகம் ஒரு இலட்சிய வக்கீல்.

அதன்காரணமாக, சில பொதுச் சுமைகளுக்குத் தன்னைத் தயார் செய்துகொண்டவர். அதனால் இரவு பூராவும் தூங்காமலிருந்தும், அதை ஒரு சங்கடமாக கருதாமல் ஜெயஸ்ரீயைக் கண்டதும் குளித்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே போனார்.

வேறு வேலையில்லாமல் சட்டப் புத்தகங்களைத் துடைத்து வைத்துக் கொண்டிருந்த குமாஸ்தா குப்புசாமி, ஒரு குடும்பமே வந்து இறங்கியிருப்பதை வியப்புடன் கவனித்தார்.

சரசு, சக்திவேலுக்குக் கார் ஷெட்டைக் காட்டி, குழந்தைகளை அங்கேயே இருக்கும்படியும், தோட்டத்தைக் கவனித்துக்கொள்ளும்படியும் தன் வீட்டிலேயே எல்லோரும் சாப்பிட்டுக் கொள்ளும்படியும் கூறினாள்.

ஒரு பெரிய கும்பிடு போட்டுக் கொண்டு அதை ஏற்றுக்கொண்டான் சக்திவேல்.

ஜெயஸ்ரீக்குக் கோப்பி கொடுக்கச் சொல்லிவிட்டுத் தானும் குளிப்பதற்காக உள்ளே சென்றாள் சரசு. சோம்பேறித் தனம், தூக்கமின்மை, ஆயாசம், அலுப்பு இவற்றை அடித்து விரட்டுவதற்கு ஒரே மருந்து குளிப்பது.

திருமால் முதலில் குளித்துவிட்டு வந்தார். மகாலெட்சுமி கொஞ்ச நேரத்தில் பின்னாலேயே வந்தாள்.

அந்த ஸ்ரீ தவிக்கும், ஸ்ரீமன் நாராயணனக்கும் முன்னால் ‘திருவாய் மொழி பகர ஜெயஸ்ரீ தயாராக நின்றாள். விட்ட இடத்திலே இருந்து துவங்கினாள் ஜெயஸ்ரீ.

சாவித்திரி அக்காள் இறந்து போய்விட்டாள். எங்கள் குடும்ப வரலாற்றில் தொடர்ச்சியாக மரணம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அதன் கடைசிக் கட்டம்தான் சாவித்திரி அக்காள்.

கிராமத்திலேயே நாங்கள் இருந்திருந்தால், அவளுக்கு இந்தத் துர்மரணம் ஏற்பட்டிருக்காது. உழைக்கவந்தோமா பிழைக்க வந்தோமா, உயிரைவிட வந்தோமா? சமூகத்திலேயே கௌரவமான ஒரு குடும்பம் சந்தி சிரிக்கும் நிலைக்கு ஆளாக்கப்பட்டதை எங்களாலும்தான் தாங்கமுடியவில்லை.

ஆனால் கவரிமான் ஜாதியாகவே வாழ்ந்துவிட்ட சாவித்திரி அக்காளைப் போல் நாங்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லை. முதலில் கலசம் விழுந்தது. பிறகு கோபுரம் விழுந்தது. கட்டடத்துக்குச் செங்கல்களும் ஒவ்வொன்றாக விழுந்தன.

(விளக்கு எரியும்)





# நட்பு

உலகத்திலே உன்னதமான உறவு நட்பு என்பார்கள். உணர்வுடன் சங்கமித்த ஒரு கருப்பொருளே நட்பு. உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் ஓகஸ்ட் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை நட்பு தினமாக கொண்டாடப்பட்டுவருகிறது. இந்த ஆண்டு (2009) ஓகஸ்ட் 2ம் தேதி உலக நட்பு தினமாகும். ஏனைய தினங்களுடன் ஒப்புநோக்கும்போது மனிதவிழுமியங்களில் உணர்வுடன் சம்பந்தப்பட்ட ஒரு தினமாகவே இது காணப்படுகின்றது. இங்கு நட்பு எனும்போது பல பரிமாணங்களை எடுத்துக் கூறலாம்.

இருவருக்கிடையில் அல்லது பலருக்கிடையில் ஏற்படக்கூடிய நட்பு இரு குழுக்களிடையே அல்லது பல குழுக்களுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு சமூகங்களுக்கிடையே அல்லது பல சமூகங்களுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு, இரண்டு நாடுகளுக்கிடையே அல்லது பல நாடுகளுக்கிடையே ஏற்படக்கூடிய நட்பு என்று பல வடிவங்களில் அர்த்தம் கற்பிக்கலாம். ஆனால், பொதுவாக நட்பு தினம் என்று கூறும்போது இருவருக்கிடையே ஏற்படக்கூடிய நட்பின் பரிமாணமே கருத்திற் கொள்ளப்படுகின்றது. இது ஆண் -ஆணிடையே, பெண் - பெண்ணிடையே, ஆண் - பெண்ணிடையே ஏற்படலாம்.

ஒவ்வொரு மனிதருக்கும் அவருடைய வாழ்க்கையில் நம்பகமான ஆலோசகர் தேவைப்படுகிறார். முக்கியமாக நண்பர்கள் தேவைப்படுகிறார்கள். ஒருவருடைய சிந்தனைகளையும், குணங்களையும் பட்டைதீட்ட, உதவி செய்ய அவரை நன்கு உணர்ந்த ஒரு நண்பர் தேவைப்படுகிறார்.

பெற்றோர்கள், மனைவியைவிட நமது துக்கத்திலும், சந்தோஷத்திலும் பங்குகொள்வதில் நண்பர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தாயிடமும், மனைவியிடமும், தந்தையிடம்கூட ஆலோசனை செய்யமுடியாத பல விடயங்களை நண்பர்களுடன் கலந்துரையாடுவதன்மூலம் ஒரு தெளிவை, தீர்வை பெறலாம். சில சந்தர்ப்பங்களில் பிறருடன் மேற்கொள்ளப்படும் நட்பைப் போலவே குடும்ப அங்கத்தவர்களிலேயே நட்பார்த்தமான உறவுகள் ஏற்படுவதுண்டு.

உலகில் உண்மையான நட்புக்கு ஈடு, இணை எதுவும் கிடையாது என பெரியவர்கள் குறிப்பிடுவார்கள். உண்மையான நட்பின்முன் தமது உள்ளக்கிடக்கைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது மனதில் ஏற்படும் அமைதியை அளவிட முடியாது. பிரச்சினைக்குரிய ஒரு விடயத்தை அல்லது தீர்வு காணவேண்டிய விடயத்தை மனதுக்குள் அடக்கி வைத்துக்கொள்வதனால் விமோசனம் கிடைக்கப்போவதில்லை. மாறாக மனஅழுத்தங்களும், விபரீதங்களுமே ஏற்பட இடமுண்டு. உண்மையான நட்புடன் அவற்றைப் பகிர்ந்து கொள்கையில் சில சந்தர்ப்பங்களில் எமக்குக் கிடைக்கும் ஆலோசனைகள் விலைமதிக்க முடியாமல் இருக்கலாம். தற்போதைய வேகமான நவீன காலத்திலும் நட்பினை கௌரவப் படுத்துவதில் பலரும் ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அதேநேரம் சில நட்பினை களங்கப்படுத்தாமலும் இருப்பதில்லை.

சாதி, இனம், மொழி, பால் பாகுபாடின்றி அன்பின் அடையாளமாக கொண்டாடப்பட்டுவரும் இந்த நண்பர்கள் தினத்தில், தலைமுடி நரைத்தாலும் நண்பா உன்னிடம் நான் கொண்ட நட்பு இன்னும் மாறவில்லை என்று உலகெங்கும் உள்ள வயதானவர்கள்கூட இன்றைய தினத்தில் சந்தித்து தங்களது வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

இந்த சந்திப்பின்போது அவர்கள் ஞாபகம்வருதே... நண்பா ஞாபகம் வருதே... பள்ளிக் காலங்களில் நாம் ஒன்றாகச்சேர்ந்து சுற்றியது. ஆற்றங்கரையில் சிறு வயதில் கல் எறிந்து விளையாடியது. மாந்தோப்பில் மாங்காய் பறித்து தின்ற சுவையான நாட்கள் என்று பல பழைய நினைவுகளை நினைத்துப் பார்த்து பூரிப்படைவார்கள்.

நண்பர்கள் தினத்தில்... நேரில் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் நண்பர்கள் ஒருவரை ஒருவர் கட்டித்தழுவி தங்களது அன்பை பரிமாறிக்கொள்கின்றனர். தொலை தூரத்தில் இருப்பவர்களுக்கு செல்பேசி வழியாக குறுந்தகவல் அனுப்பியும் (எஸ்.எம்.எஸ்.), கணினிவழியாக மின்னஞ்சல் அனுப்பியும் தங்கள் நட்பை பலப்படுத்திக் கொள்கின்றனர்.

துன்பம்வரும் வேளையில் கடவுளை நினைக்கிறோம். அடுத்ததாக உதவிகேட்க நல்ல நண்பர்களைப் பற்றிய எண்ணம் நம்மையும் அறியாமல் நம்மனதில் உதயமாகிறது. பரஸ்பரம் அன்பை மட்டுமல்லாமல் துன்பத்தையும் பகிர்ந்துகொள்ளும் இந்த ஆற்றல் நட்புக்கு மட்டுமே உரிய சிறப்பாகிறது. ஆனால் பலர் நட்பின் மகத்மீகத்தை சரிவர உணர்ந்துகொள்வதில்லை.

இதுநாள் வரையிலும், நண்பர்களே எனக்கு இல்லை என்று யாரும் கூறிவிட முடியாது. நட்பு, தோழமை என்பது இருவர் இடையேயோ பலரிடமோ ஏற்படும் ஒரு உறவாகும். வயது, மொழி, இனம், பால், நாடு என எந்த எல்லைகளும் இன்றி, புரிந்துகொள்ளுதலையும், அனுசரித்தலையுமே அடிப்படையாகக் கொண்டது. நண்பர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வார்கள். நண்பர்கள் ஒருவருக்கு ஒருவர் உண்மையாக நடந்துகொள்வார்கள். இன்பத்திலும் துன்பத்திலும் தானாகவே முன்வந்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

திருக்குறளில் திருவள்ளுவர் நட்பு பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.
நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.
நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.
நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு.
புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்.
முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.
அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.
உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.
நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.
இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு.

ஒரு நாணயத்தில் இரண்டு பக்கங்களைப்போல நண்பர்களையும் இரண்டு கோணங்களில் அவதானிக்கலாம். அவர்கள் நல்ல நண்பர்கள், கெட்ட நண்பர்கள்.

நல்ல நண்பன் தனது நட்பை முதலில் எவ்வித பேரம் பேசலும் இன்றி, முன்நிபந்தனையின்றி விரிந்த மனப்பான்மையுடன் கருமித்தனம் ஏதுமின்றி அள்ளி வழங்கத் தயாராக இருப்பான். நல்ல நண்பன் தனது தரத்தினை பெறுமதியாகக் கருதுகிறான். தனது சிந்தனை ஆன்மா, பண்பாடு, நடத்தை, ஒழுக்கம் விழுமியம் என்பனவற்றை வெளிப்படையாகவே வழங்குகின்றான். தனது ஆளுமைப் பண்புகள் இதர மனிதர்களால் மாசுபடுவதை இம்மியளவும் விரும்புவதில்லை. எனவே, அவன் தனது நட்பை நாடிவரும் மனிதர்களை நோக்கிமுன் நிபந்தனை, உறுதிப்பிரமாணம் என்பனவற்றின் அடிப்படையில் நகருகிறான். ஆகவே உறுதிப் பிரமாணத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொள்ளப் படும் நட்பே நித்தியமானதும், நிரந்தரமானதுமாகும்.

மனித வாழ்வில் நட்பு என்பது விசித்திரமானது. விந்தையானது. அதனால் ஏற்படும் பாதிப்பு ஆழமானது. பலரது வாழ்வில் பெரும் திருப்பங்களுக்குக் காரணமாகவும் அது அமைகிறது. பெற்றோர்களது அன்பு உற்றார் உறவினர்களது பாசம், நேசம் சாதிக்க முடியாததை நட்பு சாதித்துவிடுகிறது. பெற்றோர்களுக்குப் பிள்ளைகளை சீரதிருத்த முடியாத கையாலாகாத நிலை உருவாகும் பட்சத்தில் அவர்கள் பிள்ளைகளின் நண்பர்களை அணுகி தமது பிள்ளைகளை சீரதிருத்த முனைவது அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிதர்சன நிகழ்வுகளாகும்.

பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கு இடையில் உள்ள உறவில் மரியாதைப் பண்பின் காரணமாக அல்லது வெறுப்பின் காரணமாக விரிசல் அதிகரிக்க, அதிகரிக்க நண்பர்களுடனான நட்பு படிமுறை ரீதியாக அதிகரிப்பதையும் அவதானிக்கிறோம். நட்பு என்பது ஒரே அச்சில் வார்க்கப்பட்ட பொருள்களைப்போல அமைந்த விடுகிறது. அதாவது ஒரு நண்பனின் மறுஉருவமாக அடுத்தவன் மாறி விடுகின்றான். சிந்தனைப் பாங்கு பண்பாடு, நடத்தை, நடை, உடை, பாவனை போன்ற சகல விவகாரங்களிலும் ஒருவன் தனது நண்பனை பிரதிபலித்துக் காட்டுகிறான்.

அநேகமாக நட்புக்கொள்ளல் என்பது இத்தகைய அறிவுப் பின்னணியும் இன்றியே ஆரம்பமாகிறது. கல்வி வாழ்க்கையிலும் வியாபார கொடுக்கல் வாங்கல், தொழில் சார்ந்த நடவடிக்கைகளின் போது உருவாகும் நட்பு குறுகிய நலன்களைப் பின்னணியாகக் கொண்டு உருவாகுகிறது. அறிவுத் தேடல் தொழில் பணம், பெண் போன்றவை இலக்காகக் கொள்ளப் படுகின்றன. அவ்வாறு பொழுது போக்கு பின்னணியை கொண்டு எழுகின்ற நட்பு சமூக தீமைகளுக்கு வழிவகுக்கின்றன. புகைத்தல், போதைப்பொருள் பாவனை, பாலியல் வல்லுறவு, கொலை, கொள்ளை, நாசகார நடவடிக்கைகள் முதலானவை கெட்ட நண்பன் எனும் நுழைவாயில்மூலம் குடும்பத்தில் நல்லவனாக இருந்த மனிதனிடமும் குடிகொள்கிறான். பின்னர் பெற்றோரும் மற்றோரும் கன்னத்தில் விரல்வைத்து நெற்றி சுருக்கி ஆச்சரியத்துடனும், கவலையோடும் வினா எழுப்புகின்ற அளவுக்கு அந்தப்பிள்ளை கெட்டுப் போய் விடுவான்.

எனவே பெற்றோர் பிள்ளைகளுக்கு நல்ல நட்பைப் பெற்றுத்தர முயற்சிப்பதோடு துரதிர்ஷ்டவசமாக பிள்ளைகளுக்கிடையில் கெட்ட நட்பு அமைந்துவிட்டால் மாற்று பரிகாரமாக நல்ல நட்பை பெற்றுக் கொடுக்க முனையவேண்டும்.

இவ்விடத்தில் வைரமுத்துவின் கவியொன்று என் ஞாபகத்திற்கு வருகின்றது.

நட்பு என்பது, சூரியன்போல்...
எல்லா நாளும் பூரணமாய் இருக்கும்
நட்பு என்பது, கடல் அலை போல்...
என்றும் ஓயாமல் அலைந்து வரும்
நட்பு என்பது, அக்கினி போல்...
எல்லா மாசுகளையும் அழித்து விடும்
நட்பு என்பது, தண்ணீர் போல்...
எதில் ஊற்றினாலும் ஒரே மட்டமாய் இருக்கும்
நட்பு என்பது, நிலம் போல்...
எல்லாவற்றையும் பொறுமையாய் தாங்கிக் கொள்ளும்
நட்பு என்பது, காற்றைப் போல்..
எல்லா இடத்திலும் நிறைந்து இருக்கும்

நட்பு உன்னதமானது. அதனை மதித்து அதனை கௌரவித்து இத்தினத்தில் எமது நண்பர்களுக்கு எமது நட்பினை பகிர்ந்து கொள்வோம்.

# அண்டவெளியில் பூமிக்கோர் அண்ணன்

பூமியைப் போன்ற கிரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி தொடர்ந்து கொண்டே இருக்கும்

மிகப்பெரிய டெலஸ்கோப்பே ஒரு செயற்கைக்கோளாக மாற்றப்பட்டு வானில் மிக உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. அதுதான் கெப்ளர் விண்ணோக்கி செயற்கைக்கோள். வானில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நட்சத்திரங்களை ஆராய்ந்து இரண்டு ஆயிரத்துக்கும் அதிகமான கிரகங்களை அது கண்டுபிடித்துள்ளது. ஆனால் அவற்றில் நான்கு மட்டுமே சம்பந்தப்பட்ட நட்சத்திரத்திலிருந்து உகந்த தொலை வில் உள்ளன. இந்த நான்கில் எதுவுமே பூமியின் அளவில் இல்லை. மூன்று கிரகங்கள் பூமியைவிட சற்று பெரியவை. நான்காவது கிரகம் பூமியைவிட மிகவும் பெரியது. இவற்றில் ஒரு கிரகத்தைச் சில நிபுணர்கள் "பூமியின் அண்ணன்" என்று வர்ணிக்கின்றனர். ஆனாலும் இந்த கிரகத்துக்குப் பூமிக்கு உரிய இலட்சணங்கள் எதுவும் இல்லை.

இல்லை, ஆனால் இருக்கலாம்.


வேறுவிதமாகச் சொல்வதானால் இதுவரை பூமி மாதிரியான கிரகம் ஒன்றுகூடக் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், இதனால் மனம்தளரவேண்டிய அவசியம் இல்லை என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அண்டவெளியில் பூமியைப்போன்ற கிரகம் உள்ளதா என்று நாம் கடந்த சில ஆண்டுகளாகத்தான் தீவிரமாகத் தேடிவருகிறோம். பறக்கும் டெலஸ்கோப்பான கெப்ளர், அண்டவெளியின் குறிப்பிட்ட சிறு பகுதியில் மட்டும்தான் தேடிவருகிறது. ஆகவே, இதுவரை நடந்துள்ள தேடலை வைத்து பூமி மாதிரியான கிரகம் அண்டவெளியில் வேறு எங்கும் இல்லை என்ற முடிவுக்கு நாம் வந்துவிட முடியாது என்று விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

வானில் உள்ள நட்சத்திரங்களை மொத்தம் 88 ராசிகளாகப் பிரித்துள்ளனர். கெப்ளர் டெலஸ்கோப் அவற்றில் மூன்று ராசிகளில் மட்டும்தான் கிரகங்களைத் தேடிவருகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

### கெப்ளரின் சொத்து

கெப்ளரின் தேட்டம் பற்றிய புள்ளி விவரங்களைக் கூறுவதானால் 2016 பிப்ரவரி முதல் வார நிலவரப்படி 2,056 கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை வெவ்வேறு நட்சத்திரங்களைச் சுற்றி வருபவை. இவை தவிர, சுமார் 4,700 உத்தேசமான கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அனேகமாக கிரகங்களாக இருக்கலாம் என்ற கருத்தில் உத்தேச கிரகங்கள் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. கெப்ளர் அனுப்பிய தகவல்களை ஆராயும் விஞ்ஞானிகள் இந்த உத்தேச கிரகங்கள் பற்றிய விவரங்களை நுணுக்கமாக ஆராய்ந்துவருகின்றனர்.

கெப்ளர் தனது ஆராய்ச்சிகளின் போது நிறைய தகவல்களைச் சேகரித்தது. குறிப்பிட்ட கிரகம் அது சுற்றி வருகின்ற நட்சத்திரத்திலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது, அந்த கிரகத்தின் சுற்றுப் பாதை, அந்த நட்சத்திரத்தை ஒரு தடவை சுற்றி முடிக்க எவ்வளவு நாட்கள் ஆகின்றன, கிரகத்தின் நிறை, அதன் குறுக்களவு, அதன் அடர்த்தி, நட்சத்திரத்தின் நிறை, அந்த நட்சத்திரத்தின் வெளிப்புற வெப்பம் இப்படியாக பல தகவல்களைச் சேகரித்து வந்துள்ளது.



ஆகவே கெப்ளர் செயற்கைக்கோளின் ஆயுட்காலமே முடிந்தாலும் அது சேகரித்து அனுப்பியுள்ள தகவல்களை நிபுணர்கள் பகுத்தாராயும்போது பல புதிய கண்டுபிடிப்புகள் வெளியாகலாம்.

இங்கு ஒன்றைக் குறிப்பிடவேண்டும். அண்டவெளியில் எங்கோ இருக்கின்ற நட்சத்திரங்களுக்குக் கிரகங்கள் உள்ளனவா என்று தேடும் பணியை கெப்ளர்தான் முதன் முதலில் ஆரம்பித்து வைத்ததாகக் கூறமுடியாது. 25 ஆண்டுகளுக்கு முன்பே இது தொடங்கி விட்டது. தரையில் அமைந்த டெலஸ்கோப்புகள்தான் இதைத் தொடங்கி வைத்தன. 1995இல் முதலாவது கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. அது வியாழன் அளவுக்குப் பெரியது.

பின்னர் 2006இல் ஐரோப்பிய விண்வெளி அமைப்பு "காரோட்" எனும் செயற்கைக்கோளைச் செலுத்தியது. அது சில ஆண்டுக்காலம் செயற்பட்டு 32 கிரகங்களைக் கண்டுபிடித்தது. இவற்றில் எதுவும் பூமி மாதிரியானது அல்ல. எல்லாமே வியாழனை விடப் பெரியவை.

### மறைக்கும் தந்திரம்

இதற்கிடையே பூமியிலிருந்தே டெலஸ்கோப்புகள் மூலம் கிரகங்களைக் கண்டுபிடிப்பதில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதில் இத்தனை காலமாக இருந்துவந்துள்ள பெரிய பிரச்சினை நட்சத்திரத்தின் பிரகாசம். ஒரு மேஜையில் பிரகாசமான பெட்ரோமாக்ஸ் விளக்கு வைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே யாராவது நின்றால் அந்த விளக்கின் பிரகாசம்காரணமாக அவரது முகம் தெளிவாகத் தெரியாது அல்லவா? நாம் ஒரு கையால் பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தை மறைத்துக் கொண்டு பார்த்தால் அருகே நிற்பவரின் முகம் தெளிவாகத் தெரியும்.

அதுபோலத்தான், நட்சத்திரத்தை மறைத்து அருகே இருக்கின்ற கிரகம் மட்டும் தெரிகின்ற வகையிலான உத்தி இப்போது கையாளப்படுகிறது. தென் அமெரிக்காவில் சிலி நாட்டில் உள்ள ஜெமினி சவுத் டெலஸ்கோப்பில் இவ்வித ஏற்பாடு பின்பற்றப்படுகிறது. ஆனாலும் இப்போதைக்கு இது வியாழன் போன்ற பெரிய கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கு மட்டுமே பயன்படுவதாக உள்ளது. பூமி மாதிரி சிறிய கிரகங்களையும் இவ்வித முறையில் கண்டுபிடிப்பதற்கான வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

காரோட் செயற்கைக்கோளின் பணி ஏற்கெனவே முடிந்து விட்டது. கெப்ளரின் பணியும் விரைவில் முடிந்துவிடும் என்ற நிலைதான். அதனால், அண்டவெளியில் உள்ள கிரகங்களை, குறிப்பாக பூமி மாதிரி கிரகங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சி நின்று போய்விடும் என்று நினைக்கக்கூடாது.

### அதிகரிக்கும் செயற்கைக் கோள்கள்

கெப்ளர் குறிப்பாக, மங்கலான, அத்துடன் மிகத் தொலைவில் உள்ள நட்சத்திரங்களை ஆராய்ந்துவந்துள்ளது. அடுத்ததாக "டெஸ்" எனப்படும் ஒரு பறக்கும் டெலஸ்கோப் 2017இல் உயரே செலுத்தப்பட இருக்கிறது. இது ஒப்பீட்டளவில் பக்கத்தில் உள்ள, அத்துடன் பிரகாசமான நட்சத்திரங்களை ஆராய்ந்து அவற்றைச் சுற்றும் கிரகங்களைத் தேடும். வானில் குறிப்பிட்ட சிறிய பகுதியைத்தான் கெப்ளர் ஆராய்ந்தது. "டெஸ்" டெலஸ்கோப் வானம் முழுவதையும் ஆராய்வதாக இருக்கும். அது முதல் இரண்டு ஆண்டுகளில் ஆயிரம் கிரகங்களைக் கண்டுபிடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, "எக்சோபிளானட்சாட்" என்னும் ஒரு செயற்கைக்கோளும் செலுத்தப்பட இருக்கிறது. இந்த செயற்கைக்கோள் உயரே சென்றதும் அதிலிருந்து பல நுண் செயற்கைக்கோள்கள் வெளிப்படும். இவை ஒவ்வொன்றும் தனித்தனியே சென்று நமது சூரியனைப் போன்ற நட்சத்திரங்களை ஆராயும்.

### செவ்வாய் பயணம்

ஐரோப்பிய விண்வெளி அமைப்பு 30 மீட்டர் குறுக்களவுள்ள பிரதிபலிப்புக் கண்ணாடியுடன்கூடிய டெலஸ்கோப்பைத் தயாரித்துள்ளது. தென்னமெரிக்காவில் அடகாமா பாலைவனத்தில் அதை நிறுவ இருக்கிறது. 20 ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கக்கூடிய பூமி மாதிரி கிரகங்களையும் இதன்மூலம் கண்டுபிடித்துவிடலாம். இது 2020ஆம் ஆண்டுவாக்கில் செயல்படத் தொடங்கும். இவ்விதமாக பூமி மாதிரிக் கிரகங்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து நீடிக்கும்.

எதிர்காலத்தில் பூமி மாதிரி ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். நம்மால் ஒரு விண்கலம்மூலம் அந்த கிரகத்துக்குச் சென்று பார்க்கமுடியுமா என்ற கேள்வி எழுகிறது. இப்போது நம்மிடம் உள்ள தொழில்நுட்பத்தை வைத்துச் சொல்வதானால் அதற்கு வாய்ப்பு இல்லை. சொல்லப்போனால் நமது பக்கத்து வீடு என்று சொல்லத்தக்க செவ்வாய் கிரகத்துக்குப் போய்விட்டு வருவதற்கே இன்னும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

விஞ்ஞானிகள் எப்போதும் இது சாத்தியமே இல்லை என்று எதையுமே ஒதுக்கித் தள்ளுவதில்லை. பல ஆண்டுக்காலம் பிடிக்கக்கூடிய நீண்ட அண்டவெளிப் பயணம் செய்வதில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஏற்கெனவே ஆய்வுகள் நடந்துவருகின்றன.

# 2016 தவளை போல் தாவும் ஆண்டு

2016-ம் ஆண்டுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அது 366 நாட்களைக் கொண்ட லீப் ஆண்டு என்பதுதான். இதோ அடுத்த வாரம் லீப் நாளும் (பெப். 29) வரப்போகிறது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறைவரும் இந்த விநோத நாள் குறித்து. மேலும் சில சுவையான தகவல்கள்:

* ஜுலியஸ் சீசர் காலம்வரை ஓர் ஆண்டுக்கு 355 நாட்கள்தான் இருந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 22 நாட்களைக் கொண்ட கூடுதல் மாதம் ஒன்று சேர்க்கப்பட்டு வந்தது. தன்னுடைய அரசவை வானியலாளர் சோசிஜீன்ஸிடம் நாட்காட்டிகளை எளிமைப்படுத்தும்படி கி.மு. 45இல் ஜுலியஸ் சீசர் ஆணையிட்டார். அப்போதுதான் 365 நாள் கொண்ட நாட்காட்டியையும், நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுதலாக ஒரு நாளை சேர்க்கும் நடைமுறையையும் சோசிஜீன்ஸ் அறிமுகப்படுத்தினார். அந்த கூடுதல் நாள் பெப்ரவரி மாதம் சேர்க்கப்பட்டதற்குக் காரணம், ரோமானிய நாட்காட்டியில் பெப்ரவரி கடைசி மாதமாக இருந்ததுதான்.

* "லீப் ஆண்டு" என்ற பெயரை அறிமுகப்படுத்தியவர் நாட்காட்டி முறையை மேம்படுத்திய போப் கிரிகோரி. அவர் மேம்படுத்திய நாட்காட்டியே இன்றைக்கு உலகில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது.



* பெப் 29-ம் திகதியின் சின்னம் தவளை. தவளை தாவுவதைப் போல, லீப் நாளும் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை விட்டுவிட்டு வருவதால் இப்படி.

* லீப் நாளான பெப்ரவரி 29-ம் திகதி பிறந்தவர்கள் ஆங்கிலத்தில் லீப்லிங் (leapling) அல்லது லீப்பர் (leaper) என்று அழைக்கப்படுகிறார்கள்.

* ஒவ்வொரு நாளையும் போலவே, லீப் நாளின்போது சராசரியாக 3.5 இலட்சம் பேர் புதிதாகப் பிறக்கிறார்கள்.

* டாஸ்மேனியாவின் எட்டாவது அதிபர் மில்ன் வில்சன் 1812-ம் லீப் நாளில் பிறந்து, 1880-ம் லீப் நாளில் இறந்தார்.

* ஹொங்காங்கில் லீப் நாளில் பிறந்தவர்களின் அதிகாரபூர்வ பிறந்த நாள் மார்ச் 1, அதேநேரம் நியூஸிலாந்தில் பெப்ரவரி 28.

* லீப் நாளில் (பிப். 29) பிறந்த பிரபலங்கள்: இந்திய முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் (1896), இந்திய நடனக்கலை முன்னோடியான ருக்மணி தேவி அருண்டேல் (1904) உள்ளிட்டோர்.

* அமெரிக்காவில் ஒவ்வொரு லீப் ஆண்டிலும் அமெரிக்க அதிபர் தேர்தல் நடக்கும். ஒலிம்பிக் போட்டிகளும் லீப் ஆண்டுகளை ஒட்டியே வரும்.

* பெப். 29 அரிய நோய்கள் நாளாகவும் அனுசரிக்கப்படுகிறது.

# வாரமொரு காரம்

# மெய்மைகளைத் தேட முற்படுவோம் அதுவே நிரந்தரமான அழகு!

**அரைகுறை ஆங்கிலமும் தனிப்பட்ட வங்கிச் சொற்பதங்களையும் பாவித்து சினிமாப் பாணியில்கூட இல்லாத அபிநயங்களையெல்லாம் முகத்தில் கொண்டுவந்து விளக்கம் கொடுத்து முடிந்தவுடன் ஆரம்பத்தில் கேட்ட கேள்வியையே மீண்டும் கேட்டார் பாவம் அந்த வயோதிபர். அருகில் இருந்த எனக்கும் பொறுக்கவில்லை நானும் கேட்டேன் இது தேவை தானா பிள்ளை என்று.**

சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தை கற்றுத் தெளிவுற்றிருக்க வேண்டியது கட்டாய தேவை ஆகும். இதை மறுப்பதற்கு இடமில்லை. ஆனால் அதை தேவையற்ற இடங்களில் பிரயோகித்து, அதன்மூலம் தற்பெருமை அடையநினைப்பதும், விளக்கமற்ற தொடர்பாடல்களை வளர்ப்பதும் வேதனைக்குரியது.

அண்மையில் தனியார் வங்கியொன்றில் நடந்த விளக்கமற்ற உரையாடல் தொடர்பாக இந்த வாரம் சிந்திப்பது பயன்தருமென எண்ணுகின்றேன். விவசாயத்தை தனது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுவரும் பாமர வயோதிபர் ஒருவர் தனது வங்கிக்கணக்கு மாற்றம் தொடர்பாக பலவீனப்பட்ட ஓர் இளம்பெண் உத்தியோகத்தரிடம் விளக்கம் கேட்டபோது, அரைகுறை ஆங்கிலமும் தனிப்பட்ட வங்கிச் சொற்பதங்களையும் பாவித்து சினிமாப்பாணியில்கூட இல்லாத அபிநயங்களையெல்லாம் முகத்தில் கொண்டுவந்து விளக்கம் கொடுத்து முடிந்தவுடன் ஆரம்பத்தில் கேட்ட கேள்வியையே மீண்டும் கேட்டார் பாவம் அந்த வயோதிபர். அருகில் இருந்த எனக்கும் பொறுக்கவில்லை. நானும் கேட்டேன் இது தேவைதானா பிள்ளை என்று.

ஆங்கிலம் தெரியாத ஒருவரிற்கு தான் விளக்கம் கொடுக்கின்றேன் என்பதைத் தெரிந்தும்கூட எதற்காக இந்தப் பித்தலாட்டங்கள்...? பொது நிறுவனத்தில் வங்கிக்கணக்குடன் தொடர்புடைய விடயமல்லவா...! பூரணவிளக்கம் வாடிக்கையாளர்களிற்குக் கிடைக்கவேண்டியது கட்டாய தேவையல்லவா...! அதை பூரணத்துவத்துடன் கொடுக்க வேண்டியது உங்களின் கடமையல்லவா!

தமது தராதரம் தமக்கே போதாது என எண்ணும் பெண்கள் தம்மை பிறர் முன் மேல் நிலைப்படுத்த மேற்கொள்ளப்படும் ஒரு அர்த்தமற்ற நவநாகரிகப் பண்பாடாக இன்று இது மேலோங்கியுள்ளது. இதனை உங்கள் தனிப்பட்ட தேவைக்காக எதிர்பாலாரோடு காட்டுங்கள். அதற்கு உங்களிற்கு தனிப்பட்ட சுதந்திரமுண்டு. ஆனால் இது பொது நிறுவனம் தொடர்பாடல் சிக்கல்களால் விபரீதங்கள் ஏற்படும் நிதியோடு தொடர்புடைய விடயம். இதில் ஏன் உங்களிற்கு இந்த விபரீத ஆசை என்பதுதான் இதன் சாரம்.

பொதுவாக இன்றுள்ள அர்த்தமற்ற பண்பாட்டு மாற்றங்களால் மனிதன் சுயத்தை இழந்து கொண்டுவருகின்றான். எதிலும் நடிப்பு நயனம் என பொய்மைகள் நிறைந்த பூகம்பமாக இந்தப் பூமி மாறிவருகின்றது. உண்மையாக பெண்ணழகு என்பது எது?, உண்மையாக ஆணழகு என்பது எது எனும் எண்ணக்கருக்களெல்லாம் மாறிவருகின்றது. இதற்கு தீர்வுதேட நாம் முனைந்தால் அதற்குப் பயன் கிடைக்காது. காரணம் அதுதான் நாகரிகமென எண்ணும் இளம் சந்ததிகள் அதிகரித்துவிட்டனர். ஆனால் பொது நிறுவனங்களில் இந்த நாகரிகம் தலைவிரித்து ஆடுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

வாடிக்கையாளர்களும் ஊழியர்களும் தமிழர்களாக இருக்கும் போது முக்கியமான கட்டங்களில் எதற்காக ஆங்கிலக் கலப்படம் என்பதுதான் இன்றுள்ள வினாவாகும். ஆங்கில அறிவை விருத்தி செய்ய பிரயோகப்பாடு இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதினால் சினோகபூர்வமான தொடர்பாடல்களில் அதை வைத்துக்கொள்ளுங்கள். ஒரு விடயத்திற்கு விளக்கங்கள் கொடுக்கும்போது வேண்டாம் இந்த வீண்வம்பு. பொதுவாக ஆண்களில் நடிப்பு, நயனங்கள் கொண்ட தொடர்பாடல்கள் காணப்படுவது குறைவு. இதனால் இவர்களின் விளக்கங்கள் இலகுவாக இருப்பதை காணமுடிகின்றது. பெண்களில் இது அதிகம் உண்டு என்பதை அனைவரும் அனுபவத்தில் கண்டிருப்பர். இலட்சுமிகரமான அன்பும் பாசமும்கொண்ட பெண்மையை கேவலப்படுத்தும் இன்றைய நவநாகரிகப் பண்பாடுகளை பெரும்பாலும் தவிர்க்கப் பழகுங்கள் சாதாரணமாகப் பேசுவதுதான் பெண்மைக்கு அழகு. பெருமைக்கு வரைவிலக்கணம் தேடுங்கள். நாலு விழிகள் உங்களைப் பார்த்து நாட்டியமாடுகின்றது என்பதற்காக தற்பெருமை கொள்ளாதீர்கள். கேவலப்படுத்தும் ஆண்களின் காமப்பார்வையால் உங்கள் பெண்மை கர்வமடைந்தால் அது காட்டி மருத்துவம் பெறவேண்டிய மனநோயாளிகள் என்பதுதான் அர்த்தம். இம்மனநோயாளிகளைப் பொது நிறுவனங்களில் வைத்திருக்க முடியாது.

முகாமையாளர்கள் இது தொடர்பாக சற்று சிந்தித்து இதற்கொரு தீர்வு நிலையினைக் கொண்டுவர வேண்டும். வாடிக்கையாளர்களின் தரம்பார்த்து தொடர்பாடல்களை மேற்கொள்ள உங்கள் ஊழியர்களிற்கு வழிப்படுத்தவேண்டும். இதில் என்ன கேவலம் எனில் அவ்வாறு அந்தப் பாமர வயோதிபரிற்கு அரை குறை ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்த பெண் ஊழியருடன் முழுமையான ஆங்கிலத்தில் கதைக்க முயன்றபோது அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பது தெரியவந்தது. சற்று சிந்தித்துப்பாருங்கள். எத்தகைய கேவலமான போலி கௌரவங்களை எமது சமூகம் சுமந்து வாழ்கின்றது என்று. வேண்டாம் இது... மெய்மைகளைத் தேட முற்படுவோம். அதுவே நிரந்தரமான அழகு.

# இந்தவாரம் உங்கள் பலன்

(25.02.2016 தொடக்கம் 02.03.2016 வரை)

## மேடம்

தொழில் மேன்மையடையும். வரவு கூடும். ஆயினும் தினமும் பல்வேறு விதமான பிரச்சினைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதி நெருக்கடிகள் குறைய தொடங்கும். மற்றவர்களின் பொறாமையால் இடைஞ்சல்களை சமாளிக்கவேண்டியிருக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். பிரச்னைகளை துணிவுடன் எதிர்கொண்டு சமாளிப்பீர்கள். மாணவர்களின் கல்வி நிலை சிறக்கும். வாகன ஆதாயம் உண்டு. பிள்ளைகளின் வேகமான செயற்பாடுகளால் செலவுகள் கூடும். போட்டியாளர்களிடம் மிகுந்த கவனம் நல்லது. உடல் நிலைக்கு முக்கியத்துவம் தரவேண்டிய நேரம் இது. வாழ்க்கைத்துணையின் வார்த்தைகளுக்கு மதிப்பளித்து செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டாகும். உடன் பணிபுரிபவர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உள்ளது.

## இடபம்

அதிக உழைப்பை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலை உண்டாகும். உங்கள் உண்மையான உழைப்பின் பெருமையை மற்றவர்கள் உணர்வார்கள். உணவில் கவனம் உடல்நிலைக்கு நல்லது. தகவல் தொடர்பு சாதனங்களால் நன்மை உண்டாகும். மாணவர்களின் கல்வித்தரம் உயரும். வாகனங்கள், பிரயாணங்களால் நன்மை உண்டாகும். அலைச்சல் அதிகரித்தாலும் அதற்கான பலன் உடனுக்குடன் கிடைக்கும். உடல்நிலையில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய நேரம் இது. கௌரவத்திற்காகச் செய்யவேண்டிய ஆடம்பரச்செலவுகள் அதிகரிக்கக்கூடும். தொலைதூரப் பிரயாணங்களின் போது கவனம் அவசியம். உங்களது உண்மையான உழைப்பும், அர்ப்பணிப்பும் தொழில்ரீதியாக மிகுந்த நற்பெயரையும், புகழையும் பெற்றுத் தரும்.

## மிதுனம்

தன்னம்பிக்கை அதிகரிக்கும். எந்த ஒரு விஷயத்திலும் விட்டுக்கொடுத்து சென்றால் காரிய சாதனை உண்டு. செயல்திறன் கூடும். நண்பர்களின் துணையுடன் எடுத்த காரியத்தில் சிறப்பாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். நேரத்தை உணர்ந்து நேரடியாக இறங்காமல் மற்றவர்களை திறம்பட இயக்கி நினைத்த காரியத்தை நடத்தி முடிப்பீர்கள். ஆடம்பரச்செலவுகள் அதிகரிக்கும். சாதுரியமான பேச்சுத்திறனால் இக்கட்டான சூழலை சமாளிப்பீர்கள். மனஉறுதி அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். தகவல் தொடர்பு சாதனங்கள் மிகுந்த ஆதாயம் தரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண அதிகம் உழைக்கவேண்டி இருக்கும்.

## கடகம்

உண்மையான உழைப்பிற்கான பலனை அனுபவிப்பீர்கள். வெளிநாட்டு வேலைக்காக காத்திருப்போருக்கு சாதகமான நேரம் இது. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நெடுநாளைய கற்பனைகளும், கனவுகளும் சிந்தனையில் இடம்பிடிக்கும். ரம்மியமான சூழலை அனுபவிக்க உள்ளீர்கள். குடும்பச் சலசலப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். பொருளாதார நிலை திருப்தி தரும். கூடுதல் தைரியத்தால் சிறப்பாக செயல்படுவீர்கள். உடன்பிறந்தோருக்கு உதவும் சூழல் உருவாகும். தகவல் தொடர்பு சாதனங்கள் ஆதாயம் தரும். மாணவர்களின் அறிவுத்திறன் கூடும். வீட்டில் மாற்றங்கள் செய்வீர்கள். நெடு நாளைய ஆசைகள் நிறைவேறும் காலம் இது.

## சிங்கம்

உங்கள் முயற்சிகளில் வெற்றிபெற மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டியிருக்கும். அடுத்தவர்களுடன் இணைந்து செய்யும் கூட்டுமுயற்சிகள் வெற்றி பெறும். கூடுதல் செலவுகள் ஏற்படும். பொருளாதார நிலை தேக்கமடையும். கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவதில் தடைகள் உண்டாகும் என்பதால் கவனத்துடன் பேசுவது நல்லது. தகவல்தொடர்பு சாதனங்களால் சாதக பாதகங்கள் இருக்கும். பிள்ளைகளால் கூடுதல் செலவுகள் ஏற்படும். அந்நியப் பெண்களிடம் கூடுதல் எச்சரிக்கையுடன் பழகுவது நல்லது. கடன்சுமைகள் குறையும். போட்டியாளர்கள் வலுவிழந்து போவார்கள். நண்பர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் வெற்றிபெறும். புதிய நண்பர்களுடனான சந்திப்பு புதிய விஷயங்களைக் கற்றுத் தரும்.

## கன்னி

நினைத்ததை உடனடியாக செய்து முடிக்கும் எண்ணம் உருவாகும். எதிலும் நிதானித்து செயற்பட்டால் முழுமையான வெற்றி கிடைக்கும். தொடர்ந்து பொருளாதார நிலை உயர்ந்துவரும். சேமிப்புகள் உயரும் நேரம் என்பதால் சாதகமாக பயன்படுத்தி கொள்வது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் கடுமையை தவிர்த்து கவனத்துடன் பேசவேண்டியது அவசியம். புதிய நண்பர்கள் சேருவார்கள். தொலைதொடர்பு சாதனங்களால் இழப்புகள் ஏற்படும். வாகன பயணத்தின்போது கூடுதல் கவனம் தேவை. வீட்டை விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். உடல்நிலையை பராமரிக்க அதிக அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது.

## துலாம்

மனமகிழ்ச்சி கூடும். எல்லோருடனும் இனிமையாகப் பழகுவீர்கள். செய்யும் உதவிக்கு பிரதிபலனை எதிர்பார்ப்பீர்கள். வரவிற்கு குறைவிருக்காது. குடும்ப பொருளாதார நிலை உயரும். குடும்ப உறுப்பினர்களின் விருப்பத்தினை நிறைவேற்ற முயலுவீர்கள். மனதில் உறுதிகூடும். தொலைதொடர்பு சாதனங்கள் தகுந்த நேரத்தில் கைகொடுக்கும். உடன்பிறந்தோர் உதவிகரமாய் செயற்படுவார்கள். வீட்டில் மாற்றங்கள் செய்வீர்கள். வாகனங்களை புதிதாக மாற்ற விரும்புவோர்க்கு ஏற்று காலமாக அமையும். உறவினர்களுடனான சந்திப்பு குடும்பத்தில் கலகலப்பான சூழலை உருவாக்கும். பிள்ளைகளின் வேகமான செயல்கள் பெருமைகொள்ளத்தக்க வகையில் அமையும். அவசரப்பட்டு பேசினால் அவப்பெயர் வரும்.

## விருச்சிகம்

எந்த ஒரு விஷயத்திலும் நேரடியாக இறங்காது அடுத்தவர்களின் துணையுடன் செயல்பட்டு வெற்றி காணவேண்டி இருக்கும். பொருளாதார நிலை திருப்தி தரும். ஏதோ ஒரு வழியில் வரவு தொடர்ந்து இருக்கும். சேமிப்பை உயர்த்தி கொள்ளும் முயற்சி தடைப்படும். குடும்பத்தில் சலசலப்பு தோன்றி மறையும். உடன்பிறந்தோரால் மனவருத்தம் ஏற்படும். வாகனச்செலவுகள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண அதிகம் உழைக்க வேண்டியிருக்கும். பிள்ளைகளின் வாழ்வில் சுபநிகழ்வுகளும், முன்னேற்றமும் உண்டாகும். உங்களால் செய்ய இயலாத காரியங்களை அவரது துணையுடன் செய்து முடிப்பீர்கள். நண்பர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றக்கூடும். அநாவசியச் செலவுகள் அதிகரித்து மனவருத்தம் ஏற்படும்.

## தனுசு

எந்த விஷயத்திலும் அலைச்சல் அதிகரிக்கும். குடும்பப் பெரியோர்கள், சாதுக்கள், சந்நியாசிகள்மீது அளவு கடந்த மரியாதை உண்டாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பொருளாதார நிலை உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்பத்தினரின் விருப்பங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து செயல்படுவீர்கள். பேச்சில் வெளிப்படும் மகிழ்ச்சி மனஓட்டத்தை வெளிப்படுத்தும். மாணவர்களின் கல்வி நிலை மிகச்சிறப்பாக இருக்கும். வாகனங்கள் லாபம் தரும். பிள்ளைகளின் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். கௌரவம், புகழ் உயரும். உடல்நிலை சீராக இருந்துவரும். முன்பின் தெரியாத நபர்களுக்கு பொருளுதவி செய்வதைத் தவிர்க்கவேண்டியது அவசியம்.

## மகரம்

கௌரவத்திற்காக சில விஷயங்களை உடனடியாக செய்து முடித்துவிட வேண்டிய கட்டாயம் தோன்றும். குடும்பப் பொருளாதார நிலை, மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற போராட்டம் இருக்கும். மனதில் இனம்புரியாத பயம் தோன்றும். செல்போன் போன்ற தொலைதொடர்பு சாதனங்களின் கோளாறினாலும், அஞ்சல் வழி தொடர்புகளில் தாமதமும் இழப்புகளை ஏற்படுத்தும். மாணவர்களின் கல்விநிலை நன்றாக இருக்கும். உடல்நிலையில் உணரும் மாற்றங்களுக்கு உடனுக்குடன் மருத்துவ பரிசோதனை செய்துகொள்வது நல்லது. உங்கள் செயல்களுக்கு எதிர்பாராத செலவுகள் உண்டானாலும் வீட்டில் புதிய பொருட்கள் சேரும்.

## கும்பம்

வேகத்தை விடுத்து நிதானித்து பணியாற்றுவீர்கள். அதிக சிரமமின்றி எளிதாகக் காரியமாற்றுவீர்கள். திட்டமிட்டுச் செயற்பட்டால் காரிய வெற்றி சாத்தியமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குடும்ப உறுப்பினர்களின் குறிப்பறிந்து அவர்களின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சீரான பணவரவு தொடரும். அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்வீர்கள். புதிய முயற்சிகள் விரயம் தரும். சூடான பொருட்களை கையாளும் போது அதிக கவனம் தேவை. நண்பர்களோடு கலந்துரையாடுவதில் மகிழ்ச்சி காண்பீர்கள். உறவினர்களின் சந்திப்பு சந்தோஷம் தரும். வீட்டை அழகுபடுத்த அலங்காரப் பொருட்கள் வாங்குவீர்கள். பிள்ளைகளின் திறமையைக் கண்டு வியப்பீர்கள்.

## மீனம்

எதையும் யோசிக்காது உடனடியாக செயல்பட நினைப்பீர்கள். இதனால் ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பண விவகாரங்களில் கூடுதல் கவனம் தேவை. செலவுகள் அதிகரித்து சிரமத்திற்கு ஆளானாலும், ஏதேனும் ஒரு வழியில் பொருள்வரவு தொடரும். முந்தைய சேமிப்பும் உங்களைக் காக்கும். அதிகரிக்கும் செலவுகளால் மனவருத்தம் ஏற்படும். குடும்பத்தில் லேசான சலசலப்புகள் தோன்றும். உடன்பிறந்தோரால் கலகம் உண்டாகும் வாய்ப்பு உண்டு. தகவல் தொடர்பு சாதனங்களை நம்பி பணிசெய்ய இயலாத சூழல் உருவாகும். மாணவர்களின் கல்வித்தரம் உயரும். பிள்ளைகளின் வாழ்க்கை தரம் உயரும். கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

## ஒய்யாரம்



நாற்காலிகளில் மனிதர்களைப் போல கையைத் தலைக்கு வைத்து ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் பச்சை நிற பல்லிகள் கலிபோர்னியாவில் வசிக்கும் ஹென்றி லிஸார்ட், பல்லிகள் மீது மிகவும் அன்பும் ஆர்வமும் உடையவர். தன்வீட்டிலேயே பல்லிகள், பச்சோந்திகளை வளர்த்துவருகிறார். அவரது ஹில்ஸ் க.ஃபே விடுதியில் இரண்டு பச்சைப் பல்லிகளை வைத்திருக்கிறார். சிறிய நாற்காலிகளில் இரண்டும் மனிதர்களைப் போலவே அமர்ந்திருக்கின்றன. நாற்காலிகளைச் சுழற்றினாலும் இரண்டும் கண்டுகொள்ளவில்லை. கையைத் தலைக்கு அடியில் வைத்து ஒய்யாரமாக அமர்ந்திருக்கின்றன. விடுதிக்கு வருகிற வாடிக்கையாளர்கள் இவற்றைச் சுற்றிச் சுற்றி புகைப்படங்கள் எடுக்கிறார்கள். மனிதர்களின் சத்தத்துக்கோ, கெமராக்களின் வெளிச்சத்துக்கோ இவை சிறிதும் பயப்படவில்லை. எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்கின்றன.



## பென்சில் முனையில் சிற்பங்கள்








சசிக்குமார், பொறுமைமிக்க ஆட்டோ ஓட்டுநர். தன்னுடைய ஆட்டோவில் சவாரிசெய்யும் பயணிகள், எவ்வளவு நேரம் காத்திருக்க வைத்தாலும் பொறுமையாக காத்திருந்து அழைத்துச்செல்கிறார். இதற்காக கூடுதல் கட்டணம் கேட்பதில்லை.

அதற்கு மாறாக ஒரு மணிநேரத்திற்கு ஒரு பென்சில் விதம் காத்திருக்கும் நேரத்திற்கு ஏற்ப பென்சில்களை கட்டணமாக வாங்கி கொள்கிறார். "அட...! பென்சிலை வாங்கி என்ன செய்வீர்கள்" என்ற ஆட்டோ பயணிகளின் கேள்விக்கு இவரது கைவண்ணத்தில் உருவாகும் பென்சில் சிற்பங்கள் பதிலளிக்கின்றன. ஆம், சசிக்குமார் கலை ஆர்வமிக்க ஆட்டோ ஓட்டுநர். கையில் கிடைக்கும் பென்சில் முனைகளில், ஆச்சரியப்படவைக்கும் சிற்பங்களை வடித்தெடுக்கிறார். அவை நுண் கலை சிற்பங்கள் என்றாலும் உருபெருக்கியை பயன்படுத்தாமல் வெறும் கண்களாலே பார்த்து... பார்த்து... சிற்பத்தை செதுக்குகிறார். "சாதனை-களை நெருங்க, உத்வேகம் மட்டும்போதும்" என்பதை இவரது சிற்பங்கள் வெளிப்படுகின்றன.







## மனிதாபிமானம்

கால் ஒன்றை இழந்த ஒரு கிளிக்கு முப்பரிமாண அச்சிடல் (3டி பிரிண்டிங்) முறையில் தயாரிக்கப்பட்ட செயற்கை கால் பிரித்தானிய மருத்துவர்களால் பொருத்தப்பட்டுள்ளது. ஒக்ஸ்போர்ட்ஷயர் பிராந்தியத்தைச் சேர்ந்த இக்கிளிக்கு மிஸ்டர் பென் எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த கிளியை வளர்த்துவந்த ஒருவர் அதை தொடர்ந்து பராமரிக்க முடியாதிருப்பதாகக் கூறி, பறவைகள் பாதுகாப்பு நிலையமொன்றில் அதை ஒப்படைத்தார்.

அதையடுத்து 3 டி பிரிண்டிங் முறையிலான செயற்கைக் கால் தயாரிக்கப்பட்டு, அண்மையில் சத்திரசிகிச்சைமூலம் மேற்படி கால் இக்கிளிக்கு பொருத்தப்பட்டுள்ளது. பிரிட்டனில் பறவையொன்றுக்கு இத்தகைய சத்திரசிகிச்சை செய்யப்பட்டமை இதுவே முதல் தடவை எனக் கருதப்படுகிறது.

## முயற்சி



இங்கிலாந்தில் உள்ள பிரிஸ்டல் நகரில் தனியார் பள்ளி ஒன்று உள்ளது. இதற்கு நிக் கார்டனர்(வயது 38) என்பவர் தலைமை ஆசிரியராக இருந்துவருகிறார். இந்த பள்ளியில்தான் பெர்னி என்ற 2 வயது நாய் ஒன்று குழந்தைகளுடன் எப்போதும் வலம் வந்துகொண்டு இருக்கிறது. பள்ளி குழந்தைகளுக்கு பாடம் கற்கும் தன்னம்பிக்கையை வளர்க்கும்வகையில் நிக் கார்டனர் ஒரு அதிசயத்தக்க முயற்சியில் ஈடுபட்டார். அதாவது, பெர்னி என்ற அந்த நாயிற்கு வார்த்தைகளை படித்து புரிந்துகொண்டு அது செயற்பட பயிற்சி அளித்துவந்துள்ளார். இதன் பலனாக, தற்போது 4 வார்த்தைகளை படித்து புரிந்துகொண்டு, அதன்படி பெர்னி செயற்பட்டு பள்ளி குழந்தைகளை வியப்பில் ஆழ்த்திவருகிறது. உதாரணமாக, எந்த ஒலியும் எழுப்பாமலும், கைகளால் சைகைகளை காட்டாமலும் காகிதத்தில் 'Sit(தரையில் அமர்) என்ற ஆங்கில வார்த்தையை காட்டினால், அதனை பார்த்துவிட்டு அந்த நாய் தரையில் அமரும். 'Down' என்ற வார்த்தையை காட்டினால், உடனே தரையில் படுக்கும். 'Roll Over' என்ற வார்த்தையை காட்டினால், தரையில் படுத்து உருளும். இறுதியாக, 'Spin Around' என்ற வார்த்தையை காட்டினால், அந்த நாய் அதே இடத்தில் சுற்றி சுற்றி வரும்.



இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி.டி என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் பெப்ரவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.